Not for sale

மார்ச் - ஏப்ரல் 2004

தமிழாக்கம்

# The Herald

## of Christ's Kingdom



## பஸ்கா

கடைசி இராபோஜனம் • பதினோராவது வாதை, பதினோராவது அற்புதம்

பஸ்கா புதுப்பிக்கப்படுதல் • எசேக்கியாவின் பஸ்கா

இது ஒரு பயங்கரமான காரியம் • யோர்தானை கடந்து செல்லுதல்

## MAR - APRIL 2004

# கடைசி இராப்போஜனம்

"அவர் பாத்திரத்தை எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி: நீங்கள் இதைவாங்கி உங்களுக்குள்ளே பங்கிட்டுக் கொள்ளுங்கள்." லூக்கா 22:17

நீசான் 14-ஆம் தேதியின் இரவின் துவக்கமாகமாறின அந்த சாயங்காலம், நாம் வியாழக்கிழமை என்று அழைக்கப்பட்ட அந்த நாளிலே நம்முடைய ஆண்டவர் அவருடைய சீஷர்களோடுகூட அந்தக் கடைசி சாயங்காலத்தில் நினைவுகூருதலை ஏற்படுத்தினார் என்று மத்தேயு, மாற்கு மற்றும் லூக்கா மீண்டும் மீண்டும் பதிவு செய்திருக்கிறார்கள். யோவானும் இதே சாயங்காலத்தைக்குறித்துப் பேசுகிறார். ஆனால் மற்ற சுவிசேஷங்களைக் காட்டிலும் அவர் தன்னுடைய சுவிசேஷத்தைத் தாமதமாக எழுதியதினிமித்தம் நினைவுகூருதலின் ஏற்பாடுகளை மற்றவர்கள் போதியளவுக்கு எழுதியிருந்ததினால் யோவான் இக்காரியங்களைத் தவிர்த்து மற்ற முக்கியமான சம்பவங்களை மட்டுமே குறிப்பிடுகிறார். எடுத்துக்காட்டாக, நம்முடைய ஆண்டவர் சீஷர்களின் கால்களைக் கழுவினதைக்குறித்து, தாழ்மையுள்ள பணி என்ற பாடத்தை நமக்கு யோவான் மட்டுமே குறிப்பிடுகிறார்.

முதலில் சுவிசேஷத்தை எழுதியவர் மத்தேயு. அவர் விரிவாகவும், அனைத்துக் காரியங்களை உள்ளடக்கி மிக விரிவாக அனுபவங்களை, வெவ்வேறு சந்தர்ப்பங்களில் நடந்தவைகளைத் தலைப்பின் கீழ் ஒழுங்குச் செய்தார். இவைகள் நம்முடைய ஆண்டவரின் ஊழியத்தைச் சில பொதுகருத்துக்களைப் புரிந்துகொள்வதற்கும், அறிந்துகொள்வதற்கும் உதவியாக இருக்கிறது. ஆனால் இது எப்பொழுதும் சம்பவங்களைத் துல்லியமான விவரங்களை வேறுபடுத்திக் காட்டுவதில்லை.

பேதுருவிடம் கற்றுக்கொண்ட மாற்கு, அவருடைய வார்த்தைகளைச் சுவிசேஷமாகப் பதிவு செய்தார். இவரே இரண்டாவதாகச் சுவிசேஷத்தை எழுதினவர். இவர் மத்தேயு சுவிசேஷத்தை வழியாகப் பின்பற்றி இருக்கக்கூடும். இந்த இரண்டு சுவிசேஷங்களிலும் காணப்படும் கருத்துக்களிலுள்ள அதிகப்பட்சமான ஒற்றுமையே இதை விளக்குகிறது. ஒரு மறு பதிப்பாசிரியர் தனக்கு முன் கொடுத்திட்ட பதிவுகளைத் துப்புரவான குறிப்புகளாகச் சுருக்குவதுபோல் மாற்கு தன்னுடைய சுவிசேஷத்தைச் சுருக்கினார். எடுத்துக்காட்டாக, இயேசு அத்திமரத்தைச் சபித்தவுடன் மறுநாள் காலை அது பட்டுப்போனதைக் கண்டு சீஷர்கள் ஆச்சரியப்பட்டார்கள் என்று மாற்கு குறிப்பிடுகிறார் (மாற்கு 11:20, 21; மத்தேயு 21:19, 20 வசனங்களோடு ஒப்பிட்டு காண்க). எருசலேமுக்குள் இயேசு பவனி வந்த நாளைத் தொடர்ந்து காசுக்காரர்களை ஆலயத்திலிருந்து விரட்டி, ஆலயத்தைப் பார்வையிட்டார். இந்தச் செயல் கோபத்தின் தூண்டுதலாக இராமல் தன்னுடைய கடமையை நிறைவேற்றினார் என்பதை மாற்கு குறிப்பிடுகிறார். (மாற்கு 11:11-15; மத்தேயு 21:10-12).

பவுலோடுகூட இருந்த லூக்கா மூன்றாவது சுவிசேஷத்தின் எழுத்தாளர். அவருடைய கருத்துக்களைத் தொடர்ந்துவரும் வரிசையில் ஒழுங்குச் செய்ய தீர்மானித்தார் (லூக்கா 1:3). இதில் மத்தேயு மற்றும் மாற்கில் காணப்படாத வரிசையான விவரங்கள் மற்றும் எண்கள் தெளிவாகக் கொடுக்கப்பட்டுள்ளது. கடைசி இராபோஜனத்தின் விவரத்தைக்குறித்து நாம் காணும்போது, "வேளைவந்தபோது, அவரும் அவருடனேகூடப் பன்னிரண்டு அப்போஸ்தலரும் பந்தி இருந்தார்கள்" (லூக்கா 22:14). மகிமையிலுள்ள ஜெயம் பெற்ற பரிசுத்தவான்கள் ஒருமித்துக் கொண்டாடுவதை அடையாளமாக 16-ஆம் வசனத்தில் குறிப்பிடுகிறார். "தேவனுடைய ராஜ்யத்திலே இது நிறைவேறுமளவும் நான் இனி இதைப் புசிப்பதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்." அப்பத்தைக் குறிப்பிடுவதற்கு முன்னதாக இயேசு பாத்திரத்தை அறிமுகப்படுத்தினதை 17-ஆம் வசனம் கோடிட்டுக் காட்டுகிறது. இக்காரியம் மத்தேயு மற்றும் மாற்கின் பதிவுகளிலிருந்து வேறுபடுகிறது. முதலாம் பாத்திரம் பரிமாறப்படுவதை இவர்கள் பதிவு செய்யாமல் இரண்டாவது முறை வந்த பாத்திரத்தை முதலில் பதிவு செய்திருக்கிறார்கள்.

மாலை நேர அனுசரிப்பை இந்தப் பாத்திரம் துவக்கி வைத்தது. மாலை உணவுக்கு முன் வந்த விருந்தாளிகளுக்கு நாம் பானங்கள் கொடுப்பதுபோல, விருந்தாளிகளுக்கு இப்படிப்பட்ட ஒரு பாத்திரத்தைக் கொடுப்பது வழக்கமாக இருந்தது. இயேசு அதைத் தம்முடைய சீஷர்களுக்குக் கொடுத்து, உங்களுக்குள்ளே அதைப் பங்கிட்டுக்கொள்ளுங்கள் என்று கூறி, தொடர்ந்து வரக்கூடிய இராஜ்யத்தில் மிகுந்த மகிழ்ச்சியோடு இந்தப் பழரசத்தைப் புசிக்கும் வரையில் இந்த இரசத்தைப் புசிப்பதில்லை என்று விவரித்தார்.

நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாய் இருக்கிறதல்லவா? (1 கொரிந்தியர் 10:16). 17-ஆம் வசனத்தில் பவுல் அப்பத்திற்கு முன்னதாக பாத்திரத்தைக்குறிப்பிடுவதைக் கவனிக்க வேண்டும். இரா விருந்துக்கு முன் ஒரு பாத்திரம் பரிமாறப்பட்டிருந்தது. மற்றும் அவர்கள் இரா விருந்தைத் துவங்கின பின்பு மற்றொரு பாத்திரம் பரிமாறப்பட்டது. பிந்தி கொடுக்கப்பட்ட பாத்திரத்தைத் தொடர்ந்து அப்பத்தின் அடையாளம் கொடுக்கப்பட்டது. ஆனால் இந்த முதல் பாத்திரம் போஜனத்திற்கு முன்பாகக் கொடுக்கப்பட்டது.

அடுத்த அதிகாரத்தில் பவுல், முதலில் அப்பத்தையும், அதற்குப் பின் பாத்திரத்தையும் குறிப்பிடுகிறார். "போஜனம்பண்ணினபின்பு, அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் எடுத்து: இந்தப் பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது; நீங்கள் இதைப் பானம்பண்ணும்போதெல்லாம் என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார்." (1 கொரிந்தியர் 11:25). கிறிஸ்துவின் இரத்தத்தின் பொருள் இரண்டு பாத்திரத்திற்கும் உரியதாக இருந்தபோதிலும் இது அந்தப் பாத்திரத்தைக் குறிப்பிடவில்லை. நினைவுகூருதலின் அடையாளங்களை இயேசு ஏற்படுத்தினபோது, மத்தேயு மற்றும் மாற்கு குறிப்பிட்ட பாத்திரம் இதுவே. மேலும், "போஜனம்பண்ணினபின்பு அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் கொடுத்து: இந்தப் பாத்திரம் உங்களுக்காகச் சிந்தப்படுகிற என்னுடைய இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது" (லூக்கா 22:20) என்று லூக்கா இந்தப் பாத்திரத்தைக் குறிப்பிடுகிறார்.

### நினைவுகூருதலின் ஏற்பாடு

நினைவுகூருதலின் ஏற்பாட்டை லூக்கா 22:19 சரியாகத் துவங்குகிறது. அவர்கள் மாலை உணவை உண்ணும்போது இவைகள் சம்பவித்தது என்று மத்தேயு 26:26 கூறுகிறது. "அவர்கள் போஜனம்பண்ணுகையில், இயேசு அப்பத்தை எடுத்து, ஆசீர்வதித்து, அதைப் பிட்டு, சீஷர்களுக்குக் கொடுத்து: நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கிறது என்றார்" (மத்தேயு 26:26). லூக்கா முழுமையாக வெளிப்படுத்தாவிட்டாலும் அந்த அடையாளங்களின் பொருளைக் குறிப்பிடுகிறார். "போஜனம்பண்ணினபின்பு அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் கொடுத்து: இந்தப் பாத்திரம் உங்களுக்காகச் சிந்தப்படுகிற என்னுடைய இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது என்றார்" (லூக்கா 22:20). "சிந்தப்படுகிற" என்ற வார்த்தை மற்ற திருத்திய மொழிபெயர்ப்புகளில், "ஊற்றப்பட்டது" (poured out) என்று வாசிக்கலாம். இந்த வார்த்தைப் பொருத்தமான அடையாளமாகக் காணப்படுகிறது.

இந்த இரண்டு அடையாளங்களான அப்பம் மற்றும் ரசம் - சரீரம் மற்றும் இரத்தம் - நம்முடைய சார்பில் இயேசுவின் முழுமையானப் பலியை அடையாளப்படுத்துகிறது. "நீங்கள் மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" (யோவான் 6:53). இந்த அடையாளங்களின் அர்த்தத்தை ஒருமுறை நாம் புரிந்துகொண்டால் மகிழ்ச்சியோடு அற்புதமான பரிசாகிய ஜீவனைப் பெற்றுக்கொள்ளலாம். ஆனால் இந்த வார்த்தைகளைக் கேட்ட யூதர்களுக்கு, இது ஒரு இடறுதலுக்குரிய கல்லாக இருந்தது. ஏனெனில், அந்தக் கல்லின்மேல் ஏறுவதற்கு அவர்களின் விசுவாசம் குறைவுள்ளதாய்க் காணப்பட்டது. அந்தப் பன்னிருவரும் குழப்பமடைந்தாலும் காரியங்கள் தெளிவாக

வெளிப்படும்வரை அவர்களின் விசுவாசம் போதுமானதாக இருந்தது (யோவான் 6:67-69). நம்முடைய சார்பில் இயேசுவின் ஈடுபலி இல்லாமல் நமக்கு எந்தவிதமான ஜீவனுமில்லை, நம்பிக்கையுமில்லை.

## புதிய அடையாளங்கள்

இயேசு புதிய அர்த்தங்களைச் செயல்படுத்துவதற்குப் பரிட்சயமானப் பொருட்களைப் பயன்படுத்தினார். பழைய ஏற்பாட்டில் எடுத்துக்காட்டாக, நிழலில் மெல்கிசெதேக்கு, "அப்பமும் ரசமும்" (ஆதியாகமம் 14:18) ஆபிரகாமுக்குக் கொண்டுவந்தார். அதுபோல, நிஜத்தில் மெல்கிசெதேக்கைவிட பெரியவரான நம்முடைய இயேசு ஆபிரகாமின் சந்ததிக்கு அப்பமும் ரசத்தையும் கொடுத்தார். யோசேப்பு சிறையிலிருக்கும்பொழுது சுயம்பாகி மற்றும் பானபாத்திரக்காரனுடைய சொப்பனங்களுக்கு விளக்கம் அளித்தார். இது நம்முடைய ஆண்டவரின் மரணத்தின் (சிறை) அனுபவத்தைக் காட்டுகிறது (ஆதியாகமம் 40:5). ஒவ்வொரு சொப்பனமும் அடையாளப்படுத்தின "மூன்று நாட்களும்" நம்முடைய ஆண்டவர் கல்லறையிலிருந்த மூன்று நாட்களை அடையாளப்படுத்தும். மூன்றாம் நாளில் சுயம்பாகியின் வாழ்க்கை முடிந்து, அவன் மாம்சம் அழிக்கப்பட்டதுபோல, இயேசுவின் மாம்சமும் இந்த உலகத்தின் ஜீவனுக்காகக் கொடுக்கப்பட்டது. பானபாத்திரக்காரனோ சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டு பார்வோனை மீண்டும் சேவித்ததுபோல, இயேசுவும் ஜீவனோடு எழுப்பப்பட்டு இரட்சிப்பின் ரசத்தை நிர்வாகிக்க பிதாவின் வலது பாரிசத்தில் அமர்ந்தார். இந்தக் கோணத்தில் நாம் காணும்போது இந்த அடையாளங்கள் புதிதல்ல.

ஆனால் பஸ்கா காலங்களில் இந்த அடையாளங்கள் புதிதாகக் காணப்பட்டது. எகிப்தில் முதல் பஸ்காவின்போது, இயேசுவின் சரீரமும் இரத்தமும் வேறுவிதத்தில் காண்பிக்கப்பட்டது. இது அப்பமும் ரசமுமாக இல்லாமல் ஆட்டுக்குட்டியின் மாம்சம் இஸ்ரயேலர்களால் புசிக்கப்பட்டது. அந்த ஆட்டுக்குட்டியின் இரத்தம் நிலைக்கால்களிலும் மேற்சட்டங்களிலும் தெளிக்கப்பட்டது. பழங்காலத்து சடங்குகளில் (வழிபாடு முறைகளில்) புளிப்பில்லா அப்பம் இடம் பெற்றது. ஆனால் அவை நம்முடைய ஆண்டவரை அடையாளப்படுத்தவில்லை. நிழலான பஸ்காவில் புளிப்பில்லா அப்பமும், கசப்பான கீரைகளும் என்று பவுலும் இதே பாத்திரத்தைக் குறிப்பிட்டார். கர்த்தருடைய பாத்திரம் என்று பவுல் கூறுவதை இங்குக் காணலாம். நிழலான பஸ்காவில் கொடுக்கப்பட்ட புளிப்பில்லா அப்பம் மற்றும் கீரைகள், நிஜமான பஸ்கா ஆடாகிய இயேசுவை நாம் புசிப்பதற்கு ஏற்ற சூழ்நிலைகளையும் சந்தர்ப்பங்களையும் அடையாளப்படுத்துகிறது. கசப்பான கீரைகள், ஆட்டுக்குட்டியானவரிடம் நம்மை இழுத்துச் செல்லக்கூடிய கசப்பான வாழ்வின் அனுபவங்களை அடையாளப் படுத்துகிறது. புளிப்பில்லா அப்பம், பழைய புளித்த மாவாகிய பொல்லாப்பு மற்றும் துர்க்குணத்தை அகற்றி துப்புரவான நிலையைத் தக்க வைத்துக்கொள்வதை அடையாளப்படுத்துகிறது (1 கொரிந்தியர் 5:7, 8). நிழலான பஸ்காவின் திராட்சரசம் எங்கும் குறிப்பிடப்படுவதில்லை.

ஆனால் நம்முடைய ஆண்டவரின் இறுதி இராப்போஜனத்தில், மேஜையின்மேல் இரத்தம் வைக்கப்படவில்லை. தேவைப்பட்டதினால் இயேசு வேறொரு அடையாளத்தைப் பயன்படுத்த வேண்டியதாய் இருந்தது. ஆகவே நமக்காகச் சிந்தப்படுகிற அவருடைய இரத்தத்தை அடையாளப்படுத்தும்படி அவர் திராட்சரசத்தை வைத்தார். "பஸ்காவின் பொருட்கள்; நிழல் மற்றும் நிஜம்" என்ற தலைப்பிலுள்ள கருத்துக்களைக் காணும்போது, மேஜையின்மேல் ஆட்டுக்குட்டி காணப்படவில்லை. ஆகவே, இயேசு தம்முடைய சரீரத்தை அடையாளப்படுத்துவதற்கு அப்பத்தைப் பயன்படுத்தினார்.

## காட்டிக்கொடுத்தவன்

இயேசு புதிய அடையாளங்களாகிய அப்பத்தையும் இரசத்தையும் குறித்து, யோவான் 6-ஆம் அதிகாரத்தில் பேசும்பொழுது, சீஷர்கள் மத்தியில் ஒரு நம்பிக்கைத் துரோகி இருப்பதாகக் குறிப்பிட்டார். "இயேசு அவர்களை நோக்கி: பன்னிருவராகிய உங்களை நான் தெரிந்துகொள்ளவில்லையா? உங்களுக்குள்ளும் ஒருவன் பிசாசாயிருக்கிறான் என்றார்"

(யோவான் 6:70). இயேசு தம்முடைய கடைசி இராபோஜனத்தின்போது, இந்த அடையாளங்களை இந்த நினைவுகூருதலின் அனுசரிப்பாக அவர் பயன்படுத்தினபோதும் அந்தத் துரோகி அவரோடே இருந்தான். "இதோ, என்னைக் காட்டிக்கொடுக்கிறவனுடைய கை என்னுடனேகூடப் பந்தியிலிருக்கிறது" (லூக்கா 22:21).

இந்த ஒரு பக்திக்குரிய நேரத்தில் ஒரு எதிரிடையான, போட்டி மனப்பான்மையுள்ள ஆவி மீண்டும் எழும்பியது. இயேசு அந்தத் துரோகியைப்பற்றிக்குறிப்பிட்டதினால் அங்குள்ளவர்களில் சிலர் எரிச்சல் உண்டாகும்படி ஒருவருக்காருவர் அவர்களின் உத்தமத்தைக்குறித்து கண்டனம் தெரிவிக்கும் வகையில், மற்றவர்களைவிட தங்களை மேலானவர்களாக நினைத்துக்கொள்ளுவதற்கு ஏதுவாகிறது. "அன்றியும் தங்களில் எவன் பெரியவனாயிருப்பான் என்று அவர்களுக்குள்ளே வாக்குவாதம் உண்டாயிற்று" (வசனம் 24). இயேசு அவர்களின் சிந்தையைக்குறித்து கண்டனம் தெரிவித்து, முதன்மையாக இருக்க விரும்புவோர் அனைவருக்கும் ஊழியக்காரனாக இருக்க வேண்டுமென்று கூறினார். தொடர்ந்து வந்த மாதங்களிலும், வருடங்களிலும் இயேசு தம்முடைய சீஷர்களைப் பராமரித்துப் போஷித்து பணிவிடைச் செய்து இக்காரியத்தைத் தம்முடைய சொந்த வாழ்வில் செயல்முறைப்படுத்தினார்.

"போஜனத்தை விட்டெழுந்து, வஸ்திரங்களைக் கழற்றிவைத்து, ஒரு சீலையை எடுத்து, அரையிலே கட்டிக்கொண்டு, பின்பு பாத்திரத்தில் தண்ணீர் வார்த்து, சீஷருடைய கால்களைக் கழுவவும், தாம் கட்டிக்கொண்டிருந்த சீலையினால் துடைக்கவும் தொடங்கினார்" (யோவான் 13:4, 5). இந்நேரத்தில் இயேசு அவர் கற்பிக்க வேண்டிய பாடத்தைச் செயல்முறையோடு வெளிப்படுத்தியிருக்க வேண்டும். ஒருவருக்குப் பின்னாக ஒருவருடைய கால்களை மௌனமாக அவர் கழுவித் துடைத்தப்போது, மனத்தாழ்மை மற்றும் ஊழியம் என்னும் பாடத்தை அவர்கள் தங்களுடைய ஞாபகத்திலும் இருதயத்திலும் பதித்து பிற்காலத்தில் அந்தப் பிரதிபலிப்பினால் மேலும் சுத்திகரிக்கப்பட்டார்கள்.

இப்படியாகவே நாமும் ஆண்டவருக்குப் பிரியமாக இருக்க வேண்டுமானால் தேவனுடைய ஜனங்களுக்கு நாம் செய்யக்கூடிய ஊழியங்களை மதிக்க வேண்டுமல்லவா? மற்றவர்கள் சார்பில் நாம் பணிவிடை செய்கிறோமா? அவைகளை இழந்து துக்கிப்பதைக் காட்டிலும் நாம் பெறும் சிறப்புரிமையை மதிக்கலாம். நாம் புறக்கணிக்கப்படும்போது மற்றவர்கள் பணிவிடை செய்கிறார்களா? மற்றவர்களின் ஆதரவுள்ள ஊழியங்களைப் புரிந்துகொண்டு நன்றியுள்ளவர்களாக இருக்கலாம். இனிவரக்கூடிய நம்முடைய நாட்களில் புரிந்துகொண்டு பாராட்டக்கூடிய ஆவியும், மனத்தாழ்மையுள்ள ஆவியும் ஆர்வத்தோடு செயல்படட்டும்.

நம்முடைய ஆண்டவர் தம்மைக் காட்டிக்கொடுத்தவனின் கால்களையும் கழுவினார். "நீங்களும் சுத்தமாயிருக்கிறீர்கள்; ஆகிலும் எல்லாரும் அல்ல என்றார்" (யோவான் 13:10) – Farrar, The Life of Christ, 285, 286.

### யோவானின் அறிக்கை

இயேசு மீண்டும் மேஜையில் தம்முடைய இடத்தில் அமர்ந்தார். ஆனால் அவருடைய இருதயமோ பாரமாக இருந்தது. "அவர் ஆவியிலே கலங்கி" ஒருவேளை கண்ணீர் துளிகள் வெளிப்பட அல்லது நடுங்கிய குரலில், "மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்... உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக்கொடுப்பான்" (யோவான் 13:21) என்று அவர் கூறியிருக்க வேண்டும். சீஷர்கள் ஒருவரையொருவர் நோக்கி, "ஆண்டவரே, நானோ என்று துக்கத்தோடு கேட்டனர்" (மத்தேயு 26:22). இயேசுவின் அருகிலிருந்த யோவானும் கேள்வி எழுப்பினார். அதற்கு ஆண்டவர், "இயேசு பிரதியுத்தரமாக நான் இந்தத் துணிக்கையைத் தோய்த்து எவனுக்குக் கொடுப்பேனோ, அவன்தான் என்று சொல்லி, துணிக்கையைத் தோய்த்து, சீமோன் குமாரனாகிய யூதாஸ்காரியோத்துக்குக் கொடுத்தார்" (யோவான் 13:26). இந்தச் சூழ்நிலையில், இறுதியாக யூதாசும் இதே கேள்வியைக் கேட்கும்படிக்கு உந்தப்பட்டான். "ரபீ, நானோ? என்றான்;

அதற்கு அவர்: நீ சொன்னபடிதான் என்றார்" (மத்தேயு 26:25). "நீ செய்வதை சீக்கிரம் செய்" (யோவான் 13:27). உடனே யூதாஸ் அங்கிருந்துப் புறப்பட்டான். பண்டிகைக்கு ஏதோ சில காரியங்களை ஒழுங்குச் செய்வதற்காக அவன் புறப்பட்டுச் சென்றதாக சீஷர்கள் எண்ணினார்கள்.

நம்முடைய மனசாட்சி எப்போதாவது குத்தப்பட்டதா? நாம் உணர்ச்சியற்ற இருதயங்களோடு அல்லது குற்றம் உணர்ந்த இருதயங்களோடு அதற்குப் பதிலளித்திருக்கிறோமா? நம்முடைய சீர்திருந்துதலுக்காகக் கொடுக்கப்படும் சூழ்நிலைகளை நாம் குறிப்பாகக் கவனித்து, பக்தி வைராக்கியமுள்ள கோட்பாட்டையும், தேவ பயத்தையும், பாவத்தின் உணர்வுகளையும், அதன் வலியை நெருக்கமாக உணரக்கூடிய மனநிலையைத் தேடலாம்.

## சென்றுபோவது... மீண்டும் வருவது

யூதாஸ் அந்த இராத்திரி வெளியே சென்றான். "அவன் புறப்பட்டுப்போனபின்பு: இப்பொழுது மனுஷகுமாரன் மகிமைப்படுகிறார், தேவனும் அவரில் மகிமைப்படுகிறார்" (யோவான் 13:31) என்று இயேசு நடைபெற இருக்கும் அவருடைய அனுபவத்தைக்குறித்துப் பேசினார். இயேசு தம்முடைய சீஷர்களைவிட்டுப் பிரிந்து, அவருடைய தந்தையிடம் செல்வதாகக் கூறினார். இப்பொழுது ஒருவரும் அவரோடு செல்ல இயலாது என்றும் விவரித்தார். அவர்களுக்கு இவ்வார்த்தைகள் குழப்பமாய் இருந்தபோதிலும் இப்பொழுது நாம் இவைகளைத் தெளிவாகப் புரிந்துகொள்கிறோம்.

"என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப் போகிறேன். நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்" (யோவான் 14:2, 3).

யூத வழக்கத்தின்படி இந்தப் பரிட்சயமான வார்த்தைகளைத் திருமணத்திற்காக நிச்சயிக்கப்பட்ட மணவாட்டியிடம் மணவாளன் உண்மையில் கூறக்கூடிய வார்த்தைகள். ஒரு இளைஞன் தன்னுடைய திருமணக் கோரிக்கையை ஒரு பெண்ணிடம் கூறுவதற்கு, திராட்சரசம் நிறைந்த ஒரு பாத்திரத்தை அந்தப் பெண்ணிடம் கொடுப்பார். அந்தப் பெண் அந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளும் பட்சத்தில் அந்த ரசத்தைக் குடித்து அவளுடைய சம்மதத்தைத் தெரிவிப்பாள்.

மணவாட்டியைத் தன்னுடைய தந்தையின் இல்லத்திற்குத் திரும்ப அழைத்துச் செல்வதற்கு முன், அவருடைய வீடு எவ்வளவு பெரிதாக இருந்தாலும், தனக்காகவும் தன்னுடைய மணவாட்டிக்காகவும் ஒரு புதிய இடத்தை ஆயத்தம் செய்வது வழக்கமாக இருந்தது. அந்தக் கட்டுமானப் பணியை அவருடைய தந்தை அங்கீகரித்தப் பின் மணவாளன் எதிர்பார்த்திராத எந்த நேரத்திலும் வந்து தன்னுடைய மணவாட்டியை அழைத்துச் செல்வார். இயேசு அந்தப் பாத்திரத்தை சீஷர்களுக்குக் கொடுத்தபோது, அனைவரும் அதை வாங்கி பருகினார்கள். ஆகவே, மணவாளனுடைய பாஷையில் அவர் உடனே சென்று, மீண்டும் வந்து அவர்களைத் தம்மிடமாக ஏற்றுக்கொள்ளக்கூடிய காரியத்தை உறுதி செய்தார்.

நம்முடைய மணவாளன் 18 நூற்றாண்டுகளுக்கு முன்னதாகவே சென்றுவிட்டார். ஆனால் அவர் மீண்டும் திரும்பி ஒவ்வொருவராக மணவாளனுடைய அங்கத்தினர்களாகப் பரிசுத்த விவாகத்திற்கு மற்றொரு பக்கம் இணைந்துக் கொண்டிருக்கிறார்கள். "அவருடைய மனைவி தன்னை ஆயத்தம் பண்ணினாள்" (வெளிப்படுத்தல் 19:7) என்று வெகு சீக்கிரத்தில் அறிவிக்கப்படும். அப்பொழுது மகிழ்ச்சி நிறைந்த திருமணம் நடைபெறும், ஏங்கித் தவிக்கும் சிருஷ்டிப்புகள் மறுபிறப்படைவார்கள்.

யோவான் 14-ஆம் அதிகாரத்தின் மீதி பகுதி, "நான் பிதாவில் அன்பாயிருக்கிறேன் என்றும், பிதா எனக்குக் கட்டளையிட்டபடியே செய்கிறேன் என்றும், உலகம் அறியும்படிக்கு இப்படி நடக்கும். எழுந்திருங்கள், இவ்விடம்விட்டுப் போவோம் வாருங்கள்" (யோவான் 14:31) என்று இயேசுவால் அறிவிக்கப்படும் வரையில் அந்த மேல் வீட்டில் நடைபெற்றது. கெத்செமனே தோட்டத்திற்கு இயேசு அடிக்கடி ஓய்வெடுக்க வருவார் என்று யூதாஸ் நன்கு அறிந்திருந்ததை இயேசுவும் அறிந்து மனப்பூர்வமாக அவருடைய முடிவை நோக்கிச் சென்றார் (யோவான் 18:2). ஏற்றகாலமாக இராததினால் மற்ற தருணங்களில் அவர் நெருங்கி வந்த அபாயங்களிலிருந்து விலகிச் சென்றார். ஆனால், இது சரியான நேரமாக இருந்ததினால் அவர் எழுந்து தீர்க்கதரிசனத்தோடு தன்னுடைய நியமனத்திற்கு நடந்து சென்றார்.

கிழக்குப் புறமாய் ஒலிவ மலையை நோக்கி அவர்கள் நடந்துச் சென்றபோது, இயேசு ஒருவேளை ஆலய வாசல்களிலுள்ள திராட்சக்கொடிகளின் படிவத்தைக் கண்டு, யோவான் 15-ஆம் அதிகாரத்திலுள்ள திராட்சக்கொடி மற்றும் கிளைகளைப்பற்றிய பாடத்தைக் கற்பித்திருக்க வேண்டும். 16 மற்றும் 17-ஆம் அதிகாரங்களில் அன்போடும் விசுவாசத்தோடும் இருப்பதற்கு அவர்களை எச்சரித்தார். துரிதமாகக் கெதரோன் ஆற்றைத் தாண்டி ஒலிவ தோப்பின் அடிவாரத்திற்குச் சென்றார்கள். மூன்று முறை அவர் ஜெபித்தப்பின் அவரை கைது செய்யும்படி ஒரு கூட்டம் வந்தது. ஆனால் அவர்களிடம் முன் சென்று இயேசு தம்மைக்குறித்து அறிவித்தப்போது, "அவர்கள் அனைவரும் பின்னிட்டு விழுந்தார்கள்" (யோவான் 18:6). மீண்டும் இயேசு அமைதியாக நடந்துச் சென்றிருக்கலாம். ஆனால் அவர்களை மீண்டுமாக அழைத்து, தம்மையே ஒப்புக்கொடுத்து நமக்காக ஈடுபலி செலுத்தினார்.

---

**சிவந்த சமுத்திரத்தைக் கடந்துச் செல்லுதல்**

# பதினோராவது வாதை, பதினோராவது அற்புதம்

"பார்வோன் ஜனங்களைப் போகவிட்டபின்: ஜனங்கள் யுத்தத்தைக் கண்டால் மனமடிந்து, எகிப்துக்குத் திரும்புவார்கள் என்று சொல்லி; பெலிஸ்தரின் தேசவழியாய்ப் போவது சமீபமானாலும், தேவன் அவர்களை அந்த வழியாய் நடத்தாமல்" யாத்திராகமம் 13:17.

Timothy Krupa

எகிப்திலிருந்து கிழக்கே செல்வதற்குப் பலவழிகள் இருந்தது. பாலஸ்தீனாவுக்குக் குறுகிய வழியில் செல்லக்கூடிய பாதை, மிகவும் கவனமாகப் பாதுகாக்கப்பட்ட எல்லைப் பகுதிக்குள் இருக்கும் ஒரு அரணைக் கடக்க வேண்டியதாக இருந்தது. ஒருவேளை மோசே இஸ்ரயேலர்களை இந்த வழியில் கானானுக்குள் அழைத்துச் சென்றிருந்தால் எந்தவிதமான எதிர்ப்புகளும் போராட்டங்களுமின்றி சுமார் பன்னிரண்டு நாட்களுக்குள் அவர்கள் பயணித்திருக்கலாம். ஆனால் உண்மையில் அவர்கள் பெரியளவில் இராணுவ வல்லமையை எதிர்த்திருக்க வேண்டும். நீண்ட காலமாக அடிமைகளாக இருந்த இந்த ஜனங்கள், பெலிஸ்தர்கள் மற்றும் கானானியர்களின் சேனைகளோடு எதிர்த்துப் போர்புரியும் நிலையில் அவர்கள் இல்லை என்பதை தேவன் அறிந்திருந்தார்.

இராணுவ படைகளுக்கு எதிர்த்து நிற்பதற்கான ஆயத்தங்களைப் பெறாத இஸ்ரயேலர்களைக் குறித்து அறிந்துகொள்வதற்கு ஒரு சம்பவம் யூத வரலாற்றில் காணப்படுகிறது. "டார்கம் (Targum) (அராமிக்மொழி விளக்கம்) அவர்கள், சுற்றி கானான் தேசம் சென்றதற்கான மற்றொரு விளக்கம் கொடுக்கப்படுகிறது. சர்வாயுத வர்க்கங்களைத் தரித்திருந்த எப்பிராயீமின் கோத்திரத்தார் தேவனுடைய சித்தத்தைப் புறக்கணித்து, வனாந்தரப் பயணத்திற்கு முப்பது வருடங்களுக்கு முன் எகிப்துக்கு விரைந்தோடினர். இவர்கள் காத் ஊரில் பெலிஸ்தர்களை எதிர்த்து அவர்களை நிர்மூலமாக்கினார்கள்."

"கொஞ்சம் கொஞ்சமாக" வாக்குத்தத்தம் செய்யப்பட்ட தேசத்தை அவர்கள் பெற்றுக்கொள்வார்கள் என்று யேகோவா தேவன் யாத்திராகமம் 23:29, 30-ஆம் வசனங்களில் கூறுகிறார். அவர்கள் விசுவாசத்தில் பலப்பட்டு மனரீதியாகவும், பழக்கத்திலும் அவர்களுடைய அடிமைத்தனத்தை விட்டதற்குப் பின் இது நடக்க வேண்டியதாய் இருந்தது. அதற்குப் பின் இஸ்ரயேலர்களின் கீழ்ப்படியாமையினாலும் இன்னும் விசேஷமாகச் சொல்லப்போனால் பன்னிரண்டு வேவுகாரர்களின் அறிக்கைகளுக்கு ஒரு மோசமான எதிர்விளைவுகளை உண்டாக்கினதினிமித்தம் வாக்களித்த தேசத்திற்குள் இவர்கள் பிரவேசிப்பதற்கு முன் இவர்கள் நாற்பது வருடம் சுற்றித்திரியும்படி தேவன் அனுமதித்தார். பன்னிரண்டு நாட்களுக்கு ஒப்பிட்டுப்பார்க்கும்பொழுது நாற்பது வருடங்கள் அதிகபட்சமாகத் தோன்றுகிறது.

## நேரிடையான கட்டளைகள்

எந்தவழியில் செல்ல வேண்டுமென்று தேவன் துல்லியமாக மோசேயிடம் கூறியிருந்தார். பார்வோன் மீண்டும் அவர்களைப் பின் தொடருவான் என்று தேவன் மோசேயை எச்சரித்திருந்தார் (யாத்திராகமம் 14:1-4). எகிப்தியரின் தலைச்சன் பிள்ளைகளின் மரண துக்கத்திலிருந்து பார்வோன் வெகு சீக்கிரமாய் இயல்பான நிலையை அடைந்து தன்னுடைய படையைத் திரட்டினான். "பிரதானமான அறுநூறு இரதங்களையும், எகிப்திலுள்ள மற்ற சகல இரதங்களையும், அவைகள் எல்லாவற்றிற்கும் அதிபதிகளான வீரரையும் கூட்டிக்கொண்டு போனான்" என்று யாத்திராகமம் 14-7-ஆம் வசனம் கூறுகிறது. பார்வோன் இஸ்ரயேலர்களை, "அறுநூறு இரதங்களோடும், ஐம்பதாயிரம் குதிரை வீரர்களோடும், இரண்டு இலட்சம் காலாட்படைகளோடும் பின் தொடர்ந்தான்" என்று ஜோசபஸ் தன்னுடைய புத்தகத்தில் குறிப்பிட்டிருக்கிறார். (The Antiquites of the Jews, Book 2, Chapter 15).

ஜோசபஸ்சின் பொது மதிப்பின்படி அதிகமான எண்ணிக்கைக் கொடுக்கப்பட்டிருப்பதினால் நாம் சேனையின் எண்ணிக்கையைக் குறைத்தாலும், முற்காலத்தில் அடிமைகளாக இருந்த நிராயுதபாணியாக நின்ற இஸ்ரயேலர்களுக்கு இது எவ்வளவு பயங்கரமான காட்சியாக இருந்திருக்க வேண்டும். "பார்வோன் சமீபித்து வருகிறபோது, இஸ்ரவேல் புத்திரர் தங்கள் கண்களை ஏறெடுத்துப்பார்த்து, எகிப்தியர் தங்களுக்குப் பின்னே வருகிறதைக் கண்டு, மிகவும் பயந்தார்கள்; அப்பொழுது இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டார்கள்" (யாத்திராகமம் 14:10).

இஸ்ரயேலர்களுக்கு நியமிக்கப்பட்ட வழி இரண்டு மலைகளுக்கு நடுவில் ஒரு பெட்டிக்குள் நடத்துவதுபோல தோன்றியது. எகிப்தியர்கள் பின் புறத்திலும் சிவந்த சமுத்திரம் முன் புறமுமாகக் காணப்பட்டது. இப்படியாக அவர்கள் பொறியில் சிக்கனார்கள். "அன்றியும் அவர்கள் மோசேயை நோக்கி: எகிப்திலே பிரேதக்குழிகள் இல்லையென்றா வனாந்தரத்திலே சாகும்படிக்கு எங்களைக் கொண்டுவந்தீர்? நீர் எங்களை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினதினால், எங்களுக்கு இப்படிச் செய்தது என்ன? நாங்கள் எகிப்திலே இருக்கும்போது, நாங்கள் எகிப்தியருக்கு வேலை செய்ய எங்களைச் சும்மா விட்டுவிடும் என்று சொன்னோம் அல்லவா? நாங்கள் வனாந்தரத்திலே சாகிறதைப்பார்க்கிலும் எகிப்தியருக்கு வேலைசெய்கிறது எங்களுக்கு நலமாயிருக்குமே என்றார்கள்" (யாத்திராகமம் 14:11, 12).

இஸ்ரயேலர்கள் தேவனுக்கு எரிச்சல் உண்டு பண்ணும்வகையில் செயல்பட்டார்கள். அவர்கள் சார்பாக நடத்தப்பட்ட அனைத்து அற்புதங்களையும் மறந்தார்கள். இவர்கள் கலகக்காரர்கள் என்று அதற்குப் பின்வந்த யூத எழுத்தாளர்கள் இவர்களின் குணங்களைச் சித்தரித்தார்கள். "எங்கள் பிதாக்கள் எகிப்திலே உம்முடைய அதிசயங்களை உணராமலும், உம்முடைய கிருபைகளின் திரட்சியை நினையாமலும் போய், சிவந்த சமுத்திர ஓரத்திலே கலகம்பண்ணினார்கள்" (சங்கீதம் 106:7). வெகு சில நாட்கள் மட்டுமே சுதந்தரமாக இருந்த இவர்கள் அடிமைத்தனத்திற்குத் திரும்பும்படி உடனடியாகப் புறப்பட்டார்கள்.

## இறுதியாக எகிப்திலிருந்து விடுவிக்கப்படுவதை மோசே முன்னறிவித்தார்

"அப்பொழுது மோசே ஜனங்களை நோக்கி: பயப்படாதிருங்கள்; நீங்கள் நின்றுகொண்டு இன்றைக்குக் கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள்; இன்றைக்கு நீங்கள் காண்கிற எகிப்தியரை இனி என்றைக்கும் காணமாட்டீர்கள்" (யாத்திராகமம் 14:13). மோசேயின் வாக்கியம் இஸ்ரயேலர்களால் ஒருவேளை புரிந்துகொள்ள இயலாதபோதிலும் இந்த ஒரு மோசமான சூழ்நிலையிலிருந்து இஸ்ரயேலர்கள் திடீரென்று விடுவிக்கப்படுவார்கள் என்று வாக்களித்தார்.

இஸ்ரயேலின் சேனையை நடத்திக்கொண்டு வந்த தூதனானவர் மேகஸ்தம்பத்தில் வெளிப்பட்டார். திரளான ஜனங்களின் வழி தடைப்பட்டு சிவந்த சமுத்திரத்திற்கு முன் வந்தபோது, அந்தத் தூதன் பின்னாச் சென்று எகிப்தின் சேனைக்கும் இஸ்ரயேலர்களுக்கும் நடுவாக நின்று இஸ்ரயேலர்களைப் பாதுகாத்தார். "அது எகிப்தியரின் சேனையும் இஸ்ரவேலரின் சேனையும் இராமுழுதும் ஒன்றோடொன்று சேராதபடி அவைகள் நடுவில் வந்தது; எகிப்தியருக்கு அது மேகமும் அந்தகாரமுமாய் இருந்தது; இஸ்ரவேலருக்கோ அது இரவை வெளிச்சமாக்கிற்று" (யாத்திராகமம் 14:20).

இஸ்ரயேலர்கள் எகிப்தைவிட்டுப் புறப்பட்டு சிவந்த சமுத்திரத்தின் கரைக்கு வந்துசேரும் வரையில் ஆறு நாட்கள் கடந்தது என்றும் அந்த உச்சக்கட்ட சம்பவம் ஏழாம் நாளில் நடந்ததென்றும் யூத ரபிகளும், வரலாற்று ஆசிரியர்களும் கூறுகிறார்கள்.

பெரும்பாலான சம்பவங்கள் இரவில் நடைபெற்றது. மேகஸ்தம்பம் அந்த இரண்டு வகுப்பாரையும் இரவில் பிரித்ததாக 20-ஆம் வசனம் கூறுகிறது. ஒரு பலத்தக் கீழ்க் காற்று இராமுழுவதும் அடித்ததாக 21-ஆம் வசனம் கூறுகிறது. "கிழக்கு வெளுத்துவரும் ஜாமத்தில்" "அக்கினிஸ்தம்பம் மற்றும் மேகஸ்தம்பத்தின் வழியாக எகிப்தின் சேனைகள்" வருவதை இஸ்ரயேலர்கள் கண்டதாக 24-ஆம் வசனம் கூறுகிறது. "வானத்திலிருந்து மழைத்துளிகளும், பயங்கரமான இடி மின்னல்கள் அக்கினியோடு காணப்பட்டது. இடியோடுகூடிய மின்னல்களும் அவர்கள்மேல் வந்தது. மனுஷர்மேல் தேவனுடைய கோபாக்கினை அனுப்புவதற்கு அடையாளமாக அப்பொழுது ஒருகாலும் பயன்படுத்தப்படவில்லை. இருள் நிறைந்த சோர்வுற்ற இரவு, அவர்களை அழுத்தியதால் அந்நேரத்தில் அப்படி எதுவும் நடக்கவுமில்லை என்று ஜோசபஸ் கூடுதலான விவரங்களைக் குறிப்பிடுகிறார்.

ஆனால் மிகப்பெரிய அற்புதம் இப்பொழுது நிறைவடைந்துகொண்டிருந்தது. சகலவிதமான "இயற்கை" சீற்றங்களாகிய மழை, காற்று, மின்னல் மற்றொரு பக்கத்தில் மேகஸ்தம்பத்தின் வழியாக இஸ்ரயேலின் பிள்ளைகள் சிவந்த சமுத்திரத்தின் வெட்டாந்தரையில் கடந்துச் சென்றார்கள் (யாத்திராகமம் 14:22).

இஸ்ரயேலர்களை முற்றிலும் அழிக்கும்படியாக எதையும் எதிர்பார்த்திடாத எகிப்தியர்கள் அவர்களுக்குப் பின் விரைந்துச் சென்றார்கள். தேவன் அவர்கள்மேல் இயற்கையான வல்லமைகளை அனுப்பியபோது, இஸ்ரயேலின் தேவனுடைய வல்லமையையும், மகத்துவத்தையும் மீண்டும் ஒருமுறை எதிர்நோக்கினார்கள் என்பதை அவர்கள் வெகு தாமதமாக உணர்ந்தார்கள். "அவர்களுடைய இரதங்களிலிருந்து உருளைகள் கழலவும், அவர்கள் தங்கள் இரதங்களை வருத்தத்தோடே நடத்தவும் பண்ணினார்; அப்பொழுது எகிப்தியர்: இஸ்ரவேலரைவிட்டு ஓடிப்போவோம், கர்த்தர் அவர்களுக்குத் துணைநின்று எகிப்தியருக்கு விரோதமாய் யுத்தம்பண்ணுகிறார் என்றார்கள்" (வசனம் 25).

இஸ்ரயேலர்களுக்காக கர்த்தர் யுத்தம் செய்தார் என்பதை எகிப்தியர்கள் தெளிவாக அறிந்துகொண்டார்கள். நடந்தச் சம்பவங்கள் எதற்காக நடந்தது என்பதை அவர்கள் புரிந்துகொள்ளாமல் இருக்கவில்லை. இந்தத் தீமையான உலகத்தை இக்காலம் வரையில்

கட்டுப்படுத்திக்கொண்டிருக்கும் தீமையான வல்லமைகளைத் தேவன் இறுதியாக அழிக்கும்போது அந்த அழிவு ஒரு மறைபொருளாகவோ இரகசியமாகவோ இராது. இது அனைவருக்கும் தெளிவாகப் புரியும்.

### மோசேயின் செயல்பாடுகள்

மோசே தன்னுடைய கரங்களை விரித்தப்போது, கடல் இரண்டாகப் பிரிந்ததுபோல, தேவன் மோசேயிடம் இரண்டாவது முறையாக கைகளை நீட்டியப்போது கடல் மீண்டும் ஒன்று சேர்ந்தது. சீதோஷணங்களின் அடிப்படையில் ஏதோ ஒரு சம்பவம் தற்செயலாக நடந்ததுபோல இது இருக்கவில்லை. ஆண்டவர் தீர்மானித்து மோசேயை செயல்படும்படி கூறினார். அவைகள் நடந்தது. சகலமும் தேவனுடைய கட்டுப்பாட்டின் கீழ் நடந்தது. அதின் விளைவாக எகிப்தின் ஒட்டுமொத்தமான வல்லமைகள் முழுமையாக அழிக்கப்பட்டது. இது முற்றிலுமான அழிவு. எகிப்தியரின் சேனையின் கடைசியான நபரும் அழிக்கப்பட்டார்கள்.

கடற்கரையில் மரித்த எகிப்தியரை இஸ்ரயேலர்கள் கண்டார்கள். "கர்த்தர் எகிப்தியரில் செய்த அந்த மகத்தான கிரியையை இஸ்ரவேலர் கண்டார்கள்; அப்பொழுது ஜனங்கள் கர்த்தருக்குப் பயந்து, கர்த்தரிடத்திலும் அவருடைய ஊழியக்காரனாகிய மோசேயினிடத்திலும் விசுவாசம் வைத்தார்கள்" (யாத்திராகமம் 14:31). மேலும் அவர்கள், "கர்த்தர் என் பெலனும் என் கீதமுமானவர்; அவர் எனக்கு இரட்சிப்புமானவர்; அவரே என் தேவன், அவருக்கு வாசஸ்தலத்தை ஆயத்தம்பண்ணுவேன்; அவரே என் தகப்பனுடைய தேவன், அவரை உயர்த்துவேன்" (யாத்திராகமம் 15:2) என்று கூறினார்கள்.

### அவர்கள் மோசேக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றனர்

சிவந்த சமுத்திரத்தின் வழியாகக் கடந்துச்சென்ற இஸ்ரயேலர்கள் மோசேக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றார்கள் என்று அப்போஸ்தலர் பவுல் 1 கொரிந்தியர் 10:1, 2 வசனங்களில் கூறுகிறார். மோசே அவர்களின் புதிய தலைவராகவும் அனைவரின் இரட்சகராக இருந்ததினாலும், மோசே கற்பித்த கட்டளைகளுக்கு ஏற்ப ஒரு வாழ்க்கை வாழ்வதற்கு இவர்கள் தங்களை இப்பொழுது அவர் காட்டும் வழியில் நடப்பதற்குத் தங்களை அர்ப்பணித்ததைப் பொருள்படும்படி கூறியிருக்க வேண்டும். "உள்ளான ஞானஸ்நானம்" என்ற வார்த்தைகளைப் பலமுறை பவுல் பயன்படுத்தினதினால், இந்த வார்த்தைகள் அவருக்கு மிகவும் பிடித்ததாகத் தோன்றுகிறது. சபை கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெறுகிறது. அது மரணத்துக் குள்ளாக ஞானஸ்நானம் பெற்று, ஒரே சரீரமாக ஞானஸ்நானம் பெற்று, கிறிஸ்துவைத் தரித்துக் கொள்ளும்படியாக ஞானஸ்நானம் பெற்று, அவருடைய மரணத்தில் ஞானஸ்நானம் பெறுகிறது. கிறிஸ்துவுக்குள்ளாக நாம் பெற்ற ஞானஸ்நானத்தைப் பொருத்தவரையில் நாம் கிறிஸ்துவுக்கு அர்ப்பணிக்கப்பட்டவர்களாக கிறிஸ்துவைப்போல் வாழ்வதற்கு, அவர் கட்டளையின்படி நடப்பதற்கு, அவர் நடக்கக்கூடிய இடங்களுக்குப் பின் செல்லும்படி நாம் ஒப்புக்கொடுத்திருக்கிறோம் (ரோமர் 6:3-5; 1 கொரிந்தியர் 12:13; கலாத்தியர் 3:27; கொலோசெயர் 2:12).

அப்போஸ்தலனாகிய பவுல் ஓர் அருமையான காரியத்தைக் குறிப்பிடுகிறார். சொல்லப்பட்ட இணை தெளிவாக உள்ளது. மேலும் கிறிஸ்துவுக்குள்ளாக நாம் பெற்ற நம்முடைய தனிப்பட்ட ஞனாஸ்நானத்தைப் பொறுத்தவரையில் முக்கியமானப் பாடத்தை எடுத்துக்கொள்ளலாம். ஆயினும், செங்கடலைக் கடக்கக்கூடிய சம்பவத்தைப் பொதுவாக நாம் காணும்பொழுது, "தலைச்சன் பிள்ளைகள்" கடந்துவருவது பற்றி இது குறிப்பிடாமல் தேவ ஜனங்கள் அனைவரும் கடந்துச் செல்லக்கூடிய ஒரு மிகப்பெரிய சித்திரமாக உள்ளது.

இக்காரியத்தில், "தலைச்சன் பிள்ளைகள்" என்று எங்கும் சொல்லப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. முழு தேசத்தாரோடு இணைந்து சிவந்த சமுத்திரத்தின் அனுபவத்தைப் பெற்றார்கள். தலைச்சன் பிள்ளைகள் வனாந்தர பயணத்திற்கு முன்னதாக அவர்களுக்குத் தனிப்பட்ட பொறுப்புகள் கொடுக்கப்படும்வரையில் அவர்கள் பிரிக்கப்படவில்லை. "சிவந்த

சமுத்திரத்தின் வழியாக வரக்கூடிய காரியம் முழு உலகத்தின் மனுக்குலம் இறுதியாக விடுதலைப் பெறுவதைக் காட்டுகிறது" (C. T. Russel, Convention Report sermons, Expanded Biblical Comments, எபிரெயர் 11:29).

மோசேக்குள்ளாக இஸ்ரயேலர்கள் ஞானஸ்நானம் பெற்றதினால் அவர்கள் அடைந்தக் காரியம் என்ன? நாம் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெறுவதைப்போலவே இதுவுமாகும். கடந்த காலத்துப் பாவங்களை நீக்கி தேவனோடு நல்லுறவு ஏற்படுத்தியது. மற்றும் தேவனுடைய சில கிருபைகளுக்கும் இரக்கங்களுக்கும் அவர்களை நடத்தியது. அவர்கள் முழுமையாகக், "கடந்துச்சென்று" ஞானஸ்நானம் பெற்றவுடன் அவர்கள் பெற்றிருந்த எல்லையற்ற மகிழ்ச்சியும் ஆர்வமும் சில நாட்கள் மட்டுமே நீடித்திருந்தது. அதற்குப் பின் மாம்சம் வல்லமையோடு மறுபடியும் எழும்பியது.

## நமக்குண்டான பாடங்கள்

**மீட்புக்கான தேவனுடைய வியக்கத்தக்க வல்லமை.** தேவன் தம்முடைய ஜனங்களை இரட்சிப்பதற்கான தம்முடைய ஆர்வம் மற்றும் தம்முடைய வியக்கத்தக்க வல்லமையைச் செயலாற்றுவதே அநேகமாய் நமக்கு மிக முக்கியமானப் பாடமாக இருக்க வேண்டும். இக்காலத்துத் தீமையான உலகத்தில் சிக்கியிருக்கும் உதவியற்ற உலகத்தின் மனுக்குலத்தைப் போல இஸ்ரயேல் தேசம் தன்னுடைய எதிரிகளுக்கு முன்பாக உதவியற்ற நிலையில் நின்றது. சிவந்த சமுத்திரத்திலிருந்து ஜனங்களை மீட்டெடுப்பதற்கு தேவனுடைய சர்வ வல்லமை பயன்படுத்தப்பட்டது. அதுபோல புதிய ஒழுங்குகளை ஸ்தாபிக்க இக்காலத்துப் பழைய ஒழுங்குகளை அழிப்பதற்கு தேவனுடைய அதே வல்லமை பயன்படுத்தப்படும்.

**தேவனுடைய எதிராளிகள்** தேவனுடைய ஜனங்களின் எதிரிகளுக்கு நடந்த காரியங்களிலிருந்து நமக்கு மற்றொரு முக்கியமானப் பாடம் உள்ளது. சிவந்த சமுத்திரத்தின் மேற்குக் கரையில் பார்வோனையும், பார்வோனுடைய சேனைகளையும் ஜீவனோடு நிற்பதற்கு அவர்கள் அனுமதிக்கப்பட்டிருந்தால் என்ன நடந்திருக்கும் என்று சிந்தித்துப் பார்க்கலாம். இந்த அனுபவத்தைப் பெறுவதற்கு அவர்கள் ஜீவனோடு இருந்திருந்தால் அவர்கள் தேவனுடைய ஜனங்களைக் கட்டுப்படுத்தி அழிப்பதற்கு எடுக்கக்கூடிய முயற்சிகளில் அவர்கள் ஜீவனோடு இருக்குமட்டும் சோர்வடைந்திருக்கமாட்டார்கள். தப்பிப்பதற்கு முயற்சிப்பதும், அவர்களைப் பின்தொடர்ந்து துரத்துவதும் ஒரு தொடர் செயலாக மீண்டும் மீண்டும் நடந்திருக்க வேண்டும். ஆகவே பார்வோன் மற்றும் அவனுடைய சேனைகளின் முழுமையான அழிவே இந்தச் சம்பவத்தின் திறவுகோலான அம்சமாக உள்ளது. பார்வோன் மற்றும் அவனுடைய ஒவ்வொரு வீரர்களும் முழுமையாக அழிக்கப்பட்டார்கள். அவர்கள் தேவனுடைய ஜனங்களை உபத்திரவப்படுத்தாதபடிக்கு நிரந்தரமாக அழிக்கப்பட்டார்கள்.

அதுபோல தேவனுடைய இராஜ்யத்திலும் சம்பவிக்கும். காலப்போக்கில் சாத்தான் அழிக்கப்படுவான். அவனுடைய எல்லா சேனைகளும் அழிக்கப்படும். அப்பொழுது தேவனுடைய வழிகளைக் கற்றுக்கொள்ள விரும்புபவர்கள் பாவத்திலிருந்தும், மரணத்திலிருந்தும் கடந்து மோசே மற்றும் ஆட்டுக்குட்டியானவருடைய பாடலைப் பாடி மகிழ்வார்கள்.

## போரிடுகிறவர்களும் போரிடாதவர்களும்

தேவனுடைய ஜனங்களின் இந்த எதிராளிகள் உண்மையில் எவ்வாறாக அழிக்கப்பட்டார்கள் என்பது ஆச்சரிய மூட்டும் ஒரு காரியமாய் உள்ளது. தேவனுடைய ஜனங்கள் போரிடவில்லை. அவர்களுடைய கரங்களில் பட்டயங்கள் காணப்படவில்லை. எதிராளிகளின் படையை அழிப்பதற்கு இவர்கள் ஆற்றல் மிக்கவர்களாகவும் இருக்கவில்லை. இவர்கள் தொடர்ந்து பயணித்தாலும், அவர்களின் எதிரிகளிடமிருந்து தப்பி ஓடக் கூடியவர்களாக இருந்தார்கள். அதுபோல வருங்காலத்தில் தீமையின் வல்லமைகளை தேவனுடைய ஜனம் சிறந்த படைகளோடு ஜெயங்கொள்ள மாட்டார்கள் என்ற முடிவுக்கு நாம் வரலாம் இந்த ஜெயம் மனுஷருடைய பலத்தினாலோ, தீமையின் வல்லமையினாலோ ஜெயம் பெற முடியாது. சாத்தானும் அவனுடைய

சேனைகளும் தேவனுடைய வல்லமையினாலும் அவருடைய ஆயுதங்களினாலும் மேற்கொள்ளப்படுவார்கள்.

யோசபாத்தின் பள்ளத்தாக்கில் நடைப்பெறுவதாக விவரிக்கப்படும் கடைசிகால சம்பவத்தோடு இது அருமையாகப் பொருந்துகிறது. யேகோவா தேவன் சகல ஜாதிகளையும், இந்தப் பள்ளத்தாக்கில் கூட்டிச் சேர்ப்பார் என்று யோயேல் 3:2-ஆம் வசனத்தில் கூறப்படுகிறது. 12-ஆம் வசனத்தில், "ஜாதிகள் எழும்பி யோசபாத்தின் பள்ளத்தாக்குக்கு வருவார்களாக; சுற்றிலுமுள்ள ஜாதிகளை நியாயந்தீர்க்க அங்கே நான் வீற்றிருப்பேன்" என்று தொடர்ந்து தேவன் கூறுகிறார். "நியாயத்தீர்ப்பின் பள்ளத்தாக்கிலே ஜனங்கள் திரள்திரளாய் இருக்கிறார்கள்; நியாயத்தீர்ப்பின் பள்ளத்தாக்கிலே கர்த்தரின் நாள் சமீபமாயிருக்கிறது" (14-ஆம் வசனம்).

யோசபாத்தின் நாளில், யேகோவா தேவன் தம்முடைய ஜனங்கள் பட்டயத்தினால் தங்களைப் பாதுகாக்க இயலாதபோதிலும் மிகப்பெரிய எதிரி சேனைகளிடமிருந்து அவர்களை இரட்சிப்பார். ஏதிராளி நெருங்கிவந்தபோது, சிவந்த சமுத்திரத்தின் கரையில் மோசே பேசினதுபோல யோசபாத் ஜனங்களிடம் பேசினான் "அவர்கள் அதிகாலமே எழுந்திருந்து தெக்கொவாவின் வனாந்தரத்திற்குப் போகப் புறப்பட்டார்கள்; புறப்படுகையில் யோசபாத் நின்று: யூதாவே, எருசலேமின் குடிகளே, கேளுங்கள்; உங்கள் தேவனாகிய கர்த்தரை நம்புங்கள், அப்பொழுது நிலைப்படுவீர்கள்; அவருடைய தீர்க்கதரிசிகளை நம்புங்கள், அப்பொழுது சித்திபெறுவீர்கள் என்றான்" (2 நாளாகமம் 20:20). இஸ்ரயேலர்கள் துதியின் கீதங்களைப் பாடிக்கொண்டு யுத்தக் களத்திற்குச் சென்றார்கள். அவர்களின் எதிராளியை யேகோவா தேவன் முன்னதாகவே அழித்தார் என்று கண்டார்கள். முடிவு காலத்தில் நடக்கும் இந்த இரண்டு சம்பவங்களிலும், "யுத்தம் கர்த்தருடையது; உங்களுடையது அல்ல" (2 நாளாகமம் 20:15).

**தேவனுடைய ஜனங்களுக்குள் சில கலகம்.** தேவன் இஸ்ரயேலர்களுக்கு அனைத்துக் காரியங்களையும் செய்திருந்தபோதிலும் அவர்கள் வணங்கா கழுத்துள்ள ஜனங்களும், கலகக்காரர்களுமாயிருந்தார்கள் என்பதை நாம் மேலோட்டமாக எடுத்துக்கொள்ளக்கூடாது. அவர்களில் பலர் யேகோவா தேவனைத் தொடர்ந்து சிலர் சினமூட்டியதால் அழிக்கப்பட்டார்கள். தேவனுடைய ஆவிக்குரிய இஸ்ரயேலர்களாக இருப்பதற்கு முயற்சிக்கும் அனைவரும், வார்த்தையினாலாவது எந்தக் கிரியையினாலாவது தேவனுக்குச் சினமூட்டுகிறோமா என்று நாம் கவனத்தோடு ஆராய வேண்டியவர்களாக இருக்கிறோம்.

"கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம்" பெறவிரும்புவோர் மெய்யாகவே அவருக்குள் பிணைக்கப்பட்டு கிறிஸ்துவைப்போல் வாழ்வதற்குத் தங்களை உறுதியாக ஒப்புக்கொடுத்து, அவர் சொல்படி நடந்து அவருடைய நடத்துதலுக்குப் பின் செல்ல வேண்டும். அப்போஸ்தலர் பவுல் குறிப்பிட்டபடி அவருடைய மரணத்துக்குள்ளாக நாம் ஞானஸ்நானம் பெற வேண்டும், ஒரே சரீரமாக ஞானஸ்நானம் பெற வேண்டும், கிறிஸ்துவைத் தரித்துக்கொள்ளும்படி ஞானஸ்நானம் பெற வேண்டும். இறுதியாக அவரோடு அடக்கம் செய்வதில் ஞானஸ்நானம் பெற வேண்டும்.

## சில சம்பவங்கள் தெளிவாக முன் அறிவிக்கப்பட்டது

சிவந்த சமுத்திரத்தைக் கடந்துச் செல்லும் சம்பவத்தில் இஸ்ரயேலர்கள் ஆச்சரியப்பட்டதுபோல, வேறெந்தச் சம்பவங்களிலும் இவர்கள் ஆச்சரியப்படவில்லை. இனி நடக்கக்கூடிய சம்பவங்களை தெளிவாக தேவன் மோசேயிடம் அறிவித்திருந்தார். அவைகளை மோசே இஸ்ரயேலர்களிடம் தெளிவாக அறிவித்தார். அதுபோல நமக்கு முன் இருக்கும் சம்பவங்களைக் குறித்த அறிவை நாம் முன்னதாகப் பெற்றுள்ளோம். இனி நிறைவேற வேண்டிய தீர்க்கதரிசனங்களின் உள்ளர்த்தங்களை நாம் புரிந்துகொள்ள வேண்டும். மேலும் நம்முடைய தனிப்பட்ட அனுபவங்களில் மரணத்திற்கு முன் நாம் எதிர்நோக்கும் அனுபவங்களைக்குறித்து நாம் தெளிவு பெற்றிருக்க வேண்டும். அந்த அனுபவங்கள் ஒவ்வொன்றாகச் சம்பவிக்கும்போது, நமக்குக்

கிடைக்கக்கூடிய தேவனுடைய கிருபைகளும் அவைகளை மேற்கொள்ளக்கூடிய சகல வல்லமைகளும் ஒப்பற்றவைகள். இது எத்தனை மகிமையான வாய்ப்பு!

சிவந்த சமுத்திரத்தைக் கடந்துவந்த சம்பவங்களின் செய்தி வெகுதூரம் சென்றது. நாற்பது வருடங்களுக்குப்பின், இரண்டு வேவுகாரர்கள் எரிகோ பட்டணத்தை வேவு பார்த்தப்போது, "நீங்கள் எகிப்திலிருந்து புறப்பட்டபோது, கர்த்தர் உங்களுக்கு முன்பாகச் சிவந்த சமுத்திரத்தின் தண்ணீரை வற்றிப்போகப் பண்ணினதையும், நீங்கள் யோர்தானுக்கு அப்புறத்தில் சங்காரம்பண்ணின எமோரியரின் இரண்டு ராஜாக்களாகிய சீகோனுக்கும் ஓகுக்கும் செய்ததையும் கேள்விப்பட்டோம்" (யோசுவா 2:10) என்று ராகாப் அவர்களிடம் கூறினாள். அதுபோல, ஒரு நாளில் மனப்பூர்வமாக தேவனுக்குக் கீழ்ப்படியக்கூடிய அனைவரையும் தேவனுடைய வல்லமை இரட்சிக்கும் என்று இந்தப் பரந்து விரிந்த உலகத்தில் இந்தச் செய்தி பரவும்.

தேவனுடைய எதிராளிகள் நிச்சயமாக அழிக்கப்படுவார்கள். சிவந்த சமுத்திரத்தைக் கடந்துச் செல்லும் சம்பவம்போல, தொள்ளாயிரம் (nine hundred years) வருடங்களுக்கு முன் மற்றொரு காரியம் சம்பவித்தது. அதிலும் அதிகப்பட்சமான ஜலம் காணப்பட்டது. தேவனுடைய ஜனங்களாகிய (நோவா மற்றும் அவருடைய குடும்பத்தினர் மீட்கப்பட்டார்கள். அதுபோல, துன்மார்க்கர் அனைவரும் அழிக்கப்பட்டார்கள்) (ஆதியாகமம் 7 மற்றும் 8 அதிகாரங்கள்). ஜலப்பிரளயத்தின்போதும் துன்மார்க்கரை நோவா மற்றும் அவருடைய குடும்பத்தினர் அழிக்கவில்லை. ஆண்டவர் கட்டளையிட்ட காரியத்தை மட்டுமே நோவா செய்தார். அவர் பேழையைக் கட்டி தன்னுடைய குடும்பத்தாரையும், மிருகங்களையும் இரட்சித்தார். தேவன் பேழையின் கதவை அடைத்து, அதற்குப் பின் துன்மார்க்கரை அழித்தார்.

**என்றும் மறக்கக்கூடாதவை**

தம்முடைய ஜனத்தை வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குத் தேவன் அழைத்துச் செல்வார் என்று பயணத்திற்குப் பல வருடங்களுக்கு முன்னதாவே யோசேப்பு முன்னறிவித்தார். இவைகள் சம்பவிக்கும்பொழுது தன்னுடைய எலும்புகளை அவர்களோடு எடுத்துச்செல்லும்படி யோசேப்பு விண்ணப்பித்தார். "மோசே தன்னோடேகூட யோசேப்பின் எலும்புகளை எடுத்துக்கொண்டு போனான். தேவன் நிச்சயமாய் உங்களைச் சந்திப்பார்; அப்பொழுது உங்களோடேகூட என் எலும்புகளை இவ்விடத்திலிருந்து கொண்டுபோங்கள் என்று யோசேப்பு சொல்லி, இஸ்ரவேல் புத்திரரை உறுதியாய் ஆணையிடும்படி செய்திருந்தான்" (யாத்திராகமம் 13:19). இது, உணர்ச்சியூட்டும் சம்பவங்களில் முக்கியமானதொன்றாகும். முதலாவது அவருடைய மனைவி ஒரு எகிப்திய ஸ்திரீயாக இருந்தபோதிலும், தேவனுடைய ஜனங்களைப் பாதுகாத்த இடமாக இருந்தபோதிலும், யோசேப்பு எகிப்தில் புதைக்கப்பட விரும்பாத அவருடைய மனநிலையைக் காட்டுகிறது. இரண்டாவதாக, மோசே மற்றும் ஒருவேளை யோசேப்பின் குடும்பத்தினர் எப்பிராயீம், மனாசே கோத்திரங்கள் யோசேப்பின் விண்ணப்பத்தை நினைவுகூர்ந்து மெச்சிக்கொள்ளத்தக்கதாய் உள்ளது.

சில நேரங்களில் யோசேப்பு நம்முடைய ஆண்டவராம் இயேசுவை அடையாளப்படுத்தக் கூடியவராய் இருக்கிறார். நம்முடைய பயணம் எந்தளவில் சித்தரிக்கப்பட்டாலும் இயேசுவின் ஈடுபலி என்றும் மறக்கப்படுவதில்லை. நாமும் மற்றும் வெகு சீக்கிரத்தில் இந்த முழு மனுக்குலமும் ஆண்டவரின் வாழ்க்கையைப் பற்றியும், மற்றும் நம் அனைவரின் சார்பாக அவருடைய வாழ்க்கையில் நடத்தப்பட்ட வேலைகளையும் என்றும் நம்முடைய சிந்தையில் நித்தியமாகச் சுமந்துச் செல்வோம் (1 யோவான் 2:2).

அதுபோல சிவந்த சமுத்திரத்தைக் கடந்த சம்பவத்தைப் பற்றி பல நூற்றாண்டுகளாகச் சொல்லப்பட்டு வருவதைப்போல வரக்கூடிய யுகங்களிலும் தொடர்ந்து சொல்லப்படும். தேவன் தம்முடைய ஜனங்களை மீட்கக்கூடிய சம்பவங்களில் இது சிறந்த நிழலான சம்பவமாகும். இஸ்ரயேலர்கள் சிவந்த சமுத்திரத்தைக் கடந்தபோது, இரு பக்கங்களிலும் ஜலம் மதில்களைப்போல் நின்றது, அவர்கள் வெட்டாந்தரையில் நடந்தார்கள். அக்கினி ஸ்தம்பமும் மேகஸ்தம்பமும்

அவர்களைப் பாதுகாப்பாக நடத்தியது. தேவன் தம்முடைய பலலோகம் மற்றும் பூமிக்குரிய இராஜ்யங்களை ஸ்தாபிக்கப்படும் நாட்கிளலே நடக்கக்கூடிய சம்பவங்கள் அனைத்தையும் சித்தரிக்கிறது. சிவந்த சமுத்திரத்தில் நடந்தச் சம்பவத்தைக் காட்டிலும் மிகப் பெரியளவில் நிஜமான சம்பவம் வெகு சீக்கிரத்தில் நிறைவேறக்கூடிய காலத்தில் நாம் வாழ்ந்துக்கொண்டிருக்கிறோம்.

ஆகவே கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானத்தை நாம் தழுவி, "சும்மா நில்லுங்கள் யேகோவா தேவனின் இரட்சிப்பை இன்று காண்பீர்கள்" என்ற மோசேயின் வார்த்தைகளை நமக்கு நாமே பொருத்திக்கொள்வோம்.

---

# பஸ்கா புதுப்பிக்கப்படுதல்

**"உங்களுக்கு போஜனபதார்த்தங்களை ஆயத்தம்பண்ணுங்கள்; இன்னும் மூன்றுநாளைக்குள்ளே இந்த யோர்தானைக் கடந்துபோவீர்கள்" (யோசுவா 1:11).**

David Rice

நாற்பது வருட காலமாக இஸ்ரயேலர்கள் வனாந்தரத்தில் அலைந்தார்கள். நீசான் 15-ஆம் தேதி எகிப்திலிருந்து அவர்கள் புறப்படும்போது, அதை நினைவுகூரும்படியாக பயணத்திற்கு ஆயத்தமாக கைகளில் தடியைப் பிடித்துக்கொண்டு ஆட்டைப் புசித்து இஸ்ரயேலர்கள் முதன் முதலில் பஸ்காவை அனுசரித்தார்கள். ஒரு வருட பயணத்திற்குப் பின், நீசான் 14-ஆம் தேதி, "இரண்டாவது சாயங்காலங்களுக்கு" மத்தியில் தங்களுடைய ஆடுகளை அடித்து இரவிலே புசித்து, இஸ்ரயேலர்கள் வனாந்தரத்தில் தங்களுடைய இரண்டாவது பஸ்காவை அனுசரித்தார்கள் (எண்ணாகமம் 9:1-3). ஒருவேளை தங்களுடைய பிரயாணத்தின் இடையில் இஸ்ரயேலர்கள் நீதியுள்ள பழக்கத்தைத் தொடர்ந்திருக்கலாம், ஆனால் இது உறுதியில்லாதது. "விருத்தசேதனம் இல்லாதவர்கள் பஸ்காவை புசிக்கக்கூடாது என்று யாத்திராகமம் 12:48-ஆம் வசனம் கூறுகிறது. மேலும் வனாந்தரத்தில் பிறந்த இஸ்ரயேலர்கள் விருத்தசேதனம் பண்ணப்படவில்லை.

நாற்பது வருடங்களின் முடிவில், விசேஷித்த இரண்டு முக்கியமான வழிகளில் பஸ்கா அனுசரிக்கப்பட்டது.

1. யோர்தானைக்கடந்து வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தில் முழுமையான பண்டிகை அனுசரிக்கப்பட வேண்டியதாக இருந்தது. நீசான் பத்தாம் தேதி அன்று, ஆட்டைத் தேர்வு செய்வது, பஸ்காவின் முதல் அம்சம் (யாத்திராகமம் 12:3). அந்த நாள் யோர்தானைக் கடந்து மேற்கு திசையில் இஸ்ரயேலர்கள் நுழைந்த அந்த நாளோடு பொருந்தியது.

2. எகிப்திலிருந்து புறப்பட்ட பின், முதல் முறையாக வனாந்தரத்தில் பிறந்த இஸ்ரயேலின் ஆண் பிள்ளைகள் விருத்தசேதனம் பண்ணப்பட வேண்டியதாக இருந்தது. "எகிப்திலிருந்து புறப்பட்ட எல்லா ஜனங்களும் விருத்தசேதனம் பண்ணப் பட்டிருந்தார்கள். அவர்கள் எகிப்திலிருந்து புறப்பட்ட பின்பு, வழியில் வனாந்தரத்திலே பிறந்த சகல ஜனங்களும் விருத்தசேதனம் பண்ணப்படாதிருந்தார்கள்" (யோசுவா 5:5). "அப்பொழுது யோசுவா கருக்கான கத்திகளை உண்டாக்கி, இஸ்ரவேல் புத்திரரை ஆர்லோத் மேட்டிலே விருத்தசேதனம்பண்ணினான்" (யோசுவா 5:3). இந்த ஒரு காரியம், "உருண்டோடின." எகிப்தோடு இஸ்ரயேலர்களுக்குச் சம்பந்தப்பட்டிருந்த கீழ்ப்படியாமை, தீமைகள், உபத்திரவங்கள் மற்றும் அவர்களின் போராட்டங்களை அடையாளப்படுத்துகிறது. "கர்த்தர் யோசுவாவை நோக்கி: இன்று எகிப்தின் நிந்தையை

உங்கள்மேல் இராதபடிக்கு புரட்டிப்போட்டேன் என்றார். அதனால் அந்த ஸ்தலம் இந்நாள்வரைக்கும் கில்கால் என்னப்படுகிறது" (யோசுவா 5:9).

தலைச்சன் வகுப்பார் இரத்தத்தின் கீழ் இருக்கும்போது, எகிப்தில் நடந்த பஸ்கா சுவிசேஷ யுகத்தில் கிறிஸ்துவின் பலியினால் சபைக்குக் கிடைத்த ஆசீர்வாதங்களை அடையாளப்படுத்துகிறது. இதற்கு எதிரிடையாக கானான் தேசத்தில் அனுசரிக்கப்பட்ட பஸ்கா தேவனுடைய இராஜ்யத்தில் இந்த உலகம் கிறிஸ்துவின் பலியினால் பெறக்கூடிய ஆசீர்வாதங்களை அடையாளப்படுத்துகிறது. நாற்பது வருட வனாந்தர பயணத்திற்குப் பின் (சுவிசேஷ யுகம்), இராஜ்யத்தில் மனுக்குலத்திற்கான ஆசீர்வாதங்கள் தொடரும். அப்பொழுது செய்யப்பட்ட விருத்தசேதனமானது, பாவம் மற்றும் மரணத்தில் தொடர்புள்ள மனுக்குலத்தின் பழைய அசுத்தங்கள் தங்களுடைய இருதயத்திலிருந்து இராஜ்யத்தில் விருத்தசேதனம் பண்ணப்படுவதை அடையாளப்படுத்துகிறது. வனாந்தரத்தில் காணப்பட்ட மோசே சுவிசேஷ யுகத்தில் கிறிஸ்துவை அடையாளப்படுத்துவதைப்போல இந்த அனுபவங்களுக்குள்ளான யோசுவா இராஜ்யத்திலுள்ள கிறிஸ்துவை அடையாளப்படுத்துகிறார்.

## விரிவான கண்ணோக்கம்

யோர்தானைக் கடப்பதற்கு முன்னதாகவே மோசே வாழ்ந்துக்கொண்டிருந்தபோது, சில இஸ்ரயேலர்கள் தங்களுடைய சுதந்தரத்தைப் பெற்றுக்கொண்டனர். இவர்கள் ரூபன், காத் மற்றும் மனாசே கோத்திரத்தின் பாதி - மீதியுள்ள பாதி கோத்திரம் யோர்தானின் இரு பக்கங்களிலும் அவர்களின் பங்கைப் பெற்றனர். யோர்தானைக் கடந்துச் செல்லும் காரியம், சாபத்திலிருந்து தங்களுடைய இரட்சிப்பை அடையாளப்படுத்துமேயானால், யோர்தானின் கிழக்குப் புறமாகக் குடியேறின இந்தக் கோத்திரங்கள், இந்த உலகம் இராஜ்யத்திற்குள் பிரவேசிப்பதற்கு முன் சிலர் சுதந்தரித்த உபத்திரவங்களை அடையாளப்படுத்துகிறது. இந்தக் கோணத்தில் தலைச்சன் பிள்ளையாகிய ரூபன், பரிசுத்தவான்களையும், மீதியுள்ள காத் கோத்திரம் (ஒரு கூட்டம் என்று பொருள் - ஆதியாகமம் 30:11), திரள்கூட்டத்தாரையும் அடையாளப்படுத்துகிறது. யோர்தானின் இரு பக்கங்களைச் சுதந்தரித்த மனாசே கோத்திரம், இஸ்ரயேலின் கிழக்கு மற்றும் மேற்குப் பகுதிகளை இணைக்கும் ஒரு வகுப்பாரை அடையாளப்படுத்துகிறது. இந்த வகுப்பார் ஆவிக்குரிய மற்றும் பூமிக்குரியவைகளை இணைக்கக்கூடிய முற்பிதாக்கள். இவர்களே பரலோகத்திற்கும், பூலோகத்திற்கும் இடையிலுள்ள இணைப்பாளர்கள். இவர்கள் ஆவிக்குரிய இராஜ்யத்திலிருந்து கட்டளைகளைப் பெற்று பூமிக்குரிய இராஜ்யத்தின் நன்மைகளுக்காக நடைமுறைபடுத்தக்கூடியவர்கள்.

## யோர்தான் நதி

"யோர்தான்" என்ற வார்த்தைக்கு "இறங்குதல்" என்று பொருள் (Strong's 3383). மேலும் மனுக்குலம் மரணத்தை நோக்கி இறங்குவதை இது அடையாளப்படுத்துகிறது. ஆதாமின் சாபத்தின் கீழ் இருந்த மனுக்குலத்தை இரட்சிப்பதற்கு இயேசு பலியினால் தம்முடைய மரணத்தினால் ஜீவனை ஒப்புக்கொடுத்திருந்தப்போதிலும் மரணத்தை அடையாளப்படுத்தும்படி இயேசு யோர்தானில் ஞானஸ்நானம் பெற்றார்.

இஸ்ரயேலர்கள் யோர்தானைக் கடந்துச் சென்றது, மரணத்தின் சாபத்திலிருந்து மீண்டும் ஜீவனுக்குத் திரும்பிச் செல்வதை அடையாளப்படுத்துகிறது. இதற்காகவே இயேசு மரித்தார். இந்தச் சம்பவங்கள், யோசுவா 3:14-17 வசனங்களில் விவரிக்கப்பட்டுள்ளது. யோர்தானின் ஜலம் நிறுத்தப்பட்டு, அந்த ஜலம் சரிவாக இருந்த நிலப்பகுதிக்குள் ஓடியது. "மேலேயிருந்து ஓடிவருகிற தண்ணீர் நின்று சார்தானுக்கடுத்த ஆதாம் ஊர் வரைக்கும் ஒரு குவியலாகக் குவிந்தது" (யோசுவா 3:16). "ஆதாம்" என்ற வார்த்தை, ஆதாமின் வீழ்ச்சியினால் வந்த சாபத்தின் காரணத்தை நமக்கு நினைப்பூட்டுகிறது. "சார்தான்" என்ற வார்த்தை உருவக் குத்துவது அல்லது துளையிடுவது என்று பொருள்படுகிறது (Strong's 6891 மற்றும் 6868). ஒருவேளை மீறுதலின் வழியாகப் பெற்ற காயங்களை இது அடையாளப்படுத்தக்கூடும் அல்லது ஒருவேளை ஆதாம்

மற்றும் சார்தான், "இரத்தத்தைக் காண்பிப்பதற்கு" நம்முடைய இரட்சகரின் மரணத்தைக் குறிப்பிடும்படி உருவக்குத்துவது என்ற வார்த்தைப் பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும். இந்த இரண்டு சம்பவங்களிலும் தண்ணீர் பின்னிட்டுச் செல்வது, மனுக்குலம் சாபத்திலிருந்து ஜீவனுக்குத் திரும்பிச் செல்வதை அடையாளப்படுத்தும்.

## இரண்டாயிரம் முழம்

யோர்தானைக் கடப்பதற்கானச் செயல்களைக்குறித்துச் சேனைகளுக்கு ஆலோசனைக் கூறும்படி யோசுவா தலைவர்களை அனுப்பினார். உடன்படிக்கைப் பெட்டியை ஆசாரியர்கள் சுமந்துச் செல்வதற்குப் பின்னாக இஸ்ரயேலர்கள் இரண்டாயிரம் முழம் இடைவெளிவிட்டுப் பின் செல்லும்படி அறிவித்தார் (யோசுவா 3:2-4). ஒருவேளை இந்த முழு உலகம் இராஜ்யத்திற்குள் பிரவேசிப்பதற்கு முன், ஆசாரியர்களாகிய சபை வகுப்பார் சுவிசேஷ யுகத்தில் முன் செல்லுவதை இது காட்டுகிறது. இந்த இரண்டாயிரம் முழம், சுவிசேஷ யுகத்தை அடையாளப்படுத்தும்; ஆனால் இது வருடங்களை அடையாளப்படுத்துவதில்லை (ஓரளவுக்கு நெருங்கியிருந்தபோதிலும்). ஆனால் ஆவிக்குரிய யுகத்தை (சுவிசேஷ யுகம்) அடையாளப்படுத்தும் எண் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

ஒருவேளை இரண்டு பகுதிகளாக இருக்கும் நம்முடைய வேதாகமமே பரிசுத்த ஆவியின் பிறப்பிடமாக இருப்பதினால் இந்தப் பரிசுத்த ஆவி வேதாகமத்தில் இரண்டு என்ற எண்ணினால் அடையாளப்படுத்தப்படுகிறது. சகரியா 4-ஆம் அதிகாரத்தில் இவைகள் இரண்டு ஒலிவ மரங்களாக அடையாளப்படுத்தப்படுகிறது. இந்த மரங்கள் தங்கள் விலையேறப்பெற்ற எண்ணெயை (பரிசுத்த ஆவியின் அடையாளம்), பொற் குழாய்களின் வழியாக ஒரு கிண்ணத்திற்கு அனுப்பி, அவைகளின் வழியாக ஏழு விளக்குகளும் ஒளியைப் பிரகாசிக்கச் செய்தது. ஆகவே, சபைகளிலுள்ள ஏழு நிலைகளுக்கும் அறிவைக் கொடுக்கும்படி அனுப்பப்பட்ட எண்ணெயாகிய பரிசுத்த ஆவி வேதாகமத்தின் இரண்டு பகுதிகளில் உள்ளது.

இந்த இரண்டு பகுதிகளும் பரிசுத்த ஸ்தலத்தில் காணப்படும் இரண்டு அப்பங்களின் வரிசையினால் அடையாளப்படுத்தப்படுகிறது. சீஷர்களைவிட்டுச் செல்வதற்கு இயேசு ஆயத்தமானபோது, நம்முடைய ஆண்டவர் இரண்டு பட்டயங்களை எடுத்துவரச் சொன்னார் (லூக்கா 22:38). வெளிப்படுத்தல் 11:3-ஆம் வசனத்தில் சொல்லப்படும் இரண்டு சாட்சிகள் (இவைகள் போப்பின் வல்லமையுள்ள 1260 வருஷங்கள் துக்கிப்பதை தீர்க்கதரிசனமாக உரைத்தவைகள்). மற்றும் வெளிப்படுத்தல் 11:4-ஆம் வசனத்தில் தேவனுக்கு முன்பாக பூமியில் நிற்கும் இரண்டு விளக்குத் தண்டுகள். "ஆவி" மற்றும் சத்தியத்திற்கும் இடையிலுள்ள நெருங்கிய அடையாளத்தை எபிரெயர் 4:12; எபேசியர் 6:17-இல் காணலாம். முதல் வசனப்பகுதி, தேவனுடைய வார்த்தை "இருபுறம் கருக்குள்ள பட்டயத்திற்கும்," இரண்டாவது வசனப்பகுதி, தேவனுடைய வார்த்தை "ஆவியின் பட்டயத்திற்கும்" ஒப்பிடப்படுகிறது ("அது" என்ற வார்த்தை "ஆவிக்கு" ஒப்பாக பொதுநிலையில் சொல்லப்பட்டுள்ளது, "பட்டயத்திற்கு" ஒப்பாக இருப்பதற்கு பெண்பால் அங்குக் கொடுக்கப்படவில்லை என்று மார்ஷல் டையகலாட் விவரிப்பதைக் காணவும். மற்ற ஒரு வார்த்தைகளில் சொல்லப்போனால், "தேவனுடைய வார்த்தையே ஆவி" என்று பவுல் கூறுகிறார்).

இப்படியாக ஆவியின் யுகத்தில் இந்த உலகத்திலிருந்து சபை தேவனுடைய பரிசுத்த ஆவியினால் அழைப்பைப் பெற்றபோது, சத்தியத்தின் வழியாக நமக்கு வந்த அழைப்பை, இரண்டாயிரம் முழம் என்று யோசுவாவின் பகுதிகளில் அடையாளப்படுத்தப்படுகிறது. அதே காரியம் யோவான் 21:8-ஆம் வசனத்தில் "இருநூறு முழம்" என்றும் நியாயாதிபதி புத்தகத்தில் சிம்சோன் நியாயாதிபதியாக இருந்த இருபது வருடங்களையும் (நியாயாதிபதி 16:31), நல்ல சமாரியன் உவமையில் காயப்பட்ட மனுஷனுக்குக் கொடுக்கப்பட்ட இரண்டு பணங்களையும் அடையாளப்படுத்துகிறது (லூக்கா 10:34, 35).

ஆசாரியர்கள் யோர்தானில் நுழைந்தபோது, "பெட்டியைச் சுமக்கிற ஆசாரியர்களின் கால்கள் தண்ணீரின் ஓரத்தில் பட்டவுடனே" (யோசுவா 3:15) மேலிருந்து வந்த தண்ணீர் நின்றது.

ஆகவே, சுவிசேஷ யுகத்தின் துவக்கத்தில் ஆசீர்வதிக்கப்பட்ட பரிசுத்தவான்களின் இரட்சிப்பு துவங்கி ஆதாமின்மேல் கொடுக்கப்பட்ட சாபம் கொஞ்சம் கொஞ்சமாகத் திரும்பியது. இருநூறு முழங்களுக்குப் பின், இஸ்ரயேலின் சேனை தொடர்ந்து வந்ததுபோல இந்த உலகமும் நம்முடைய ஆண்டவரின் பலியினால் திறந்து வைக்கப்பட்ட வழியில் பரிசுத்தவான்களுக்குப் பின் சென்று இராஜ்யத்தின் ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்வார்கள். அப்பொழுது, சுவிசேஷ யுகத்தில் நாம் பஸ்காவை அனுசரித்ததுபோல, அவர்கள் இராஜ்யத்தில் பஸ்காவை அனுசரிப்பார்கள்.

**மன்னா நின்றுபோதல்**

இந்தச் சம்பவத்தில் யுகங்களின் மாற்றத்தைக் குறிப்பிடுவதற்கு மன்னா நிறுத்தப்பட்டதை அடையாளமாக எடுத்துக்கொள்ளலாம். இந்த மன்னா நாற்பது வருடங்கள் வனாந்தரத்தில் இஸ்ரயேலர்களைப் போஷித்தது. சுவிசேஷ யுகத்தில் சபையை போஷிக்கக்கூடிய உணவை மன்னா அடையாளப்படுத்துகிறது. அது முதலில் காணப்பட்டபோது, தேனிட்ட பணியாரம்போல ருசியுள்ளதாக விவரிக்கப்பட்டது (யாத்திராகமம் 16:31). லேவியராகமம் 8:26, 27 வசனங்களில் ஆசாரியர்களின் பிரதிஷ்டையின்போது மூன்றுவிதமான அப்பங்கள் கர்த்தருக்கு முன்பாக அசைவாட்டப்பட வேண்டுமென்று சொல்லப்பட்டது – புளிப்பில்லா அப்பம் (நீதிமானாக்கப்பட்ட நிலை), எண்ணெயிலிட்ட அப்பம் (பரிசுத்த ஆவியின் செயல்பாட்டினால் சுத்திகரிக்கப்படுதல்) மற்றும் ஒரு அடை (பொதுவாக நம்முடைய மகிமையின் நம்பிக்கையை அடையாளப்படுத்தும்). "ஒரு அடை, நம்முடைய கனம், மகிமை மற்றும் அழியாமையின் விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்களின்மேல் நாம் கொண்டுள்ள நம்பிக்கையையும், விசுவாசத்தையும் அடையாளப்படுத்துகிறது" (Tabernacle Shadows, page 46). இப்படியாக மன்னாவுக்கும், அடைக்கும் உள்ள தொடர்பு, பரலோக அழைப்பின் பரிசுத்தவான்களின் ஆவிக்குரிய போஷாக்கை மன்னா அடையாளப்படுத்தும் கருத்தை இது ஆதரிக்கிறது.

"தேனும்" பரிசுத்தவான்களின் பரலோக அழைப்புக்குச் சம்பந்தப்பட்டுள்ளது - நம்முடைய பரலோக வாய்ப்பின் அற்புதமான, மதுரமான, மேன்மையான தன்மைகளைக் குறிப்பிடுகிறது. இப்படியாக நாம் மனதிற்கு உகந்த ஜீவனுள்ள வார்த்தைகளைப் பெற்றுள்ளோம் (நீதிமொழிகள் 16:24; வெளிப்படுத்தல் 10:9). இந்த விலையேறப்பெற்ற சுதந்தரத்தை நாம் என்றும் பலி செலுத்திவிடக்கூடாது, ஆகவே பலி பீடத்தின்மேல் தேனை பலி செலுத்தக்கூடாது என்ற கட்டளையை இஸ்ரயேலர்கள் பெற்றிருந்தனர் (லேவியராகமம் 2:11). "பட்சிக்கிறவனிடத்திலிருந்து பட்சணமும், பலவானிடத்திலிருந்து மதுரமும் வந்தது" (நியாதிபதிகள் 14:14) என்று சிம்சோன் தம்முடைய விடுகதையைக் கூறினபோது - "யூதா கோத்திரத்து பால சிங்கத்தை" (வெளிப்படுத்தல் 5:5) அடையாளமாக மரித்துப்போன சிங்கத்தைக் குறித்து அந்த விடுகதை சொல்லப்பட்டிருந்தது. அதிலிருந்து நீதிமானாக்கப்பட்ட நிலைமட்டுமல்ல, மகிமையான பரலோகத்திற்கான மதுரமான அழைப்பாகவும் இருந்தது.

இஸ்ரயேலர்கள் மன்னாவினால் சோர்ந்துபோனபோது, அதன் மதுரமான ருசியை அவர்கள் மறந்து, அது, "புது ஒலிவ எண்ணெய்க்கு" ஒப்பிட்டார்கள் (எண்ணாகமம் 8:8). அதுபோல நாமும் பல இம்மைக்குரிய வாழ்க்கையின் அனுபவங்களின் மத்தியில் மேன்மையான, மகிமையுள்ள நம்பிக்கையை மறந்துவிடுகிறோம். ஆனாலும் நாம் நித்தமும் புசிக்கக்கூடிய ஆவிக்குரிய மன்னாவை புது எண்ணெயைப்போல உட்கொண்டு அதின் அற்புதமான அம்சங்களை இறுகப் பற்றிக்கொள்ளாமல் விட்டுவிடுகிறோம். அப்படிப்பட்ட நேரங்களில், "ரோஜா மலர்களை முகர்ந்துபார்ப்பதற்கு மட்டும் இல்லாமல்" (உன்னதப்பாட்டு 2:1 ஒப்பிட்டுப்பார்க்க), தேனை ருசிக்கவும் நாம் நிற்க வேண்டும் (உன்னதப்பாட்டு 4:11 ஒப்பிட்டுப்பார்க்க).

ஆனால் இந்தப் பரலோக அழைப்பு, தேனிட்டு செய்யப்பட்ட அடைகளின் சுவை இக்காலத்தில் பரிசுத்தவான்களின் அழைப்புக்கு மட்டுமே. இந்த உலகம் சாபத்திலிருந்து நீக்கப்படும்பொழுது, அவர்களுக்காக பல அற்புதமானக் காரியங்கள் வைக்கப்பட்டிருக்கும். ஆனால் இந்தப் பரலோக அழைப்பின் வாய்ப்பு முடிவு பெற்றிருக்கும். இது பரிசுத்தவான்களுக்கு மட்டுமே. இஸ்ரயேலர்கள் நீசான் மாதம் 14-ஆம் தேதி தங்களுடைய பஸ்கா ஆடுகளை அடித்து

அந்த இரவில் அவர்கள் புசித்தப் பின், அதைத் தொடர்ந்து வந்த நாளில் மன்னா நின்று போயிற்று (யோசுவா 5:10-12). உலகம் இரட்சிக்கப்பட்ட பின் பரலோக அழைப்பு முடிவடையும்.

## நாட்களின் எண்ணிக்கை

தேவன் யோசுவாவை ஆசீர்வதித்து, அவரை ஆதரிப்பார் என்று உறுதியளித்து இஸ்ரயேலரை வல்லமையோடும், தைரியத்தோடும் வழிநடத்தும்படி தேவன் கொடுத்திட்ட அறிவுரைகளோடு யோசுவாவின் புத்தகம் துவங்குகிறது. முதல் ஒன்பது வசனங்களில் இப்படியாக விவரிக்கப்பட்டு, 10-ஆம் வசனத்தில் அந்தச் சம்பவத்தின் முன் சொல்லப்பட்ட காரியங்கள் விவரிக்கப்படுகிறது. இனி வரக்கூடிய சில நாட்களுக்கு ஜனங்கள், தங்களுக்கு வேண்டிய போதுமான உணவை ஆயத்தம் பண்ணும்படிக்கு யோசுவா மூப்பர்களிடம் ஆலோசனை கூறும்படி கட்டளையிட்டார். "நீங்கள் சுதந்தரித்துக் கொள்ளும்படிக்கு, இன்னும் மூன்று நாளைக்குள்ளே இந்த யோர்தானைக் கடந்து போவீர்கள்" (யோசுவா 1:11). ஆனால் இந்தக் கட்டளைக்குப் பின் மூன்றாம் நாளில் அவர்கள் யோர்தானைக் கடந்தார்கள் என்று அது பொருள்படவில்லை - ஏனெனில் அதற்குப் பின்வரும் விவரங்கள் இதற்கு முரண்பாடாக இருக்கும் (யோசுவா 3:1, 2). அவர்களின் தற்காலிகமானக் கூடாரங்களிலிருந்து யோர்தானுக்கு மேற்கு கரைக்குக் கடந்துச் சென்று யோர்தானைக் கடப்பதற்கான ஆயத்த வேலைகள், அந்த மூன்றாம் நாளிலே நடைபெற்றது என்று பொருள்படுகிறது.

இஸ்ரயேலர்கள், "யோர்தானைச் சார்ந்த மோவாபின் சமனான வெளிகளில் அவர்கள் பெத்யெசிமோத்தைத் தொடங்கி, ஆபேல் சித்தீம்மட்டும் பாளயமிறங்கியிருந்தார்கள்" (எண்ணாகமம் 33:49). அக்காலத்தில் அவர்கள் யோர்தானுக்கு அருகாமையில் இருக்கவில்லை. இங்கு இவர்கள் மூன்றாம் நாளில் புறப்படுவதற்கு ஆயத்தமானார்கள்.

இதற்கிடையில் யோசுவா எரிகோவுக்கு இரண்டு வேவுகாரர்களை அனுப்பினார். "நீங்கள் எகிப்திலிருந்து புறப்பட்டபோது, கர்த்தர் உங்களுக்கு முன்பாகச் சிவந்தசமுத்திரத்தின் தண்ணீரை வற்றிப்போகப் பண்ணினதையும், நீங்கள் யோர்தானுக்கு அப்புறத்தில் சங்காரம் பண்ணின எமோரியரின் இரண்டு ராஜாக்களாகிய சீகோனுக்கும் ஓகுக்கும் செய்ததையும் கேள்விப்பட்டோம். கேள்விப்பட்டபோது எங்கள் இருதயம் கரைந்து போயிற்று, உங்களாலே எல்லாருடைய தைரியமும் அற்றுப்போயிற்று. உங்கள் தேவனாகிய கர்த்தரே உயர வானத்திலும் கீழே பூமியிலும் தேவனானவர்" (யோசுவா 2:10, 11). அந்தத் தேசத்தின் ஜனங்கள் பயந்திருப்பதை அறிந்துகொண்டார்கள்.

யோர்தான் வெட்டாந்தரையாக மாறியதைக்குறித்து ராகாப் குறிப்பிடவில்லை. ஏனெனில், அது இன்னும் சம்பவிக்கவில்லை. வேவுகாரர்கள் எரிகோவுக்குள் பிரவேசித்த அந்த நாளிலே ராகாபின் வீட்டிற்குச் சென்றார்கள். அந்த இரவில் அவர்கள் ஜன்னலிலிருந்து கயிற்றின் வழியாக இறக்கிவிடப்பட்டு, மூன்று நாளளவும் மலைகளில் தங்களைப் பாதுகாப்பதற்குத் தஞ்சமடைந்தார்கள் (யோசுவா 2:16, 22). ஒருவேளை இஸ்ரயேலர்கள் சித்தீமிலிருந்து யோர்தானின் கிழக்குக் கரைக்குச் சென்றபோது, அந்த மூன்றாம் நாள் யோசுவாவின் கடைசி மூன்று நாட்களோடு பொருந்தக்கூடியதாக இருக்க வேண்டும் (யோசுவா 1:11).

யோசுவா 3:1-ஆம் வசனத்தில் அந்த மூன்றாம் நாள் காலையில் அவர்கள் புறப்பட்டார்கள் என்று கூறப்படுகிறது. "அதிகாலமே யோசுவா எழுந்திருந்த பின்பு, அவனும் இஸ்ரவேல் புத்திரர் அனைவரும் சித்தீமிலிருந்து பிரயாணம்பண்ணி, யோர்தான்மட்டும் வந்து, அதைக் கடந்துபோகும் முன்னே அங்கே இராத்தங்கினார்கள்" (யோசுவா 3:1). யோசுவாவிலும் பெரியவரான நம்முடைய ஆண்டவராகிய இயேசு, மூன்றாம் நாள் அதிகாலையில் எழுந்ததை நினைவுகூரும்படியாக இது இருக்கலாம். இயேசுவின் நாளிலிருந்து மூன்றாவது ஆயிர வருஷம் சரீர அங்கங்களும் எழும்புவதை இது நிழலிட்டுக் காட்டுகிறது. யோசுவா 3:2-ஆம் வசனம் மற்றுமொரு மூன்று நாட்களைக் குறிப்பிடுகிறது, ஒருவேளை அதே மூன்று ஆயிரம் வருடங்களை இது அடையாளப்படுத்தக்கூடும்.

"மூன்றுநாள் சென்ற பின்பு, அதிபதிகள் பாளயம் எங்கும் போய்" (யோசுவா 3:2), தொடர்ந்துவரும் நாளில் இஸ்ரயேலர்களுக்குச் சம்பவிக்கக் கூடியவைகளை விவரித்தார்கள் (யோசுவா 3:5). அப்பொழுது அவர்கள் யோர்தானை நான்காம் நாளில் கடந்து கிழக்குக் கரைக்கு வந்திருக்க வேண்டும்.

யோர்தானைக் கடந்தபோது, ஜனங்களின் பார்வையில் யோசுவா மிகச் சிறந்தவராகக் காணப்பட்டிருக்க வேண்டும். "கர்த்தர் யோசுவாவை நோக்கி: நான் மோசேயோடே இருந்ததுபோல, உன்னோடும் இருக்கிறேன் என்பதை இஸ்ரயேலரெல்லாரும் அறியும்படிக்கு, இன்று அவர்கள் கண்களுக்குமுன்பாக உன்னை மேன்மைப்படுத்துவேன்" (யோசுவா 3:7). மோசேயை அடையாளப்படுத்தும் இயேசுவை நாம் மிகப்பெரிய தலைவராக அடையாளம் கண்டுகொண்டதுபோல, இந்த உலகமும் யோசுவாவுக்கு அடையாளமாக இருக்கும் இயேசுவை மிகப் பெரிய தலைவராக அடையாளம் கண்டுகொள்வார்கள்.

---

# எசேக்கியாவின் பஸ்கா

"அவன் தேவனுடைய ஆலயத்தின் வேலையிலும், தன் தேவனைத் தேடும்படிக்கு நியாயப்பிரமாணத்திற்கும் கற்பனைக்கும் அடுத்த காரியத்திலும் என்ன செய்யத் தொடங்கினானோ, அதையெல்லாம் தன் முழு இருதயத்தோடும் செய்து சித்திபெற்றான்"

(2 நாளாகமம் 31:21).

Tom Ruggirello

இஸ்ரயேலின் இராஜாவாக எசேக்கியா பொறுப்பெடுத்தப்பின் அவர் ஏறெடுத்த மிகப் பெரிய சீர்திருத்த வேலையின் ஒரு பகுதியாக பஸ்கா அனுசரிக்கப்பட்டதை 2 நாளாகமம் 30-ஆம் அதிகாரம் குறிப்பிடுகிறது. ஒரு மனுஷனுடைய விசுவாசம் ஒரு முழு தேசத்தின் போக்கை எந்தளவுக்குப் பாதிப்பை ஏற்படுத்தியது என்று அறிந்துகொள்வதற்கு இது ஓர் உணர்ச்சியூட்டும் சரித்திரமாகக் காணப்படுகிறது. விசேஷமாக தேவனைப் பிரியப்படுத்தும்படி இஸ்ரயேலில் மூன்று இராஜாக்கள் ஆட்சி செய்தனர். தாவீது மற்றும் யோசியாவோடு எசேக்கியாவும் சக இஸ்ரயேலர்களிடம் நல் உணர்வுகளை ஏற்படுத்தினார்.

அவருடைய குடும்ப சூழ்நிலையின் காரணமாக அவருடைய விஷயம் விசேஷமாக ஆர்வமூட்டுகிறதாக உள்ளது. அவருடைய தந்தையாகிய ஆகாஸ் யூதாவின் இரண்டு கோத்திரங்களை விக்கிர ஆராதனைக்கு நடத்தின துன்மார்க்கமான இராஜாவாக இருந்தான். எசேக்கியா தேவன்மேல் இவ்வளவு பக்தி வைராக்கியத்தோடு காணப்படுவதற்கு அவருடைய பக்தியுள்ள தாயே காரணமாக இருந்திருக்க வேண்டும். உண்மையில், 2 நாளாகமம் 29:1-இல் எசேக்கியா அறிமுகப்படுத்தப்படுவதற்கு அவருடைய தாயின் பெயர் அபியா என்று கொடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறாக தாயின் பெயர் கொடுக்கப்படுவது வழக்கத்திற்கு மாறானது. எசேக்கியவை விசுவாசத்தோடு வளர்த்ததை இது குறிப்பிடலாம். இது உண்மையானால், ஒரு தாயின் ஞானமுள்ள ஆயத்த வேலைகளினிமித்தம் எசேக்கியா நற்குணத்தைப் பெற்றிருப்பதைக் காணலாம். அனைத்து கிறிஸ்தவ பெற்றோர்களுக்கும் இது ஒரு பாடம்; அவர்களின் ஞானமுள்ள செயல்பாடுகள், தங்களுடைய பிள்ளைகளின் வாழ்க்கையில் பேராற்றல் வாய்ந்த மாற்றத்தை ஏற்படுத்தலாம்.

இளைஞனான எசேக்கியா இராஜா உடனடியாக இஸ்ரயேலில், தேவ ஆராதனையை மீண்டும் ஸ்தாபிப்பதற்கு உடனடியாக புறப்பட்டது வியப்பூட்டும் காரியமாய் உள்ளது. அவருடைய ஆட்சியின் முதலாம் மாதத்தில் அவர் ஆலயத்தின் வாசலைத் திறந்து, ஆலயத்தைச் செப்பனிட்டார் (2 நாளாகமம் 29:3). அவர் உடனடியாக ஆசாரியர்களையும் லேவியர்களையும் கூட்டிச்சேர்த்து,

ஆண்டவரிடம் திரும்பும்படி நினைப்பூட்டினார் (வசனங்கள் 4-11). அவருடைய தந்தையாகிய ஆகாஸ், ஆலயத்தில் ஏற்படுத்தியிருந்த சகல அசுதங்களையும் வெளி யேற்றுவதற்குப் பதினாறு நாட்கள் சென்றது (வசனம் 17). தேவனுடைய மூர்க்கமான சீற்றம் இஸ்ரயேலிலிருந்து நீக்கப்படுவதற்கு, சீர்திருத்தலின் வேலையின் ஒரு பகுதியாக அவர் தேவனோடு ஒரு உடன்படிக்கையை ஏற்படுத்துவதற்கு விரும்பினார்.

**பஸ்கா சீர்திருத்தம்**

இந்த அனைத்து சீர்திருத்த வேலைகளும் பஸ்கா காலத்திற்கு சற்றுமுன் நடந்தது. ஆயினும் பஸ்காவை அனுசரிப்பதற்குத் தடங்கல் ஏற்பட்டது. சுத்திகரிப்பின் வேலை அதிகமாக இருந்ததினால் குறித்த நாளில் பஸ்கா அனுசரிப்பதற்கு, நீசான் 15-ஆம் தேதி வந்தபோது, ஆசாரியர்கள் போதுமான அளவுக்குச் சுத்திகரிப்பின் வேலைகளை நிறைவு செய்யவில்லை. கூடுதலாக, இவர்கள் அனைவரும் ஆலய சுத்திகரிப்பின் வேலைகளில் ஈடுபட்டிருந்ததினால் எருசலேமிலுள்ள ஜனங்களை பஸ்கா அனுசரிப்பில் கூட்டிச் சேர்ப்பதற்குப் போதுமான நேரம் கிடைக்கவில்லை.

யூதாவின் பிரபுக்களோடு எசேக்கியா இராஜா ஆலோசனை செய்தபின், தொடர்ந்துவந்த மாதத்தில் பஸ்காவை அனுசரிக்கலாம் என்று பிரமாணங்கள் அனுமதித்ததை அவர் தீர்மானித்தார். பஸ்கா ஒரு மாதத்திற்குப் பின் அனுசரிக்கப்படலாம் என்ற சட்டத்தை வெளியிட்டப் பின், வடதிசையிலுள்ள இஸ்ரயேல் இராஜ்யத்தின் பத்து கோத்திரங்களுக்கும் பஸ்கா அனுசரிப்பதற்கான நிருபங்களையும் எசேக்கியா அனுப்பினார் (2 நாளாகமம் 30:6-9). இந்த நிருபத்திற்குப் பலவகையான பதில்கள் பெறப்பட்டது. சிலர் அழைப்பை ஏற்றுக்கொண்டு எருசலேமுக்கு வந்தனர். வேறு சிலர் நகைத்து பரியாசம் பண்ணினார்கள் (வசனங்கள் 10-11).

வடதிசையிலிருந்து வந்தவர்கள் சரியாக தங்களைச் சுத்திகரிக்காமல் எப்படியாகிலும் பஸ்காவைப் புசிக்க வேண்டுமென்று அதை அனுசரித்தது வெளிப்படையாகக் காணப்பட்டது. எசேக்கியாவுக்கு இது ஒரு மிகப்பெரிய காரியமாக இருந்ததினால் அவர்களை மன்னிக்கும்படி தேவனிடம் வேண்டினார். எசேக்கியா இஸ்ரயேலர்களை தேவனிடம் திருப்புவதற்கு மட்டுமல்ல, அவைகள் சரியான நியமங்களின்படி நடைபெற வேண்டுமென்றும் தீர்மானித்தார். வட திசையிலுள்ள சகோதரர்களையும் இணைத்துக்கொள்வதில் அவர் விருப்பம் உடையவராய் இருந்தார். கடந்த இருநூற்று ஐம்பது வருடங்களாக இஸ்ரயேலுக்கும் மற்றும் யூதாவுக்கும் இடையிலுள்ள பிளவு விரிவாக்கப்பட்டிருந்தது. அவருடைய தந்தையாகிய ஆகாஸ் ஆட்சி செய்த காலத்தில் யூதாவுக்கு எதிராக வந்த தேசத்தோடு வடதிசையின் பத்து கோத்திரங்கள் கூட்டமைப்பு ஏற்படுத்தினர். இது சக இஸ்ரயேலர்கள் இடையில் யுத்தத்தை வழி நடத்தியது. ஒரு சந்தர்ப்பத்தில் 120,000 யூதாவின் மனுஷர் கொல்லப்பட்டனர் (2 நாளாகமம் 28:6). இந்தச் சம்பவம் ஆகாசின் மரணத்தில் நடந்ததினிமித்தம் சந்தேகத்திற்கு இடமின்றி இந்தப் பயங்கரமான சம்பவத்திற்கு எசேக்கியா சாட்சியாக இருந்திருக்க வேண்டும்.

வடதிசை சகோதரர்களோடு எவ்வளவு கசப்பான பகையை எசேக்கியா இராஜா எளிமையாக வளர்த்திருக்கக்கூடும்! ஆனால் அவர் இதற்கு எதிரிடையான நோக்கத்தை உடையவராக இருந்தார். யூதாவோடு வடதிசையின் இராஜ்யத்தையும் தேவனிடத்தில் திரும்பிவர செய்வதற்கு அவருக்குள் இருக்கும் அந்த மெய்யான விருப்பத்தை நாம் காணலாம். ஆண்டவராம் இயேசு ஒரு விலையேறப்பெற்ற ஆலோசனையைக் கூறுவதற்கு நீண்ட காலத்திற்கு முன்னதாகவே, இந்த வாலிபமான இராஜா அவைகளை நிறைவேற்றினதைக் காணலாம். "உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைச் சபிக்கிறவர்களைச் ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள்" (மத்தேயு 5:44). மற்றவர்களின் ஆவிக்குரிய நன்மைக்காகவும் அவருடைய எதிராளிகளுடைய நன்மைக்காகவும் கவலைப்படுவதற்கு எசேக்கியா ஒரு சிறந்த மாதிரியாக இருப்பதை நாம் காணலாம்.

இரண்டாவது முறையாக ஏழு நாள் பண்டிகையை எருசலேமில் அனுசரிக்க விரும்பி, கூடி வந்தவர்கள் மிகுதியாய் ஆசீர்வதிக்கப்பட்டனர் (2 நாளாகமம் 30:23). அந்நேரத்தில் எருசலேமின் சூழ்நிலைகளைக்குறித்து நாம் வாசிக்கையில், "அப்படியே எருசலேமில் மகா சந்தோஷம் உண்டாயிருந்தது; தாவீதின் குமாரனாகிய சாலொமோன் என்னும் இஸ்ரயேலுடைய ராஜாவின் நாட்கள் முதற்கொண்டு இப்படி எருசலேமில் நடந்ததில்லை" (வசனம் 26). பஸ்கா அனுசரிப்பின்போது இஸ்ரயேலர்கள் இவ்வளவு மகிழ்ச்சியாய் இருப்பதைப் பார்ப்பதற்கு எவ்வளவு மெய்சிலிர்க்க வைக்கிறது. இவர்களின் அனுசரிப்பு தேவனுக்கும் பிரியமாக இருந்தது. "லேவியரான ஆசாரியர்கள் எழுந்து நின்று, ஜனத்தை ஆசீர்வதித்தார்கள்; அவர்களுடைய சத்தம் கேட்கப்பட்டு, அவர்களுடைய விண்ணப்பம் அவருடைய பரிசுத்த வாசஸ்தலமாகிய பரலோகத்தில் வந்து எட்டினது" (வசனம் 27).

பஸ்காவின் நோக்கம் நிறைவேற்றப்பட்டது. கடந்த காலத்தில் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து அவர்கள் மீட்கப்பட்டார்கள் என்று ஜனங்களின் சிந்தையில் பதிந்தது. கடந்த கால அனுபவங்களுக்கான நன்றி உணர்வுகளே, தொடர்ந்துவரும் காலங்களில் ஜனங்களின் இருதயத்தில் நன்றியோடு இருப்பதற்கான அஸ்திபாரம் என்று கர்த்தர் அறிந்திருந்தார். அந்தப் பாடத்தை ஆண்டவருடைய ஜனங்கள் இன்று புறக்கணிக்க இயலாது. தேவனோடு நம்முடைய கடந்தகால அனுபவங்களை சிந்தையில் கொண்டிருந்தால் மட்டுமே, நன்றி உணர்வுள்ள இருதயங்களோடு நாம் முன்னேறிச் செல்ல முடியும்.

## இராஜ்யத்தின் ஓர் அடையாளம்

எசேக்கியாவின் இந்த முழு அனுபவமும் முற்பிதாக்களால் தேவனுடைய இராஜ்யத்தில் செய்யப்படும் வேலைகளுக்கு அடையாளமாக உள்ளது. தேவனோடு ஒரு புதிய உடன்படிக்கையை ஏற்படுத்த வேண்டுமென்ற எசேக்கியாவின் விருப்பம் முற்பிதாக்களின் வழியாக ஒரு புதிய உடன்படிக்கை ஏற்படுத்தப்படுவதை இது எடுத்துக் காட்டுகிறது. தேவனுடைய கோபத்திலிருந்து இஸ்ரயேலர்களைத் திருப்புவதற்கு எசேக்கியா இராஜா ஒரு புதிய உடன்படிக்கையை ஏற்படுத்த (புதுப்பிக்க) விரும்பினார். அதுபோல, சுவிசேஷ யுகத்தின் முடிவு சம்பவங்களில் இஸ்ரயேலின் தண்டனைகள் முடிவடையும்போது இஸ்ரயேலர் மீண்டும் தேவனுடைய இரக்கத்திற்கு திரும்புவதற்கு ஒப்பாயிருக்கிறது. இந்தச் செயல் முறையின் முக்கிய அம்சமாக, புதிய உடன்படிக்கையின் துவக்க விழா நடைபெறும்.

ஒரு மாதத்திற்குப் பின் அனுசரிக்கப்பட்ட பஸ்கா, உண்மையில் சுவிசேஷ யுகத்தைத் தொடர்ந்து வரும் அனுசரிப்பைச் சித்தரிக்கிறது. இந்த உலகம் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும்போது, பஸ்கா ஆடாக அவருடைய வாழ்க்கையைப் புரிந்துகொள்வார்கள். சுவிசேஷ யுகத்தின்போது ஆவிக்குரிய முதற்பேறானவர்கள் மீட்கப்பட்ட விதத்தை அறிந்து கொள்வார்கள். இஸ்ரயேல் தேசத்தின் தலைச்சன் பிள்ளைகள் மரணத்திலிருந்து இரட்சிக்கப்பட்ட பின், எகிப்திலிருந்து அனைவரும் விடுவிக்கப்பட்டதுபோல உலகத்தாரும் ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தினால் பெற்ற தங்களுடைய சொந்த விடுதலையைப் பற்றிய அறிவை புதையலைப்போல் பெற்றுக்கொள்ளவார்கள்.

இஸ்ரயேலின் இரண்டாவது வாரமாக பண்டிகை அனுசரிக்கப்பட்டது. இந்தத் திரளான உலகம் தேவனுடைய இரட்சிப்பைப் புரிந்துகொள்வதை இதற்குத் தொடர்புடையதாய் இருப்பது எவ்வளவு ஏற்றதாய் இருக்கிறது. "எருசலேமில் மிகுந்த மகிழ்ச்சி" பூமியின் முழு குடும்பங்கள் ஒருமித்து மீட்கப்பட்டதை அவர்கள் அறிந்துகொள்ளும்போது, அவர்கள் பெரும் மகிழ்ச்சியை இது முன்னறிவிக்கிறது. இந்த உலகத்தில் முரண்பட்ட பலவகை ஜனங்களை முற்பிதாக்கள் ஒருமித்து கூட்டிச் சேர்ப்பதற்காக ஏறெடுக்கப்படும் வேலைகளை, முழு இஸ்ரயேலர்களையும் கூட்டிச்சேர்க்க வேண்டுமென்ற எசேக்கியாவின் விருப்பத்திற்கேற்ப வேலைகள் அடையாளப்படுத்துகிறது. யூதர்களை விரும்பக்கூடிய அரபியர்கள், கறுப்பர்களை விரும்பக்கூடிய வெள்ளையர்கள், கிறிஸ்துவின் கீழ் அனைத்து இனங்களும் இணைக்கப்பட்டவர்களாக தேவனை ஆராதிப்பார்கள். எப்படிப்பட்ட மெய் சிலிர்க்க வைக்கும் காட்சி! இந்த நிழலில் காணப்படும் எசேக்கியாவின்

வேலைகளின் நன்மையான நோக்கங்களை சிலர் இகழ்ந்து ஏளனம் செய்தனர். அதுபோல, இராஜ்யத்தின் ஒழுங்குகளைச் சிலர் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

எசேக்கியாவின் வேலைகளினிமித்தம் ஜனங்கள் தங்களுடைய விக்கிரகங்களை நொறுக்கினார்கள். மனுக்குலம் தங்களோடிருந்த சகலவிதமான விக்கிரகங்களையும் அழிக்கும் காலத்தை இது அற்புதமாகக் காட்சியளிக்கிறது.

### சுத்திகரிக்கப்படாதவர்கள்

வடதிசையின் இஸ்ரயேலர்கள் சிலர் போதுமானளவுக்குச் சுத்திகரிக்கப்படாமல் பஸ்காவை அனுசரித்தார்கள். அவர்களுக்காக எசேக்கியா ஏறெடுத்த ஜெபங்களில், இராஜ்யத்தில் முற்பிதாக்களின் மற்றொரு முக்கியமான வேலை இருப்பதைக் காணலாம். இராஜ்யத்தில் சிலர் தேவனை ஆராதிக்க விரும்பினாலும் அவர்களின் விக்கிரகங்கள் உருவழிந்துப் போனதினிமித்தம் முற்பிதாக்களை அணுகுவதில் தவறுகள் ஏற்படலாம். அப்பொழுது அவர்கள் மன்னிப்பைப் பெறும் நியாயமான வழியை முற்பிதாக்கள் கற்றுக்கொடுத்து, தங்களுக்கு நியமிக்கப்பட்டிருக்கும் மத்தியஸ்தரின் பொறுப்பை செயல்படுத்துவார்கள். இந்தப் பிரமாணத்தை மீறின குறிப்பிட்ட இஸ்ரயேலர்களை தேவன் மன்னித்தார். பிரமாணங்கள் சரிநுட்பமாக இருந்தபோதிலும், அவர்களின் இருதயத்திலுள்ள நோக்கத்தின் அடிப்படையில் மன்னிப்பு வழங்கப்பட்டதைக் காணலாம். இராஜ்யத்திலும் இப்படிப்பட்ட ஆவி செயல்படும். சரிநுட்பமான சட்டங்களையும் இருதயத்தின் நோக்கங்கள் மேற்கொள்ளும்.

உலகத்தின் இருதய மாற்றத்தை 2 நாளாகமம் 31:4-ஆம் வசனத்தில் ஒரு சித்திரமாகக் காண்கிறோம். ஆசாரியத்துவத்தின் வேலைகள் தொடர்ந்து நடைபெறுவதற்கு ஜனங்கள் மீண்டும் தசமபாகங்களைச் செலுத்தும்படி எசேக்கியா கட்டளையிட்டார். கட்டளைப் பிறந்தவுடன், மிகுதியான தானியங்களும், திராட்சரசமும், எண்ணெயும், தேனும், ஆடுகளும், காளைகளும் தசமபாகமாகச் செலுத்தப்பட்டது. "குவியல் குவியலாக" (வசனம் 6) என்று விவரிக்கப்படுகிறது. குவியல் என்று இரண்டுமுறை வலியுறுத்தப்பட்டக் காரியம், அதிகப்பட்சமானப் பொருட்கள் சேர்க்கப்பட்டதைக் கூறுகிறது. அவைகளைச் சேர்த்து வைப்பதற்குக் கூடுதலான பண்டகசாலை தேவைப்பட்டது. இது மனமுவந்து செலுத்தப்படும் காணிக்கைகளை எவ்வளவு அருமையாக அடையாளப்படுத்துகிறது. மனித ஆவியின் தாராள குணத்தை இது வரைந்து காட்டுகிறது. உலகத்திலுள்ள அனைத்து இருதயங்களும் இப்படிப்பட்ட ஆவியினால் நிரப்பப்படும். விசுவாசத்தோடு தேவனை ஆராதிப்பதே இதன் முக்கிய விளைவாகும்.

ஒரு விசுவாசமுள்ள இராஜாவின் ஞானம் மற்றும் பராமரிப்பின் கீழ் இஸ்ரயேலர்கள் பாதுகாக்கப்பட்டிருந்ததுபோல, முற்பிதாக்களின் மத்தியஸ்தர் நிர்வாகத்தின் கீழ் மனுக்குலம் விசுவாசத்தோடு தேவனிடத்தில் வழிநடத்தப்படுவார்கள். அப்பொழுது ஆட்டுக்குட்டியானவரின் இரத்தமே மனுக்குலத்தை புரிந்துகொள்ளுதலுக்கும், பக்திக்கும் இனிவரும் யுகங்களில் நீதியான பாதைகளில் நடப்பதற்கும் ஒரு முக்கிய பகுதியாக இருக்கும்.

---

ஓசியாவின் பஸ்கா

# இது ஒரு பயங்கரமான காரியம்

"பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற்செய்வேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றும், கர்த்தர் தம்முடைய ஜனங்களை நியாயந்தீர்ப்பார் என்றும் சொன்னவர் இன்னாரென்று அறிவோம்" (எபிரெயர்10:30).

Richard Evans

"நல்ல" இராஜாவாகிய எசேக்கியாவின் ஆட்சியைத் தொடர்ந்துவந்த இரண்டு துன்மார்க்கமான இராஜாக்களாகிய மனாசே மற்றும் ஆமோன் தலைமையின் கீழ் இஸ்ரயேல் தேசத்திலுள்ள யூதா உபத்திரவப்பட்டன.

"மனாசே ராஜாவாகிறபோது பன்னிரண்டு வயதாயிருந்து, ஐம்பத்தைந்து வருஷம் எருசலேமில் அரசாண்டான்; அவன் தாயின்பேர் எப்சிபாள். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாகத் துரத்தின ஜாதிகளுடைய அருவருப்புகளின்படியே, அவன் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தான்" (2 இராஜாக்கள் 21:1, 2).

"ஆமோன் ராஜாவானபோது இருபத்திரண்டு வயதாயிருந்து, இரண்டு வருஷம் எருசலேமில் அரசாண்டான்; யோத்பா ஊரானாகிய ஆரூத்சின் குமாரத்தியான அவன் தாயின்பேர் மெசுல்லேமேத். அவன் தன் தகப்பனாகிய மனாசே செய்ததுபோல, கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்து, தன் தகப்பன் நடந்த எல்லா வழியிலும் நடந்து, தன் தகப்பன் சேவித்த நரகலான விக்கிரகங்களைச் சேவித்து அவைகளைப் பணிந்துகொண்டு, கர்த்தரின் வழியிலே நடவாமல், தன் பிதாக்களின் தேவனாகிய கர்த்தரை விட்டுவிட்டான். ஆமோனின் ஊழியக்காரர் அவனுக்கு விரோதமாய்க் கட்டுப்பாடுபண்ணி, ராஜாவை அவன் அரமனையிலே கொன்றுபோட்டார்கள்" (2 இராஜாக்கள் 21:19-23).

## யோசியாவின் ஆட்சி

ஆமோனைக் கொன்றுப் போட்டதினிமித்தமாக மிகவும் குறைவான வயதில் அவனுடைய குமாரனாகிய யோசியா சிங்காசனத்தில் அமர்த்தப்பட்டார். "யோசியா ராஜாவாகிறபோது, எட்டு வயதாயிருந்து, முப்பத்தொரு வருஷம் எருசலேமில் அரசாண்டான்; போஸ்காத் ஊரானாகிய அதாயாவின் குமாரத்தியான அவன் தாயின்பேர் எதிதாள். அவன் கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்து, தன் தகப்பனாகிய தாவீதின் வழியிலெல்லாம் வலது இடதுபுறம் விலகாமல் நடந்தான்" (2 இராஜாக்கள் 22:1, 2).

பிரென்சு புரட்சியைப் பற்றிய, தனது பெருமைக்குரிய பணியாகிய, "இரு நகரத்தின் கதை" (A Tail of Two Cities) என்ற கதையை சார்ல்ஸ் டிக்கன்ஸ் துவங்கும்போது, கீழே கூறப்பட்டுள்ள வரியைக் காட்டித் துவக்குகிறார்—"அது காலத்தின் சிறந்தப் பகுதியாய் இருந்தது, அது காலத்தின் மிகக் கேடாய் இருந்தது. அது ஞானத்தின் யுகமாய் இருந்தது, அது மடமையின் யுகமாய் இருந்தது. அது நம்பிக்கையின் துவக்க நிலையாய் இருந்தது, அது அவநம்பிக்கையின் துவக்க நிலையாய் இருந்தது. அது வெளிச்சத்தின் காலமாய் இருந்தது, அது இரவின் காலமாய் இருந்தது. இது இளவேனீர் காலத்தின் நம்பிக்கைப் போலிருந்தது, அது இளவேனீர் காலத்தின் விரக்தியைப் போலிருந்தது. நம் முன்னிலையில் நமக்கெல்லாம் இருந்தது, நம் முன்னிலை நமக்கு ஒன்றுமே இல்லை. நாம் நேராக பரலோகத்திற்குச் செல்கிறோம், நாம் நேராக மாற்றுப் பாதையில் செல்கிறோம்."

இராஜாவாகிய யோசியாவின் ஆட்சியைத் துல்லியமாக விவரிக்க வேண்டுமானால் அவர் யூதாவின் கடைசி நல்ல இராஜாவாக ஆட்சிப் புரிந்தார். ஆனால் இதன் காரணம் யூகிப்பது சற்றுக் கடினமாக உள்ளது. ஏனெனில், அவருடைய தந்தையும் தாத்தாவும் பாகாலையும், அஸ்தரோத்தையும் வழிபட்டவர்களாக இருந்தபோதிலும், யோசியா அவர்களின் பின் செல்லவில்லை. தாவீதின் வழியில் நடந்த அவருடைய கொள்ளு தாத்தாவாகிய எசேக்கியாவைப்போல இவர் வாழ்ந்ததற்கான காரணம் தெரியவில்லை. ஆயினும் அவர், "எப்பக்கமும் திரும்பவில்லை." மற்றொரு பக்கத்தில் யூதாவின் ஜனங்கள், "வேறு பாதையில் சென்றனர்." "அவன் தன் ராஜ்யபாரத்தின் எட்டாம் வருஷத்தில், தான் இன்னும் இளவயதாயிருக்கையில், தன் தகப்பனாகிய தாவீதின் தேவனைத் தேட ஆரம்பித்து, பன்னிரண்டாம் வருஷத்தில் மேடைகள் தோப்புகள் சுரூபங்கள் விக்கிரகங்கள் ஆகிய இவைகள் அற்றுப்போகும்படி, யூதாவையும் எருசலேமையும் சுத்திகரிக்கத் தொடங்கினான்" (2 நாளாகமம் 34:3).

தங்களுடைய பிள்ளைகளை மோளேக்கின் அக்கினிக்குக் காணிக்கையாகச் செலுத்தும் அளவுக்கு யூதாவில் ஏற்பட்டிருந்த சீரழிவைக்குறித்து செப்பனியா மற்றும் எரேமியா தீர்க்கதரிசிகள் தெளிவாகப் பதிவு செய்து வைத்திருந்தனர் (செப்பனியா 1:1-6; எரேமியா 1:1, 2; 3:6-10).

யோசியா தேவனைத் "தேடத் துவங்கியப் பின்" அவருடைய இருபத்து நான்காம் வயதில் ஒரு மிகப் பெரிய சுத்திகரிப்பின் வேலையைத் துவங்கினார் - பொய் தெய்வங்களின் வழிபாடுகளில் சம்பந்தப்பட்டிருக்கும் ஆசாரியர்களை யூதாவிலிருந்து அகற்றினார். இந்தச் சுத்திகரிப்பின் வேலை பல வருடங்களாக நடைப்பெற்றது, அது தனிப்பட்ட முறையில் இராஜாவால் பார்வையிடப்பட்டது. பின் தொடர்ந்துவரும் சம்பவங்களில் அக்கறையற்ற சிலரால் இந்தச் சுத்திகரிப்பு வேலைகள் எதிர்க்கப்பட்டது என்று தெளிவாகிறது. விக்கிரக ஆராதனைப் பல கவர்ச்சிகரமான ஈர்ப்புகளையும் அதில் சம்பந்தப்பட்டவர்கள் முக்கயமான பரிசுகளையும் பெற்றனர்.

## நியாயப்பிரமாணத்தின் புத்தகம்

யோசியாவின் இருபத்து ஆறாம் வயதில் தன்னுடைய ஆட்சியின் பதினெட்டாம் வருடத்தில் மற்றும் ஒரு முக்கியமான வேலையைத் துவங்கினார் - "கர்த்தருடைய ஆலயத்தைச்" செப்பனிட்டார் (2 நாளாகமம் 34:8-13). சாலொமோன் ஆலயம் யோவாசின் காலமுதல் இருநூற்று ஐம்பது வருடங்களாக செப்பனிடப்படவில்லை என்று தோன்றுகிறது. எசேக்கியாவினால் சுத்திகரிக்கப்பட்டாலும் (2 நாளாகமம் 29:3-19) அதிகப்பட்சமான பொன்னும் வெள்ளியும் அசீரியா இராஜாவாகிய சனகெரிப்புக்கு கப்பம் கட்டும்படி ஆலயத்திலிருந்து எடுக்கப்பட்டது (2 இராஜாக்கள் 18:13-16). இப்படியாக விக்கிரகங்கள் நீக்கப்பட்டிருந்தும், இன்னும் சில பழுது பார்க்கும் வேலைகள் நிறைவேற வேண்டியிருந்ததினால் ஆலயம் பரிதாபமான நிலையில் காணப்பட்டது.

அந்த வேலை துவங்கப்பட்டபோது, அந்த வேலைச் செய்வதற்குப் பணம் வசூலிப்பதற்காக ஆலயத்தில் வைக்கப்பட்டிருந்த ஒரு பெட்டியைக் காலி செய்த போது, பிரதான ஆசாரியனாகிய இல்க்கியா தோரா என்ற அந்த நியாயப்பிரமாண புத்தகத்தைக் கண்டெடுத்தார். "கர்த்தருடைய ஆலயத்துக்குக் கொண்டுவரப்பட்ட பணத்தை அவர்கள் எடுக்கிறபோது மோசேயைக்கொண்டு கட்டளையிடப்பட்ட கர்த்தருடைய நியாயப்பிரமாணப் புஸ்தகத்தை ஆசாரியனாகிய இல்க்கியா கண்டெடுத்தான்" (2 நாளாகமம் 34:14).

"அப்பொழுது பிரதான ஆசாரியனாகிய இல்க்கியா சம்பிரதியாகிய சாப்பானை நோக்கி: நான் கர்த்தரின் ஆலயத்திலே நியாயப்பிரமாண புஸ்தகத்தைக் கண்டுபிடித்தேன் என்று சொல்லி, அந்தப் புஸ்தகத்தைச் சாப்பானிடத்தில் கொடுத்தான்; அவன் அதை வாசித்தான்" (2 இராஜாக்கள் 22:8). இந்தப் பெட்டி யோவாஸ் இராஜாவின் ஆட்சியின் போது, "பலிபீடத்தின் அருகில்" பிரதான ஆசாரியனாகிய யோய்தாவினால் வைக்கப்பட்டதாகத் தோன்றுகிறது.

கண்டெடுக்கப்பட்ட இந்தப் புத்தகம் மோசேயினால் எழுதப்பட்டு, "உடன்படிக்கைப் பெட்டியின் அருகாமையில்" வைக்கப்பட்டிருந்த மூலப் பிரதியாக இருக்க வேண்டுமென்று இல்க்கியா அறிவிக்கிறார் (உபாகமம் 31:24-26). ஆலயம் சுத்திகரிக்கப்படாத வருடங்களின் போது, இந்தப் புத்தகம் பாதுகாப்புக்காக உண்டியல் பெட்டிக்குள் வைக்கப்பட்டிருக்க வேண்டும் அல்லது இன்னும் சொல்லப்போனால் ஜனங்களின் பார்வையிலிருந்து அதை நீக்குவதற்காக விக்கிரக ஆராதனைச் செய்த ஆசாரியர்கள் இந்தப் பெட்டியில் இந்தப் புத்தகத்தை மறைத்து வைத்திருக்க வேண்டும். நியாயப்பிரமாண புத்தகம் மட்டும் இடம் மாறவில்லை. நியமிக்கப்பட்ட இடத்திலிருந்து உடன்படிக்கைப் பெட்டியும் எடுக்கப்பட்டது (2 நாளாகமம் 35:3).

தடையை மீறி நம்பிக்கைக்குரிய இல்க்கியா நியாயப்பிரமாண புத்தகத்தைக் கண்டெடுத்தப்போது, இராஜாவின் காரியதரிசியாகிய சாப்பான் யோசியாவிடம் அதை எடுத்துச் சென்றார். பழுது பார்க்கும் வேலையின் முன்னேற்றத்தைக்குறித்த சான்றுகளைக் கொடுத்த பின் அந்தப் புத்தகத்தை இராஜாவிடம் வாசித்தார். இதற்கு ஒருநாள் முழுவதும் செலவழித்திருக்க வேண்டும்.

**யோசியாவின் பதில்**

**புலம்பல் -** "நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகளை ராஜா கேட்டபோது, அவன் தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு, இல்க்கியாவுக்கும், சாப்பானின் குமாரனாகிய அகிக்காமுக்கும், மீகாவின் குமாரனாகிய அப்தோனுக்கும், சம்பிரதியாகிய சாப்பானுக்கும், ராஜாவின் ஊழியக்காரனாகிய அசாயாவுக்கும் கட்டளையிட்டுச் சொன்னது: கண்டெடுக்கப்பட்ட இந்தப் புஸ்தகத்தினுடைய வார்த்தைகளினிமித்தம் நீங்கள் போய், எனக்காகவும் இஸ்ரவேலிலும் யூதாவிலும் மீதியானவர்களுக்காகவும் கர்த்தரிடத்தில் விசாரியுங்கள்; இந்தப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிற எல்லாவற்றின்படியேயும் செய்யும்படிக்குக் கர்த்தருடைய வார்த்தையை நம்முடைய பிதாக்கள் கைக்கொள்ளாதேபோனபடியினால், நம்மேல் மூண்ட கர்த்தருடைய உக்கிரம் பெரியது என்றான்" (2 நாளாகமம் 34:19-21). இஸ்ரயேலின் இரு வீட்டாராகிய வடதிசை மற்றும் தென்திசை இராஜ்யங்களுக்காக யோசியா துக்கித்தார்.

"நியாயப்பிரமாணத்தின் புத்தகம்" வாசிக்கப்படும்பொழுது இராஜாவிடம் ஏற்பட்ட எதிர்விளைவானது இந்த வார்த்தைகளை அவர் முதன்முறையாகக் கேட்டிருக்க வேண்டுமென்று உறுதியாகக் கருதப்படுகிறது. சந்தேகத்திற்கிடமின்றி மனாசே இராஜாவின் ஆளுகையின் துவக்கத்திலிருந்தே தவிர்க்கப்பட்டு வந்தது. அதாவது, கிட்டத்தட்ட எழுபது வருடங்களாக அது வாசிக்கப்படாமல் இருந்திருக்க வேண்டும். (மனாசே 55 வருடங்கள், ஆமோன் 2 வருடங்கள், ஓசியா 18 வருடங்கள்). இப்படியாக இரண்டு முழு சந்ததிகள், "நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகளை" அவர்கள் கேட்டிருக்க வாய்ப்பில்லை - குறிப்பாக, கீழ்ப்படியாமையின் விளைவாக வரும் சாபங்கள். யோசியாவின் புலம்பலுக்கு காரணம் இந்தச் சாபங்கள், "ஜீவனுள்ள தேவனுடைய கைகளில் விழுகிறது பயங்கரமாயிருக்குமே" (எபிரெயர் 10:31) என்று பல நூற்றாண்டுகளுக்கு பின் அப்போஸ்தலனாகிய பவுல் எழுதின வார்த்தைகளைச் செயல்படுத்தும்படி தம்முடைய ஜனங்களின் வருங்காலத்தை எண்ணி உடனடியாகத் துக்கித்தார்.

அந்த வரிசையான சம்பவங்களை, "ஏழத்தனையான வாதைகள்" என்று மோசே விவரிக்கிறார். மற்றும் ஏபால் மலையின்மேல் யோசுவாவின் வழியாக சில குறிப்பிட்ட வார்த்தைகள் நாடகபாணியில் சத்தமாக வாசிக்கப்பட்டது (லேவியராகமம் 26:14-39; உபாகமம் 27:11-13; யோசுவா 8:30-35).

**பெண் தீர்க்கதரிசி -** இராஜா கட்டளையிட்டபடி கர்த்தரிடத்தில் விசாரிக்கும்படி உல்தாள் என்ற பெண் தீர்க்கதரிசியிடம் ஆலோசனைக் கேட்டனர். எரேமியா அல்லது செப்பனியாவிடம் அல்ல, மாறாக இந்த பெண் தீர்க்கதரிசியிடம் விசாரிப்பதற்குப் பல காரணங்கள் முன் வைக்கப்படுகிறது.

மற்ற தீர்க்கதரிசிகள் எருசலேமில் இல்லாததினால் உல்தாள் தீர்க்கதரிசியிடம் விசாரிக்க ஆள் அனுப்பியிருக்க வேண்டும் என்பதே பதிலாக இருக்க வேண்டும்.

உல்தாள் பதிலளிக்கும்போது, யோசியாவின் புலம்பல் நியாயமானது என்று குறிப்பிட்டாள். தேவனோடு கொண்டிருக்கும் ஐக்கியம் அவிசுவாசமாக இருக்கும் பட்சத்தில் அது உண்மையில் பயங்கரமாக இருந்தது (2 இராஜாக்கள் 22:15-17).

**உடன்படிக்கை -** யோசியா தான் கேட்டறிந்தவைகளுக்கு முழுமனதோடு செவிசாய்த்துத் தன்னைத்தாழ்த்தி சரியானப் பாதையில் நேர்மையாகச் சென்றார். அவர் தவறான காரியங்களை மட்டும் வெளியேற்றாமல் (2 இராஜாக்கள் 23:4-20), தேவனால் எழுதப்பட்ட வார்த்தைகளைப் பின்பற்றும்படி நன்மையான காரியங்களைச் செய்வதற்கும் துவங்கினார் (2 இராஜாக்கள் 23:1-3). முதலில் பல நூற்றாண்டுகளுக்கு முன் மோசே யோசுவாவுக்குக் கட்டளையிட்டபோது, இஸ்ரயேல் ஜனங்கள் தேவனோடு ஏற்படுத்தின உடன்படிக்கையை மேலும் வலியுறுத்தும்படி, புத்தகத்தின் வார்த்தைகள் அனைவருடைய காதுகள் கேட்கும்படி வாசிக்கப்பட்டது. "ராஜாவும், சகல யூதா மனுஷரும், எருசலேமின் குடிகளும், ஆசாரியரும், லேவியரும், பெரியோர்முதல் சிறியோர் மட்டுமுள்ள சகலருமாய்க் கர்த்தருடைய ஆலயத்துக்குப் போனார்கள்; கர்த்தருடைய ஆலயத்திலே கண்டெடுக்கப்பட்ட உடன்படிக்கைப் புஸ்தகத்தின் வார்த்தைகளையெல்லாம் அவர்கள் காதுகள் கேட்க வாசித்தான். ராஜா தன் ஸ்தானத்திலே நின்று, அந்தப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிற உடன்படிக்கையின் வார்த்தைகளின்படியே தான் செய்வதினாலே, கர்த்தரைப் பின்பற்றி நடப்பேன் என்றும், தன் முழு இருதயத்தோடும் தன் முழு ஆத்துமாவோடும் அவருடைய கற்பனைகளையும் அவருடைய சாட்சிகளையும் அவருடைய கட்டளைகளையும் கைக்கொள்ளுவேன் என்றும் கர்த்தருடைய சந்நிதியில் உடன்படிக்கைபண்ணி, எருசலேமிலும் பென்யமீனிலும் காணப்பட்ட யாவரையும் அதற்கு உட்படப்பண்ணினான்; அப்படியே எருசலேமின் குடிகள் தங்கள் பிதாக்களின் தேவனாகிய அந்தத் தேவனுடைய உடன்படிக்கையின்படியே செய்தார்கள்" (2 நாளாகமம் 34:30-32).

சிதேக்கியா ஆட்சியின் கடைசியில் நடந்த ஒரு சூழ்ச்சி பற்றிய விவரம் எரேமியா தீர்க்கதரிசனத்தில் விவரிக்கப்பட்டது. யூதா தன்னுடைய உடன்படிக்கையை உறுதிப்படுத்துவதற்கு யோசியா ஏற்படுத்தின ஒப்பற்ற பண்டிகையின் ஒரு பகுதி இந்த தீர்க்கதரிசனத்தில் விவரிக்கப்பட்டிருக்க வேண்டும். "என் முகத்துக்குமுன் பண்ணின உடன்படிக்கையின் வார்த்தைகளை நிறைவேற்றாமல், என் உடன்படிக்கையை மீறின மனுஷரை நான் துண்டங்களின் நடுவாகக் கடந்துபோகும்படி அவர்களை இரண்டாகத் துண்டித்த கன்றுக்குட்டியைப்போல் ஆக்குவேன். கன்றுக்குட்டியின் துண்டுகளின் நடுவே கடந்துபோன யூதாவின் பிரபுக்களையும், எருசலேமின் பிரபுக்களையும், பிரதானிகளையும், ஆசாரியர்களையும், தேசத்தின் சகல ஜனங்களையும் அப்படிச் செய்து, நான் அவர்களை அவர்கள் சத்துருக்களின் கையிலும், அவர்கள் பிராணனை வாங்கத்தேடுகிறவர்களின் கையிலும் ஒப்புக்கொடுப்பேன்; அவர்களுடைய பிரேதம் ஆகாயத்தின் பறவைகளுக்கும் பூமியின் மிருகங்களுக்கும் இரையாகும்" (எரேமியா 34:18-20).

**பஸ்கா** - தேவனோடு ஏற்படுத்தின உடன்படிக்கையை உறுதிப்படுத்தின பின் அதைத் தொடர்ந்து முழு தேசமும் பஸ்கா அனுசரிக்கும்படி யோசியா கூறினார். "அதற்குப் பின்பு யோசியா எருசலேமிலே கர்த்தருக்குப் பஸ்காவை ஆசரித்தான்; அவர்கள் முதலாம் மாதம் பதினாலாந்தேதியிலே பஸ்கா ஆட்டுக்குட்டியை அடித்தார்கள். அங்கே வந்திருந்த இஸ்ரவேல் புத்திரர் அக்காலத்தில் பஸ்காவையும், புளிப்பில்லாத அப்பப்பண்டிகையையும் ஏழுநாளளவும் ஆசரித்தார்கள். தீர்க்கதரிசியாகிய சாமுவேலின் நாள் தொடங்கி, இஸ்ரவேலிலே அப்படிக்கொத்த பஸ்கா ஆசரிக்கப்படவில்லை; யோசியாவும், ஆசாரியரும், லேவியரும், யூதாவனைத்தும், இஸ்ரவேலில் வந்திருந்தவர்களும், எருசலேமின் குடிகளும் ஆசரித்த பஸ்காவைப்போல இஸ்ரவேல் ராஜாக்களில் ஒருவரும் ஆசரித்ததில்லை" (2 நாளாகமம் 35:1, 17, 18).

**விசுவாசம் -** யோசியா பெற்றிருந்த பக்தி வைராக்கியத்தினிமித்தம் தன்னுடைய தேசத்திலுள்ள விக்கிரக தோப்புகளை மட்டுமல்ல, சமாரியா பட்டணத்தில் உள்ளவைகளையும் அழித்துப் போட்டார் (2 இராஜாக்கள் 23:15-20) – வடதேசம், பத்து கோத்திரத்தின் அவிசுவாசமுள்ள ஜனங்கள் அசீரியர்களினால் சிறைப்பட்டுப்போன பின் பாழாக்கப்பட்டிருந்தது.

பெத்தேலில் அவர் செய்த வேலை - எருசலேமுக்கு ஒப்பாக யெரோபெயாம் வட இராஜ்யத்தில் ஒரு பலிபீடத்தை ஏற்படுத்தினார். யோசியாவின் அர்ப்பணிப்பும் தேவனை சேவிக்க வேண்டுமென்ற அவருடைய ஆழமான விசுவாசத்திற்கும் அங்கு நடந்த சம்பவம் சிறந்த மாதிரியாக இருந்தது. அந்தப் பலிபீடங்கள் முழுமையாக அழிக்கப்படுவதற்கு முன், விக்கிரக ஆராதனை செய்த ஆசாரியர்களின் எலும்புகளை அவர்களின் கல்லறைகளிலிருந்து எடுத்து அந்தப் பலிபீடத்தின்மேல் எறிந்தார். யூத வரலாற்றில் மாதிரியாகக் கொடுக்கப்படாவிட்டாலும், மூன்று நூற்றாண்டுகளுக்கு முன் பேர் சொல்லப்படாத "தேவனுடைய மனுஷன்" கொடுத்த கட்டளைகளை முழுமையாக யோசியா கீழ்ப்படிந்தார். "அந்தப் பலிபீடத்தை நோக்கி: பலிபீடமே பலிபீடமே, இதோ, தாவீதின் வம்சத்தில் யோசியா என்னும் பேருள்ள ஒரு குமாரன் பிறப்பான்; அவன் உன்மேல் தூபங்காட்டுகிற மேடைகளின் ஆசாரியர்களை உன்மேல் பலியிடுவான்; மனுஷரின் எலும்புகளும் உன்மேல் சுட்டெரிக்கப்படும் என்பதைக் கர்த்தர் உரைக்கிறார் என்று கர்த்தருடைய வார்த்தையைக் கூறி" (1 இராஜாக்கள் 13:2).

விசுவாசத்தினால் தேவனுடைய மனுஷன் முன்னறிவித்த சகல காரியங்களையும் யோசியா நிறைவேற்றினார் (2 இராஜாக்கள் 23:15, 16). "இதோ, அகங்காரியாயிருக்கிறானே, அவனுடைய ஆத்துமா அவனுக்குள் செம்மையானதல்ல; தன் விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்" (ஆபகூக் 2:4). இங்குச் சொல்லப்பட்ட நீதியுள்ள மனிதனுக்கு யூதாவின் கடைசி நல்ல இராஜாவாக ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக உள்ளார்.

### யோசியாவின் மறைவு மற்றும் முன்னோர் வழிவந்த பண்பு

தேவன் உல்தாளின் மூலமாக யோசியாவுக்கு வாக்களித்தப்படியே யூதாவின்மேல் "ஜீவனுள்ள தேவனுடைய" நியாயத்தீர்ப்பு வருவதற்கு முன்னதாகவே இராஜாவின் வாழ்க்கை முடிவடைந்தது (2 இராஜாக்கள் 22:20). "அவன் நாட்களில் எகிப்தின் ராஜாவாகிய பார்வோன்நேகோ அசீரியா ராஜாவுக்கு விரோதமாய் ஐபிராத்து நதிக்குப் போகிறபோது ராஜாவாகிய யோசியா அவனுக்கு எதிராகப் புறப்பட்டான்; பார்வோன்நேகோ அவனை மெகிதோவிலே கண்டபோது, அவனைக் கொன்றுபோட்டான்" (2 இராஜாக்கள் 23:29).

லூயிஸ் XVI ஆட்சி பிரென்சு புரட்சி பயங்கரத்தினால் குறுகிய காலம் தாமதித்தபோது, சில வரிசையான சம்பவங்கள் யோசியாவின் நாட்களில் நடந்ததுபோல் இருந்தது. அதுபோல யோசியாவின் ஆட்சியும் இரவு வருவதற்கு முன் மறையக்கூடிய சூரியனின் ஒளியை பனிமூட்டம் மறைத்ததுபோல் இருந்தது. அவர் பல தடைகளை மேற்கொள்ள வேண்டியதாய் இருந்தது. அவருடைய தாத்தா நீண்ட காலம் துன்மார்க்கமாக ஆட்சி செய்தது, அவருடைய தந்தையின் கொடூரமான செயலும், மிருகத்தனமாக அவர் கொல்லப்பட்டதும், தோரா பற்றிய அறிவில் குறைவுபட்டதும், ஆலயம் பழுது பார்க்கப்படாமல் அசுத்தமானதினாலும், எல்லாவற்றிற்கும் மேலாக ஜனங்கள் நெறிதவறி சென்றது. அவருடைய முயற்சிகள் வெளிப்புறமான விக்கிரக ஆராதனைகளை வெளியேற்றினாலும், பொதுவாக ஜனங்கள் தேவனுடைய வழியில் நுழையவில்லை. யோசியாவின் மரணத்திற்குப் பின் ஜனங்கள் உடனடியாகப் பொய் தேவர்களிடம் திரும்பினார்கள்.

குறிப்பாக முடிவுக்கு சற்று முன் யோசியாவின் மூன்று குமாரர்களும் ஒரு பேரப்பிள்ளையும் யூதாவின்மேல் ஆட்சி புரிந்தனர். ஒருவரும் யோசியாவின் பாதையைப் பின்பற்றவில்லை. அனைவரும் தேவனுடைய பார்வைக்குத் தீமையானவைகளை நடப்பித்தார்கள் (2 இராஜாக்கள் 23:32, 37; 24:9, 19). பாபிலோனால் சிறைப்பட்டுப் போகாத மீதியுள்ள ஜனங்களிடம் எரேமியா

சவால்விட்டபோது; "நீ கர்த்தருடைய நாமத்தில் எங்களுக்குச் சொன்ன வார்த்தையின்படியே நாங்கள் உனக்குச் செவிகொடாமல், எங்கள் வாயிலிருந்து புறப்பட்ட எல்லா வார்த்தையின்படியேயும் நாங்கள் செய்து, வானராக்கினிக்குத் தூபங்காட்டி, அவளுக்குப் பானபலிகளைவார்ப்போம்; நாங்களும், எங்கள் பிதாக்களும், எங்கள் ராஜாக்களும், எங்கள் பிரபுக்களும், யூதா பட்டணங்களிலும் எருசலேமின் வீதிகளிலும் செய்ததுபோலவே செய்வோம்; அப்பொழுது நாங்கள் அப்பத்தினால் திருப்தியாகி, ஒரு பொல்லாப்பையும் காணாமல் வாழ்ந்திருந்தோம். நாங்கள் வானராக்கினிக்குத் தூபங்காட்டாமலும், அவளுக்குப் பானபலிகளை வார்க்காமலும் போனதுமுதற்கொண்டு, எல்லாம் எங்களுக்குக் குறைவுபட்டது; பட்டயத்தாலும் பஞ்சத்தாலும் அழிந்துபோனோம்" (எரேமியா 44:16-18) என்று அவரை மதியாமல் பதிலளிக்கும் அளவுக்கு அவர்களுக்குள் விக்கிரக ஆராதனை பதிந்திருந்தது.

## விசுவாசத்தினால் நீதியுள்ள வாழ்க்கை

தேவனுடைய வார்த்தை - "தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது" (எபிரெயர் 4:12) என்ற அப்போஸ்தலனாகிய பவுலின் வார்த்தைகளின்படி யோசியாவின் வாழ்க்கையில் நியாயப்பிரமாணத்தின் புத்தகம் மிக அற்புதமான மாற்றங்களை ஏற்படுத்தியதை உறுதிப்படுத்துகிறது.

வசனங்களை இலவசமாகப் பயன்படுத்திப் பிரகாசிப்பதற்கும், ஒருவர் உபதேசத்தினால் மற்றவரை மாற்றுவதற்குமுள்ள வித்தியாசம் பகலுக்கும் இரவுக்கும் ஒப்பிடப்படுகிறது. யூதாவின் தோல்வியில் சித்தரிக்கப்பட்டபடி தேவனுடைய வார்த்தைகள் புறக்கணிக்கப்பட்டபோது, ஜனங்கள் சகலவிதமான தவறுகளுக்குள்ளும் நடத்தப்பட்டனர். "வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக" (2 தீமோத்தேயு 3:16).

## மற்ற எந்தப் பஸ்காவைப்போல் இது இருக்கவில்லை

கிறிஸ்துவை தங்களுடைய பஸ்காவாக ஏற்றுக்கொள்ளக்கூடிய அனைவருக்கும் யோசியாவின் பஸ்கா சரியான வழிநடத்துதலைத் தருகிறது. யூதாவை சுத்திகரிக்கும்படி தவறான தெய்வங்களின் வழிபாட்டை வெளியேற்றுவதற்கு தன்னால் இயன்ற காரியங்களை யோசியா இராஜா நடப்பித்தார். ஜனங்களின் இருதயங்களிலிருந்து "பழைய புளிப்பை" முழுமையாக நீக்கிச் சுத்திகரிக்காவிட்டாலும் இதுவரையில் நடைபெறாத ஒரு பஸ்காவை அவர் நடத்தினார். "ஆகையால், நீங்கள் புளிப்பில்லாதவர்களாயிருக்கிறபடியே, புதிதாய்ப் பிசைந்த மாவாயிருக்கும்படிக்கு, பழைய புளித்த மாவைப் புறம்பே கழித்துப்போடுங்கள். ஏனெனில் நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே" (1 கொரிந்தியர் 5:7). ஆனால் நாம், "கிறிஸ்துவுக்குள்" நம்முடைய இருதயங்கள் முழுமையாகச் சுத்திகரிக்கப்பட வேண்டும்.

தேவனுடைய வார்த்தைகளை யோசியா கேட்டவுடன், அவைகளை நம்பி விசுவாசித்து, தேவன் சொல்லிய வார்த்தைகளை முழுமையாகக் கீழ்ப்படிவதற்குத் தன்னை அர்ப்பணித்தார் (2 நாளாகமம் 34:31). அவர் சரியான வழிநடத்தலைக் கொடுத்தாலும் ஜனங்கள் அவரைப் பின்பற்றவில்லை. பிரமாணத்தின்படி நடப்பதற்கு அவர்கள் வாக்குறுதி கொடுத்திருந்தபோதிலும் விசுவாசத்தின் குறைச்சலினாலும் முழுமனதில்லாததினாலும், அவர்கள் மனம் வருந்தாமலும் கீழ்ப்படியாமலும் போனார்கள். "எருசலேமிலும் பென்யமீனிலும் காணப்பட்ட யாவரையும் அதற்கு உட்படப்பண்ணினான்; அப்படியே எருசலேமின் குடிகள் தங்கள் பிதாக்களின் தேவனாகிய அந்தத் தேவனுடைய உடன்படிக்கையின்படியே செய்தார்கள்" (2 நாளாகமம் 34:32). யோசியாவின் தலைமை நீக்கப்பட்டப் பின் உடனடியாக ஜனங்கள் தங்களுடைய பழைய வழிக்குத் திரும்பினார்கள்

(2 இராஜாக்கள் 23:30-32). எல்லாவற்றிற்கும் மேலாக அழிவிலிருந்து தலைமை ஆதரவாளரை இரட்சிக்காத மதத்தின் பயன் என்ன?

எரேமியா, இராஜாவைக்குறித்தும் அவருடைய சீர்திருத்த வேலைகளைக்குறித்தும் சாதகமாகப் பேசியிருந்தாலும் (எரேமியா 22:15, 16) ஜனங்களின் உண்மையான குணலட்சணங்களை அறிந்திருந்தார். தேவனுடைய உண்மையான தொழுகைக்காகச் செய்யப்பட்ட மேற்புறமானச் சடங்குகளை அவர்கள் தவறாக எடுத்துக்கொண்டதை எரேமியா அறிந்திருந்தார்.

தீர்க்கதரிசி முன்னறிவித்த தீமைகளை ஜனங்கள் புறக்கணித்துச் செப்பனிடப்பட்ட ஆலயத்தின் அழகையும் ஒழுங்குகளையும் மட்டுமே நோக்கிக்கொண்டு இருந்தனர். "இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்; உங்கள் வழிகளையும் உங்கள் கிரியைகளையும் சீர்ப்படுத்துங்கள், அப்பொழுது உங்களை இந்த ஸ்தலத்திலே குடியிருக்கப்பண்ணுவேன். கர்த்தரின் ஆலயம், கர்த்தரின் ஆலயம், கர்த்தரின் ஆலயம் இதுவே என்று சொல்லி, பொய்வார்த்தைகளை நம்பிக்கொள்ளாதிருங்கள். நீங்கள் உங்கள் வழிகளையும் உங்கள் கிரியைகளையும் நன்றாய்ச் சீர்ப்படுத்தி, நீங்கள் மனுஷனுக்கும் மனுஷனுக்குமுள்ள வழக்கை நியாயமாய்த் தீர்த்து, பரதேசியையும் திக்கற்றவனையும் விதவையையும் ஒடுக்காமலும், குற்றமில்லாத இரத்தத்தை இந்த ஸ்தலத்திலே சிந்தாமலும்�ளூ உங்களுக்குக் கேடுண்டாக அந்நிய தேவர்களைப் பின்பற்றாமலும் இருப்பீர்களேயாகில், அப்பொழுது நான் உங்கள் பிதாக்களுக்குக் கொடுத்த தேசமாகிய இந்த ஸ்தலத்திலே உங்களைச் சதாகாலமும் குடியிருக்கப்பண்ணுவேன்" (எரேமியா 7:3-7).

தங்களுடைய அசுத்தமானதும், அருவருப்பான குணங்களோடு உன்னதமான சடங்கு முறைகள் மற்றும் ஒழுங்கான காரியங்களை வெட்கப்படாமல் நடத்திக் கொண்டிருந்தனர். "தாங்கள் அருவருப்பானதைச் செய்ததினிமித்தம் வெட்கப்படுகிறார்களா? பரிச்சேதம் வெட்கப்படார்கள், நாணவும் அறியார்கள்; ஆகையால் விழுகிறவர்களுக்குள்ளே விழுவார்கள்; நான் அவர்களை விசாரிக்குங்காலத்திலே இடறுண்டுபோவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரேமியா 8:12).

தேவனுடைய சிருஷ்டிப்புக்காக அவர் கொண்டிருக்கும் சித்தமானது, அவருடைய வார்த்தைகளைக் கேட்பதற்கு மட்டுமல்ல, அதை விசுவாசித்து நடப்பிக்கவும் வேண்டும். யோசியாவின் மிகச் சிறந்த தலைமையின் கீழ் நடத்தப்பட்ட வேலைகளையும் ஜனங்கள் கவனிக்கவில்லை. தீர்க்கதரிசி குறிப்பிட்டபடி; "ஆமோனின் குமாரனாகிய யோசியாவின் பதின்மூன்றாம் வருஷம் துவங்கி இந்நாள்மட்டும் சென்ற இந்த இருபத்துமூன்று வருஷமாகக் கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாயிற்று; அதை நான் உங்களுக்கு ஏற்கனவே சொல்லிக்கொண்டுவந்தும் நீங்கள் கேளாமற்போனீர்கள். கர்த்தர் உங்களிடத்திற்குத் தீர்க்கதரிசிகளாகிய தம்முடைய சகல ஊழியக்காரரையும் ஏற்கனவே அனுப்பிக் கொண்டேயிருந்தும், நீங்கள் கேளாமலும், கேட்கும்படிக்கு உங்கள் செவிகளைச் சாயாமலும்போனீர்கள்" (எரேமியா 25:3, 4).

யோசியாவினால் அனுசரிக்கப்பட்ட பஸ்காவைப்போல, இதுவரையில் எந்த பஸ்காவும் அனுசரிக்கப்படாவிட்டாலும், அந்தப் பேராற்றலான செயல் தேவனுடைய நோக்கத்தை நிறைவேற்றவில்லை. எரேமியா யூதாவுக்கு நினைப்பூட்டியதுபோல, பகட்டான வெளிப்புற தோற்றத்தைக் காட்டிலும் கீழ்ப்படிதலே தெய்வீக விருப்பமாக இருந்தது; "நான் உங்கள் பிதாக்களை இருப்புக்காளவாயாகிய எகிப்துதேசத்திலிருந்து புறப்படப்பண்ணின நாளிலே அவர்களுக்குக் கற்பித்த இந்த உடன்படிக்கையின் வார்த்தைகளைக் கேளாத மனுஷன் சபிக்கப்பட்டவனென்று, இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் உரைக்கிறாரென்று அவர்களுக்குச் சொல்லு" (எரேமியா 11:4).

## இது ஒரு பயங்கரமானக் காரியம்

தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட பூமிக்குரிய ஜனங்கள் இயற்கையின் அண்டத்தைச் சிருஷ்டித்த அவர்களுடைய சிருஷ்டிகரினால் கொடுக்கப்பட்ட வியப்பூட்டும் சிறப்புரிமையைப்

புரிந்துகொள்ளத் தவறினார்கள். அவர்களின் அவிசுவாசத்தின் பின் விளைவை காண்பதற்குப் பயங்கரமாய் இருந்தது. தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட பரலோகத்தின் ஜனங்கள் (எபிரெயர் 3:1) அவர்களின் மாதிரியிலிருந்து பாடங்களைக் கற்றுக்கொள்ள வேண்டும். "சகோதரரே, ஜீவனுள்ள தேவனை விட்டு விலகுவதற்கேதுவான அவிசுவாசமுள்ள பொல்லாத இருதயம் உங்களில் ஒருவனுக்குள்ளும் இராதபடிக்கு நீங்கள் எச்சரிக்கையாயிருங்கள்" (எபிரெயர் 3:12).

தேவனுடைய பரலோக ஜனங்களாக இருக்கக்கூடியவர்கள் தடுமாற்றத்தோடு அல்ல, உறுதியோடு நிற்க வேண்டும் (எபிரெயர் 10:19, 23). விசுவாசத்தினால் பழைய மனுஷனை அவர்கள் சிலுவையில் அறைய வேண்டும் (ரோமர் 6:6; எபேசியர் 4:22; கொலோசெயர் 3:9), எலும்புகளை எரித்துவிட வேண்டும். தங்களுடைய பஸ்காவில் பங்கெடுப்பதற்குப் "பாத்திரமாக" இருக்கும்படி "பழைய புளிப்பை" முழுமையாக அகற்ற வேண்டும் (1 கொரிந்தியர் 5:7). "எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து, இந்த அப்பத்தில் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணக்கடவன். என்னத்தினாலெனில், அபாத்திரமாய்ப் போஜனபானம்பண்ணுகிறவன், கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாததினால், தனக்கு ஆக்கினைத்தீர்ப்பு வரும்படி போஜனபானம்பண்ணுகிறான்" (1 கொரிந்தியர் 11:28, 29).

சொல்லப்பட்ட வார்த்தைகள் வித்தியாசமாக இருந்தாலும், கொரிந்தியர்களுக்குக் கொடுக்கப்பட்ட அதே எச்சரிப்பை அப்போஸ்தலர் பவுல் எபிரெயரிலும் முன் வைக்கிறார். "இப்படியிருக்க, பரம அழைப்புக்குப் பங்குள்ளவர்களாகிய பரிசுத்த சகோதரரே, நாம் அறிக்கைபண்ணுகிற அப்போஸ்தலரும் பிரதான ஆசாரியருமாயிருக்கிற கிறிஸ்து இயேசுவைக் கவனித்துப்பாருங்கள்" (எபிரெயர் 3:1). "மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும், தேவன் உங்களுக்குக் கட்டளையிட்ட உடன்படிக்கையின் இரத்தம் இதுவே என்று சொன்னான்." (எபிரெயர் 2:14; 9:20; 12:24). "தேவனுடைய குமாரனைக் காலின்கீழ் மிதித்து, தன்னைப் பரிசுத்தஞ்செய்த உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்தமென்றெண்ணி, கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன் எவ்வளவு கொடிதான ஆக்கினைக்குப் பாத்திரவானாயிருப்பான் என்பதை யோசித்துப்பாருங்கள். பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற்செய்வேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றும், கர்த்தர் தம்முடைய ஜனங்களை நியாயந்தீர்ப்பார் என்றும் சொன்னவர் இன்னாரென்று அறிவோம். ஜீவனுள்ள தேவனுடைய கைகளில் விழுகிறது பயங்கரமாயிருக்குமே" (எபிரெயர் 10:29-31).

தோராவின் வார்த்தைகளைக் கேட்ட யோசியா தேவனுடைய சித்தத்தைப் புரிந்துகொண்டு, தேவனுடைய பூமிக்குரிய ஜனங்கள் புரிந்துகொள்ளும்படி சகலத்தையும் அறிவித்தார். தனிப்பட்ட மனுஷனாக அவருடைய விசுவாசமும், ஒரு தேசமாக ஜனங்களின் அவிசுவாசமும், தேவனுடைய பரலோக ஜனங்களுக்கு முக்கியமானப் பாடங்களைக் கற்பிக்கிறது. தேவனைச் சேவிக்க விரும்பும் அனைவரின் வாழ்க்கையும் ஒரு விசுவாச வாழ்க்கையாக இருந்து, தேவன் பேரிலும் அவரின் வார்த்தையின் பேரிலும் முழுமையான நம்பிக்கையோடு வாழ வேண்டும். "விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான், பின்வாங்கிப்போவானானால் அவன்மேல் என் ஆத்துமா பிரியமாயிராது என்கிறார்" (எபிரெயர் 10:38).

யோசியாவின் புலம்பல், தேவனுடைய துக்கத்தின் விளைவை அவர் சரியாகப் புரிந்துகொண்டார் என்பதை இது காட்டுகிறது. "கர்த்தர் தம்முடைய ஜனங்களை நியாயந்தீர்ப்பார்" (எபிரெயர் 10:30). உண்மையில், "ஜீவனுள்ள தேவனுடைய கைகளில் விழுகிறது பயங்கரமாயிருக்குமே" (எபிரெயர் 10:31).

---

# யோர்தானைக் கடந்துசெல்லுதல்

"அப்பொழுது எலியா, தன் சால்வையை எடுத்து முறுக்கித் தண்ணீரை அடித்தான்; அது இருபக்கமாகப் பிரிந்தது; அவர்கள் இருவரும் உலர்ந்த தரைவழியாய் அக்கரைக்குப் போனார்கள்" - 2 இராஜாக்கள் 2:8

வசனவாரியான விளக்கம்: 2 இராஜாக்கள் 2, Carl Hagensick

ஜனங்கள் வெட்டாந்தரையில் கடப்பதை அனுமதிப்பதற்குத் தண்ணீர் வற்றிப்போகக்கூடிய நான்கு சம்பவங்கள் பழைய ஏற்பாட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது. (1) இஸ்ரயேல் ஜாதி சிவந்த சமுத்திரத்தை மேற்கிலிருந்து கிழக்கு நேக்கிக் கடந்துசெல்லுதல். (2) இஸ்ரயேல் ஜாதி யோர்தான் நதியை கிழக்கிலிருந்து மேற்கு நோக்கிக் கடந்துசெல்லுதல். (3) எலியா யோர்தான் நதியை மேற்கிலிருந்து கிழக்கு நோக்கிக் கடந்துசெல்லுதல். (4) எலிசா யோர்தான் நதியை கிழக்கிலிருந்து மேற்கு நோக்கிக் கடந்துசெல்லுதல். இதில் இரண்டு சம்பவங்கள் 2 இராஜாக்கள் 2-ஆம் அதிகாரத்தில் விவரிக்கப்பட்டுள்ளது. இதை நாம் விவரமாக காணலாம்.

### ஒருநாளில் நிகழக்கூடிய சம்பவம் - 2 இராஜாக்கள் 2:1

"கர்த்தர் எலியாவைச் சுழல்காற்றிலே பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப் போகிறபோது, எலியா எலிசாவோடேகூடக் கில்காலிலிருந்து புறப்பட்டுப்போனான்."

இந்த அதிகாரம் புதிய ஏற்பாட்டில் குறிப்பிடப்படாமல் இருந்தாலும், "கர்த்தருடைய பெரிதும் பயங்கரமுமான நாள்" வருகிறதை ஆண்டவரின் சார்பாக அறிவிக்கக்கூடிய எலியாவின் தீர்க்கதரிசனத்தைக்குறித்து (மல்கியா 4:5, 6), இயேசு பல தருணங்களில் மேற்கோள் காட்டினார் - இது உண்மையான கிறிஸ்தவ சபைக்கு நேர்த்தியாகப் பெருந்தக்கூடிய ஒரு குறிப்பாகும்.

அந்த நாளில் தம்முடைய ஜீவனை எடுத்துக்கொள்வதற்கான ஆண்டவருடைய நோக்கங்களை எலியா தெளிவாக உணர்ந்திருந்தார். எலியாவின் ஸ்தானத்தில் எலிசாவை நியமிப்பதை தீர்க்கதரிசனங்களின் பள்ளிக்கு அறிவிப்பதற்காக பெத்தேலுக்கும், எரிகோவுக்கும் அவர் கடந்துசென்றார். கிறிஸ்தவ மூப்பர்களும் இப்படியாக தங்களுடைய மரணத்தைக்குறித்து இவ்வளவு தெளிவாக அறியாததினால் அடிக்கடி தங்களுக்குப் பின் சபையில் முக்கியமான பொறுப்புகளைச் செய்வதற்கு சகோதரர்களை ஒழுங்கு செய்வதில் தவறிவிடுகிறார்கள்.

வயதுசென்ற அந்தத் தீர்க்கதரிசி தாம் மரிக்கப்போகும் விதத்தை ஒருவேளை முன்னதாகவே அறிந்திருக்க வேண்டும் - ஒரு மிகப் பெரிய சுழற்காற்று அவரைப் பரலோகத்திற்கு எடுத்துச்செல்லும். பூமியின்மேல், சபை வகுப்பாரின் வாழ்க்கையும் இவ்விதமாக மிகப்பெரிய சுழற்காற்றாகிய உபத்திரவத்தில் பரலோக இரட்சிப்பு நிறைவடையும் என்று நாம் முடிவு செய்கிறோம்.

இந்த நிகழ்வு எலியா கில்காலிலிருந்து புறப்படும்போது துவங்குகிறது. கில்கால் என்ற பெயருக்கு வட்டம் அல்லது வளையம் என்று பொருள். யூதேயா மலைகளின் மேற்கிலுள்ள யோர்தானில் செங்குத்தான ஒரு பள்ளத்தாக்கின் அமைப்பாகும். யோசுவாவின் கீழ் இஸ்ரயேலர்கள் ஆசரிப்புக்கூடாரத்தோடு கடந்துசென்ற முதல் இடம் கில்கால். அவர்கள் கடந்துச்சென்றபோது யோர்தானின் கிழக்குக் கரையில் ரூபன், காத் மற்றும் மனாசேயின் பாதி கோத்திரம் குடியேறியது.

தேசத்தின் மீதியுள்ள பகுதியைக் கைப்பற்றுவதற்குத் தங்களுடைய சகோதரர்களுக்கு உதவி செய்தால் மட்டுமே யோர்தானின் கிழக்குக் கரையிலுள்ள இந்தப் பகுதிகளை ரூபன், காத் மற்றும் மனாசேயின் பாதி கோத்திரம், இதைச் சுதந்தரிக்க முடியும் என்று அறிவிக்கப்பட்டது. இது பரலோக இரட்சிப்பைச் சுதந்தரிக்கக் கூடியவர்கள் மேற்கு கரையை அடையாளப்படுத்தும் பூமிக்குரிய இரட்சிப்பைச் சுதந்தரிக்கக்கூடிய தங்களுடைய சகோதரர்களுக்கு உதவி செய்வார்கள் என்ற கருத்தை அடையாளப்படுத்துவதாகக் கருதப்படுகிறது.

இப்படியாக இஸ்ரயேலர்களோடு யோசுவாவுக்கு நடந்த சம்பவங்கள் எலியாவோடு சம்பந்தப்பட்டுள்ளது. (1) வெட்டாந்தரையில் யோர்தானைக் கடந்துசெல்லுதல். (2) பரலோக இரட்சிப்பின் எண்ணிக்கை நிறைவடைந்து, பூமிக்குரிய இராஜ்யத்தின் வேலைகளின் துவக்கத்தை இவ்விரண்டு சம்பவங்களின் காலங்களும் அடையாளப்படுத்துகிறது. (3) இரண்டு சம்பவங்களும் கில்காலோடு சம்பந்தப்பட்டுள்ளது. அப்சலோமின் புரட்சியினால் நாடு கடந்து சென்ற தாவீதை இந்த கில்காலில் அவரை இராஜாவாக வரவேற்பதற்கு ஜனங்கள் கூடியிருந்தார்கள் (2 சாமுயேல் 19:15).

### பெத்தேல் மற்றும் எரிகோ 2:2-7

"எலியா எலிசாவை நோக்கி: நீ இங்கே இரு; கர்த்தர் என்னைப் பெத்தேல்மட்டும் போக அனுப்புகிறார் என்றான். அதற்கு எலிசா: நான் உம்மை விடுகிறதில்லை என்று கர்த்தரின் ஜீவனையும் உம்முடைய ஜீவனையும்கொண்டு சொல்லுகிறேன் என்றான்; அப்படியே இருவரும் பெத்தேலுக்குப் போனார்கள். அப்பொழுது பெத்தேலிலிருந்த தீர்க்கதரிசிகளின் புத்திரர் எலிசாவினிடத்தில் வந்து: இன்றைக்குக் கர்த்தர் உனக்குத் தலைமையாயிருக்கிற உன் எஜமானை உன்னைவிட்டு எடுத்துக்கொள்வார் என்பது உனக்குத் தெரியுமா என்றார்கள். அதற்கு அவன்: எனக்குத் தெரியும், சும்மா இருங்கள் என்றான். பின்பு எலியா அவனை நோக்கி: எலிசாவே, நீ இங்கே இரு; கர்த்தர் என்னை எரிகோமட்டும் போக அனுப்புகிறார் என்றான். அதற்கு அவன்: நான் உம்மை விடுகிறதில்லை என்று கர்த்தருடைய ஜீவனையும் உம்முடைய ஜீவனையும்கொண்டு சொல்லுகிறேன் என்றான்; அப்படியே அவர்கள் எரிகோவுக்கு வந்தார்கள். எரிகோவிலிருந்த தீர்க்கதரிசிகளின் புத்திரர் எலிசாவினிடத்தில் வந்து: இன்றைக்குக் கர்த்தர் உனக்குத் தலைமையாயிருக்கிற உன் எஜமானை உன்னைவிட்டு எடுத்துக்கொள்வார் என்பது உனக்குத் தெரியுமா என்று அவனைக் கேட்டார்கள். அதற்கு அவன்: எனக்குத் தெரியும், சும்மா இருங்கள் என்றான். பின்பு எலியா அவனை நோக்கி: நீ இங்கே இரு; கர்த்தர் என்னை யோர்தானுக்கு அனுப்புகிறார் என்றான். அதற்கு அவன்: நான் உம்மை விடுகிறதில்லை என்று கர்த்தருடைய ஜீவனையும் உம்முடைய ஜீவனையும்கொண்டு சொல்லுகிறேன் என்றான்; அப்படியே இருவரும் போனார்கள். தீர்க்கதரிசிகளின் புத்திரரில் ஐம்பதுபேர் போய், தூரத்திலே பார்த்துக்கொண்டு நின்றார்கள்; அவர்கள் இருவரும் யோர்தான் கரையிலே நின்றார்கள்."

தீர்க்கதரிசன பணியின் பயிற்சி கூடத்தை, "தீர்க்கதரிசிகளின் புத்திர்" என்ற சொல் குறிப்பிடப்படலாம். ராமாவுக்கு அடுத்த நயோதியில் சாமுயேல் இப்படிப்பட்ட ஒரு அமைப்பைத் துவங்கினதற்குப் பின், (1 சாமுயேல் 19:19, 20) எலியாவால் மீண்டும் ஒழுங்குப்படுத்தப்படும் வரையில் அது பயனின்றி இருந்ததிருக்க வேண்டும். அதற்குப் பின் கில்கால், பெத்தேல் மற்றும் எரிகோவில் இப்படிப்பட்ட அமைப்புகள் ஸ்தாபிக்கப்பட்டது. எலியா தன்னுடைய இடத்தில் எலிசா நியமிக்கப்படுவதை அறிவிப்பதற்காக, எலியா இந்தப் பட்டணங்களுக்குப் பயணத்தை மேற்கொண்டார். இந்தச் செய்திகளைக் கேட்ட தீக்கதரிசிகளின் புத்திரர் எலிசாவிடம் விசாரித்தனர். எல்லா இடங்களிலும் எலியா தன்னோடு விரும்படிக்கு எலிசாவுக்கு அழைப்புக் கொடுத்தார். ஆனால் தீர்க்கதரிசியின் புத்திரர் தங்களை எலியா எடுத்துச் செல்வதற்குப் பின் எலிசாவை பின் தொடர்வதற்காக அவர்கள் தங்கிவிட்டனர்.

இந்தச் சரித்திரத்தின் பொருளை, அதில் உள்ளடக்கப்பட்ட பல்வேறு பாத்திரங்களின் எதிரிணையான அடையாளங்களை காணலாம்.

**எலியா:** அவருடைய காலத்தில் தேவனுடைய தீர்க்கதரிசியாக இருந்த அவர், சபையில் இயேசுவின் சீஷர்களுக்கு ஒரு இணையாக காணப்படுகிறார் (மல்கியா 4:5, 6; மத்தேயு 17:1-13; மாற்கு 6:15; லூக்கா 9:8; 4:6 பார்க்கவும்).

**எலிசா:** எலிசாவைப் பின் தொடர்ந்த அபிஷேகிக்கப்பட்ட தீர்க்கதரிசியாகிய இவர், துவக்கத்தில் திரள்கூட்டத்தாரையும் முடிவில் முற்பிதாக்களையும் அடையாளப்படுத்தக் கூடியவராக இருக்கிறார்.

**தீர்க்கதரிசிகளின் புத்திரர்:** "எலியா சிறுமந்தையையும், எலிசா தேவ ஜனங்களாக இருக்கக்கூடிய திரள்கூட்டத்தாரையும் அடையாளப்படுத்துகிறார்கள். ஓரளவுக்கு திரள்கூட்டத்தாரிடம் சத்தியத்தின்மேல் பக்தி வைராக்கியம் காணப்பட்டாலும், சிறுமந்தையளவு அவர்களிடம் பக்தி வைராக்கியம் காணப்படுவதில் இந்தத் தீர்க்கதரிசிகளின் புத்திரர்கள் இரு வகுப்பாரிடமும் எந்தவிதமான ஆர்வமும் காண்பிப்பதில்லை. இது, சிறுமந்தை மற்றும் திரள்கூட்டத்தார்க்கும் இடையில் பிரிவு ஏற்பட்ட பின்னும் ஒரு பக்தியுள்ள வகுப்பார் மீந்திருப்பதை அடையாளம் காட்டுகிறது. இவர்கள் தேவனுடைய ஜனங்களோடு சம்பந்தப்பட்டிருந்தாலும் எந்த வகுப்பாரிலும் இவர்கள் காணப்படுவதில்லை - எலியா அல்லது எலிசா வகுப்பினர் - இவர்கள் காரியங்களை அறிவிக்கக்கூடியவர்களாகவும், இதற்காக ஒருவேளை நியமிக்கப்பட்டவர்களாகவும் இருக்கலாம் - What Pastor Russell Said, p.666.

சில வரலாற்று விளக்கங்களில், எலியா பயணித்த மூன்று பட்டணங்களும் சில தேதிகளை அடையாளப்படுத்துவதாகக் கூறப்பட்டாலும், பட்டணங்களுக்குத் தேதிகளை முன்னோடியாக எங்கும் பொருத்திக் காட்டப்படுவதில்லை. மாறாக பட்டணங்கள் அடிக்கடி அரசாங்கங்களையும் அல்லது அமைப்புகளையும் அடையாளப்படுத்தும். இந்தப் பட்டணங்கள் வழியாக, எலிசா மற்றும் எலியாவின் பயணம் அதாவது தீர்க்கதரிசிகளின் கல்விக்கூடம் காணப்பட்ட இடங்கள் சபை தன்னுடைய பரலோக வீட்டைச் சென்றடைந்து இறுதியாக உயர்த்தப்படுவதற்கு முன், அவர்கள் கடக்க வேண்டிய வரிசையான அமைப்புகளை இந்தப் பயணம் அடையாளப்படுத்தும். அறுவடையின் சபை கடந்துசென்ற முதல் அமைப்பு, "பெத்தேல்" என்ற பெயரில் தலைமையாக நியமிக்கப்பட்டது ஆர்வமூட்டுவதாக உள்ளது. யோர்தான் நதியைக் கடந்துச் செல்வதை காண்பதற்காக தீர்க்கதரிசியின் புத்திரர்களின் ஐம்பது பேர் எரிகோவிலிருந்து புறப்பட்டுச் சென்றபோதிலும் கில்காலில் உள்ளவர்கள் அங்கு தங்கியிருப்பது ஒரு முக்கியமான குறிப்பாக எடுத்துக்கொள்ளலாம். கில்கால் கிறிஸ்தவ மண்டலத்தை அடையாளப்படுத்துமேயானால் (ஓசியா 9:15-ஐ ஒப்பிட்டுப்பார்க்கவும்). பெத்தேல் பாஸ்டர் ரஸலின் காலத்திலுள்ள சத்தியத்தின் இயக்கத்தையும் பெத்தேலில் மீதியிருந்த தீர்க்கதரிசிகளின் புத்திரர்கள் பல பிரதிஷ்டை செய்யாத சமுதாயத்தில் காணப்படும் உத்தமமான ஜனங்களை அடையாளப்படுத்த வேண்டும்.

## யோர்தானை அடித்தல் - 2:8

"அப்பொழுது எலியா, தன் சால்வையை எடுத்து முறுக்கித் தண்ணீரை அடித்தான்; அது இருபக்கமாகப் பிரிந்தது; அவர்கள் இருவரும் உலர்ந்த தரைவழியாய் அக்கரைக்குப் போனார்கள்."

யோர்தானில் எந்தப் பட்டணமும் இராததினால், இது எந்த அமைப்பையும் அடையாளப்படுத்துவதாகத் தோன்றவில்லை. ஆனால் ஒரு சம்பவத்தை அடையாளப்படுத்த வாய்ப்புண்டு. அதற்கு முன் இஸ்ரயேல் ஜனங்களினால் தண்ணீர்கள் கடக்கப்பட்ட இரண்டு சம்பங்கள் சிவந்த சமுத்திரம் மற்றும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குள் பிரவேசிப்பதற்கு யோர்தானைக் கடந்து செல்லுதல் - இந்தத் தண்ணீர் மரணத் தீர்ப்பை அடையாளப்படுத்தும். மற்றும் அதைக் கடந்து செல்லுதல் புதிய ஜீவனுக்குள் வெற்றிகரமாய் பிரவேசிப்பதை அடையாளப்படுத்தும். இந்தச் சூழ்நிலைகளில் சொல்லப்படும் கருத்து மேற்கூறப்பட்ட வசனப் பகுதிக்கும் பொறுத்தமுள்ளதாய் காணப்படுகிறது.

மற்றொரு புறத்தில் யோர்தானைக் கடந்தப் பின் எலியா மற்றும் எலிசா ஒருமித்து பேசிக்கொண்டே கொஞ்சம் தூரம் நடந்துச் சென்றார்கள். வெளிப்படுத்தல் 7:4 மற்றும் 14:3 வசனங்களில் குறிப்பிட்டபடி சபை வகுப்பார் 144,000 பேர்களாக இருக்கும் பட்சத்தில், இந்த வகுப்பாரும் தங்களுடைய ஓட்டத்தில் பாத்திரவான்களாக நிரூபிக்கப்படுவதற்குச் சோதிக்கப்படுகையில், அந்த ஓட்டத்தை விசுவாசத்தோடு துவங்கக்கூடிய கடைசி நபரின் காலம் வரும். அந்நேரத்திற்குப் பின் ஒருவரும் இந்த அழைப்புக்குள் பிரவேசிப்பதில்லை. அந்தக் குறிப்பிட்ட நேரத்தில் சபை மற்றும் திரள்கூட்டத்தார் ஆதாமின் மரண தீர்ப்பிலிருந்து கடந்து சென்றிருப்பார்கள். ஆயினும் அவர்களின் ஜீவன் இறுதி பரீட்சைக்காகவும் அங்கீகாரம் அல்லது தவறு என்று நிரூபிபப்பதற்காகவும் அவர்கள் ஒருமித்து பேசிக்கொண்டு பயணித்தது நீடித்திருக்கும்.

இந்த வசனம் யோர்தானைக் கடந்துச் செல்வதை மட்டும் விவரிக்காமல் அதைக் கடந்துச் சென்ற விவரத்தையும் விவரிக்கிறது. எலியாவின் சால்வையினால் யோர்தான் அடிக்கப்பட்டபோது தண்ணீர் இரண்டாகப் பிரிந்தது. எலியாவின் சால்வை, அவருடைய தீர்க்கதரிசன வேலையையும் தேவனுடைய நாமத்தில் பேசக்கூடிய அதிகாரத்தையும் குறிப்பிடுகிறது. எலியா தன்னுடைய இடத்தில் எலிசாவை நியமித்ததை, அவருடைய சால்வையை எலிசாவின் தோள்களின்மேல் போட்டு அந்த உண்மையை செயல்முறைப்படுத்தினார் (1 இராஜாக்கள் 19:19). தனது தீர்க்கதரிசன செயல்பாட்டின் மூலம், தனது மரணத்தீர்ப்பை கை மாற்றிவிட்டார் என்பதையே இது குறிக்கிறது - இது இறுதி செய்தியைத் தருகிறது. இதனுடன் இரு பக்கமாக நீர் பிரிந்ததும், ஒரு நிகழ்வுக்குப் பொருத்தமாகவே இருக்கிறது - தெளிவாகப் பிரிக்கப்படவில்லை - சால்வையை முறுக்கி அடித்த அந்த நேரமும், எலியாவை எடுத்துச் செல்லும்படி சூறாவளி உருவாக்கிய சுழல் காற்றும் ஏகமாக நிகழ்ந்திருப்பதைக் குறிக்கிறது.

இஸ்ரயேலர்கள் மற்றும் இந்த இரண்டு தீர்க்கதரிசிகளும் வெவ்வேறு முறை தண்ணீரைக் கடந்துச் செல்லும்போது, அந்தத் தண்ணீர்களை வற்றச் செய்வதற்கு தேவன் பயன்படுத்தின கருவிகளைக்குறித்து காணலாம். (1) சிவந்த சமுத்திரத்தில் மோசே தன்னுடைய கரங்களை விரித்து (அதிகாரத்தின் கோலோடு) (யாத்திராகமம் 14:21, 27). இஸ்ரயேலின் ஜனங்களை முன் செல்லும்படிக் கூறினார் (யாத்திராகமம் 14:15). (2) வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தை அடைவதற்கு முன், இஸ்ரயேலர்கள் உடன்படிக்கைப் பெட்டியை எடுத்துக்கொண்டு புரண்டுஓடும் நதியைக் கடந்துச் சென்றார்கள் (யோசுவா 3:3, 11). (3) முதலில் எலியாவினாலும், அதற்குப் பின் எலிசாவினாலும் ஒரு தீர்க்கதரிசியின் சால்வையைப் பயன்படுத்தி இரண்டுமுறை யோர்தான் பிரிக்கப்பட்டது.

எலியா யோர்தானை ஏன் அடித்தார்? பதில்: கரை சேருவதற்காக. ஆகவே, சபை மற்றும் திரள்கூட்டத்தாரின் விருப்பமானது - அடுத்தக் கரைச் சென்றடைவது - பரலோக இரட்சிப்பு.

### எலியாவின் கேள்வி - 2:9, 10

"அவர்கள் அக்கரைப்பட்ட பின்பு, எலியா எலிசாவை நோக்கி: நான் உன்னைவிட்டு எடுத்துக்கொள்ளப்படுமுன்னே நான் உனக்குச் செய்யவேண்டியது என்ன கேள் என்றான். அதற்கு எலிசா: உம்மிடத்திலுள்ள ஆவியின் வரம் எனக்கு இரட்டிப்பாய்க் கிடைக்கும்படி வேண்டுகிறேன் என்றான். அதற்கு அவன்: அரிதான காரியத்தைக் கேட்டாய்; உன்னைவிட்டு நான் எடுத்துக்கொள்ளப்படுகையில் என்னை நீ கண்டால் உனக்குக் கிடைக்கும்; இல்லாவிட்டால் கிடையாது என்றான்."

கிழக்குக் கரையில், இந்த இரண்டு தீர்க்கதரிசிகளின் மத்தியில் நடந்த சம்பாஷணைகள் சுருக்கமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஒரு கேள்வி மற்றும் அதற்கான பதில். எலிசா இரட்டத்தனையான ஆவிக்காக விண்ணப்பித்தார். எலியா செய்திட்ட எட்டு அற்புதங்களுடன் ஒப்பிடுகையில் எலிசா பதினாறு அற்புதங்கள் செய்திட்டதாக சில வேத வல்லுநர்கள் கருத்தில்

எடுத்துக்கொண்டாலும், அநேகமாக இது இரட்டிப்பான பங்கு என்பதின் உண்மையான அர்த்தமாய் இராது.

"சேஷ்டபுத்திர சுதந்தரமே இரட்டிப்பான பங்கு" (உபாகமம் 21:17). மூல வார்த்தைகளான (pi shenayim) என்பதற்கு இரண்டு பகுதிகள் என்ற பொருளைக் காட்டிலும் இரட்டிப்பான அளவு என்று பொருள்படும் என்று ஆதாம் கிளார்க் குறிப்பிடுகிறார். திரள்கூட்டத்தார் கிறிஸ்துவின் நெருங்கிய சீஷர்களோடு பங்கைப் பெறுவார்கள். "முதற்பேறானவர்களின் சபை" (எபிரெயர் 12:23).

எலிசா விண்ணப்பித்தக் காரியம் அரிதானதென்று எலியா கூறினார். ஆனாலும் எலியா எடுத்துக்கொள்ளப்படும் வரையில் அவரோடு தங்கி அவரைக் காணும்போது எலிசா தான் விரும்பியதைப் பெற்றுக்கொள்ளலாம் என்று எலியா கூறினார். திரள்கூட்டத்தார் தலைப் போறான சபையின் ஒரு பகுதியாக இருக்க விரும்பினாலும் இந்தப் பூமியின் காட்சியிலிருந்து உண்மையான சபை எடுத்துக்கொள்ளும் வரையில் இவர்கள் (திரள்கூட்டம்) விசுவாசமுள்ளவர்களாக அவர்களோடு காணப்பட்டால் மட்டுமே இந்தப் பரிசை அவர்கள் அடைவதற்கான உறுதியைப் பெறுவார்கள் என்று இது குறிப்பிடுகிறது.

### எலியா உயர்த்தப்படுதல் - 2:11, 12

"அவர்கள் பேசிக்கொண்டு நடந்துபோகையில், இதோ, அக்கினி ரதமும் அக்கினிக் குதிரைகளும் அவர்கள் நடுவாக வந்து இருவரையும் பிரித்தது; எலியா சுழல்காற்றிலே பரலோகத்திற்கு ஏறிப்போனான். அதை எலிசா கண்டு: என் தகப்பனே, என் தகப்பனே, இஸ்ரவேலுக்கு இரதமும் குதிரைவீருமாய் இருந்தவரே என்று புலம்பினான்; அவனை அப்புறம் காணாமல், தன் வஸ்திரத்தைப் பிடித்து இரண்டு துண்டாகக் கிழித்தான்."

காட்சிகள் வெளிப்படும்போது இரண்டு முக்கியமான காரியங்கள் அங்குச் செயல்படுவதைக் காணலாம்; அக்கினி ரதம் மற்றும் சுழல் காற்று. அக்கினி ரதமானது எலிசா மற்றும் எலியாவைப் பிரிப்பதற்கான வேலையைச் செய்தது. சுழற்காற்று எலியாவை உயர எடுத்துச் செல்வதற்குப் பயன்பட்டது.

இந்தக் காரணத்தினிமித்தம் எலியா அக்கினி ரதத்திலல்ல, சுழற்காற்றினால் எடுத்துச் செல்லப்பட்டார் என்று பலர் எண்ணுகிறார்கள். ஆயினும் ரதம் பயணத்திற்குப் பயன்படும் ஒரு பொருளாக இருப்பதினால் எலியா, எலிசாவை விட்டுத் தனியே ரதத்திற்குள் ஏறினதினால் ஒருவேளை அந்தப் பிரிவு ஏற்பட்டிருக்க வேண்டும். சகோதரர் ரஸல் இதைக் குறித்து ஒரு அருமையான விளக்கம் கூறுகிறார்; இந்தப் பூமிக்குரிய காட்சியிலிருந்து அக்கினி ரதத்தில் பிரிந்துச் சென்ற எலியாவை, "இந்தக் கடைசி நாட்களில் மீதியிருக்கும் மாம்சத்திலுள்ள சபை பெறக்கூடிய ஆவிக்குரிய மகிமையையும் உன்னதமான நிலையையும் அடையாளப்படுத்துகிறேன்" – The Time Is At Hand, p. 260.

மேலும் அதே பத்தியில், "சுழற் காற்று உபத்திரவங்களுக்கு அடையாளம்" என்று அவர் குறிப்பிடுகிறார். அக்கினி ரதம் உபத்திரவத்திலிருந்து வெற்றிகரமாக ஒரு மகிமைக்குச் செல்வதை அடையாளப்படுத்தக்கூடிய அதே பயன்பாட்டை 2 இராஜாக்கள் 6:17-ஆம் வசனத்தில் காணப்படும் இரதங்களில் நாம் காணலாம். அதில், சீரியா படைகளால் தோத்தான் பட்டணம் சுற்றி வளைக்கப்பட்டபோது, 2 இராஜாக்கள் 6:13, 14-ஆம் வசனத்திலும் காணப்படுகிறது.

தூதர்களின் ஊழியத்தின் வழியாகக் கொடுக்கப்படும் பாதுகாப்பை இது காட்டுகிறது. சங்கீதம் 68:17-ஆம் வசனத்தில் இதைக்குறித்துத் தெளிவாக வாசிக்கலாம். "தேவனுடைய இரதங்கள் பதினாயிரங்களும், ஆயிரமாயிரங்களுமாயிருக்கிறது; ஆண்டவர் பரிசுத்த ஸ்தலமான சீனாயிலிருந்தவண்ணமாய் அவைகளுக்குள் இருக்கிறார்." இந்த வாக்குத்தத்தத்தின்

நிறைவேற்றுதலை சங்கீதம் 34:7-இல் காணலாம்—"கர்த்தருடைய தூதன் அவருக்குப் பயந்தவர்களைச் சூழப் பாளயமிறங்கி அவர்களை விடுவிக்கிறார்."

## எலிசா யோர்தானை அடித்தல் - 2:13, 14

"பின்பு அவன் எலியாவின்மேலிருந்து கீழே விழுந்த சால்வையை எடுத்துத் திரும்பிப்போய், யோர்தானின் கரையிலே நின்று, எலியாவின்மேலிருந்து கீழே விழுந்த சால்வையைப் பிடித்து: எலியாவின் தேவனாகிய கர்த்தர் எங்கே என்று சொல்லித் தண்ணீரை அடித்தான்; தண்ணீரை அடித்தவுடனே அது இருபக்கமாகப் பிரிந்ததினால் எலிசா இக்கரைப்பட்டான்."

எலியா பரலோகத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டபோது, அவருடைய சால்வை கீழே விழுந்தது. இப்போது எலிசா தன்னுடைய தீர்க்கதரிசன பணியைப் பயன்படுத்த காலம் வந்தது. யோர்தானின் கிழக்குக் கரையிலிருந்து எலிசாவின் புறப்படுதல் திரள்கூட்டம் மரணத்துக்குள் பிரவேசிப்பதை அடையாளப்படுத்தும். எலியா அறிவித்த சத்தியத்தின் செய்தியைத் தொடர்ந்து இவர்கள் அறிவிக்கலாம். எலிசா யோர்தானைக் கடந்து மேற்கு கரை ஏறுவது, மரணத்திலிருந்து எழும்பும் முற்பிதாக்களை எலிசா அடையாளப்படுத்துகிறார். இராஜ்யத்தில் முற்பிதாக்கள் செய்யும் பணியை இங்கு எலிசாவின் ஊழியம் அடையாளப்படுத்துகிறது.

இந்தச் செய்தியின் விவரம் நமக்குக் கொடுக்கப்படாவிட்டாலும் உன்னதப்பாட்டில் இதைக்குறித்த ஒரு குறிப்பு காணப்படுகிறது. குற்றவாளியென்று முழுமையாகத் தீர்க்கப்படாத தைரியமுள்ள ஒரு ஸ்திரீ, இறுதியாக திரள்கூட்டத்தாரைப்போல தன்னுடைய ஆண்டவரை தேடுவதற்கு எழும்பினாள். அவள் தேடும்போது எருசலேமின் குமாரத்திகளை அவள் சந்தித்தாள். (இவர்கள் மாம்ச இஸ்ரயேலரின் சந்ததி என கருதப்படுகிறார்கள்). அவர்களிடம் தன்னுடைய ஆண்டவரைப் பற்றி ஒரு அழகான வர்ணனையில் அவள் கூறுவதை உன்னதப்பாட்டு 5:10-16 வசனங்களில் காணலாம். இதினிமித்தமாக எருசலேமின் குமாரத்திகள் நேசரைத் தேடுவதில் இவளோடு இணைந்தனர். "யூதர்கள் இப்பொழுது கிறிஸ்துதவர்களாக மாறிவிடுவார்கள் என்பது நம்முடைய எதிர்பார்ப்பு இல்லை. அவர்கள் பாலஸ்தீனாவுக்குத் திரும்பின பின் ஜெபம் மற்றும் விண்ணப்பத்தின் ஆவி அவர்கள்மேல் பொழியப்பட்டு, அவர்கள் குத்தினவர்களை நோக்கி புலம்பும்போது அவர்களுக்கென்று கொடுக்கப்பட்டுள்ள மகிமையான வாக்குத்தத்தங்களை மையப்படுத்தும் பாலஸ்தீனாவை இவர்கள் கண்ணோக்கும்போது, இவர்கள் கிறிஸ்தவர்களாக மாறுவார்கள். உபத்திரவத்தின் காலத்தில் இயேசுவை மேசியா என்று அடையாளப்படுத்தக்கூடிய கனமும் சிறப்புரிமையும் திரள்கூட்டம் பெற்றிருப்பார் என்று வசனங்கள் காட்டுவதாகத் தோன்றுகிறது." R4728 என்று பாஸ்டர் ரஸல் இந்த வசனத்தைக்குறித்து விளக்கம் எழுதியுள்ளார்.

## எலியாவைத் தேடுதல் - 2:15-18

"எரிகோவில் பார்த்துக்கொண்டு நின்ற தீர்க்கதரிசிகளின் புத்திரர் அவனைக் கண்டவுடனே, எலியாவின் ஆவி எலிசாவின்மேல் இறங்கியிருக்கிறது என்று சொல்லி, அவனுக்கு எதிர்கொண்டுபோய்த் தரைமட்டும் குனிந்து அவனை வணங்கி: இதோ, உமது அடியாரோடே ஐம்பது பலவான்கள் இருக்கிறார்கள்; அவர்கள் போய் உம்முடைய எஜமானைத் தேடும்படி உத்தரவுகொடும்; ஒருவேளை கர்த்தருடைய ஆவியானவர் அவரை எடுத்து, பர்வதங்களில் ஒன்றின்மேலாகிலும், பள்ளத்தாக்குகளில் ஒன்றிலாகிலும் கொண்டுபோய் வைத்திருப்பார் என்றார்கள். அதற்கு அவன்: அவர்களை அனுப்பவேண்டாம் என்றான். அவன் சலித்துப்போகுமட்டும் அவர்கள் அவனை அலட்டிக்கொண்டிருந்தபடியால் அனுப்புங்கள் என்றான்; அப்படியே ஐம்பதுபேரை அனுப்பினார்கள்; அவர்கள் மூன்றுநாள் அவனைத் தேடியும் காணாமல், எரிகோவிலிருந்த அவனிடத்திற்குத் திரும்பிவந்தபோது, அவன் இவர்களைப் பார்த்து: போகவேண்டாம் என்று நான் உங்களுக்குச் சொல்லவில்லையா என்றான்."

எலிசா தன்னுடைய பாதுகாப்பான பயணத்திற்காக மட்டுமல்ல, அவரைக் காணக்கூடிய தீர்க்கதரிசியின் புத்திரர்கள், இவர் எலியாவின் அதிகாரத்தைப் பெற்றார் என்பதை உணரும்படியாக

எலிசா யோர்தானை அடித்தார். அவர்களுடைய குருவின் சால்வை எலிசாவின் தோள்களின்மேல் கண்ட தீர்க்கதரிசியின் புத்திரர், சந்தேகத்திற்கு இடமின்று இதை நம்பியிருக்க வேண்டும். அதற்கும் மேலாக எலிசா சால்வையை முறுக்கி அடித்தபோது யோர்தான் பிளந்தது.

எலியா உண்மையில் பரலோகம் சென்றார் என்பதை நம்பாமல் ஒரு சூறாவளி காற்றினால் உயர எடுத்துக்கொள்ளப்பட்டு அருகாமையில் அவர் எங்கேயாவது கிடக்க வேண்டுமென்று நம்பினதை தீர்க்கதரிசியின் புத்திரர்கள் எலியாவின் சரீரத்தைத் தேடும்படியான விருப்பம் காட்டுகிறது. எலிசாவின் எதிர்ப்புகளை மீறி அவர்களின் தேடுதல் பயனளிக்கவில்லை.

19-24 வரையிலுள்ள வசனங்கள் இரண்டு சம்பவங்களைக்குறித்துப் பேசுகிறது; புது தோண்டியிலுள்ள உப்பினால், கெட்ட தண்ணீர் ஆரோக்கியமடைந்தது. (இந்தப் பூமிக்கு உப்பாக இருப்பவர்கள் சத்தியத்தைச் செயல்படுத்தி உலகமான தண்ணீர்களைச் சுத்திகரிப்பதுபோல) மற்றும் எலிசாவைப் பரியாசம் செய்த நாற்பத்திரண்டு பிள்ளைகள் (நாற்பத்திரண்டு மாதங்கள் ஆட்சி செய்யும் ஆவிக்குரிய வளர்ச்சியற்ற கிறிஸ்தவ மண்டலம், முற்பிதாக்களின் அதிகாரத்தைப் பரியாசம் செய்யும்).

**எலிசா முன்னேறுவது - 2:25**

"அவன் அவ்விடத்தைவிட்டுக் கர்மேல் பர்வதத்திற்குப்போய், அங்கேயிருந்து சமாரியாவுக்குத் திரும்பினான்."

தீர்க்கதரிசிகளின் இரண்டு பள்ளிகளை மறுபடியும் சந்தித்தப் பின், எலிசா கர்மேல் பர்வதத்திற்கும் அதற்குப் பின் இஸ்ரயேலின் தலைநகரமாகிய வடமேற்கு சமாரியாவுக்கும் சென்றார். எலியா பாகாலின் தீர்க்கதரிசிகளிடம் சவால்விட்டு, அந்நிய தெய்வங்களின் வல்லமையைக் காட்டிலும் யேகோவா தேவனின் வல்லமை மிகவும் ஆற்றல் மிக்கது என்பதைச் செயல் பூர்வமாக நிரூபித்த இடம் - கர்மேல் பர்வதம். இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வை மனதில் கொண்டவராய் புதிதாய் அபிஷேகம் செய்யப்பட்ட தீர்க்கதரிசி, தலைநகர் முழுவதையும் வலம் வருகிறார். இவரது பணிகள் எலியாவின் பணிகளைவிட மாறுபட்ட ஒன்றாக இருக்கிறது. எலியா ஆகாபின் தேவனற்ற இராஜ்யத்தையும், உம்ரியின் வீட்டாரையும், அதில் நிகழ்ந்த ஊழலையும் தீவிரமாகக் கண்டித்தார். ஆனால் எலிசாவோ இஸ்ரயேலின் அடுத்த மூன்று இராஜாக்களுக்கு நம்பிக்கையான ஆலோசகராக இருந்தார்.

எலியாவை எடுத்துக்கொண்டு அவருடைய ஸ்தானத்தில் எலிசாவை நியமிக்கக்கூடிய காரியத்தில், இந்த உலகத்தின் இராஜ்யங்களுக்குப் பதிலாக நம்முடைய ஆண்டவராம் இயேசு கிறிஸ்துவின் இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதின் பல விவரங்களைக் காணலாம்.

---